Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஜனவரி 27 - பெப்ரவரி 02, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 896



## கப்பல் ஓட்டும் புலிகள் கடலில் போராட்டம்




## வேட்புமனுத் தாக்கல் கூட்டுக்களும் வேட்டுக்களும்

## வெள்ளம் தந்த சோதனை

## மீட்சிப் பணிகளில் வேதனை

# ஆன்மீகம்

## முத்திக்குரிய முதல் வழி



எவரும் செய்யக் கூடிய ஆரம்ப முயற்சி இதுவென்பர். எதற்கும் தூய தெய்வபக்தியும் இறையச்சமும் துணை நிற்க வேண்டும். அவை நம்மை வழி-பிழையாது நடத்தும். முன்னோர் காட்டிய வழி நிற்போம் உரையையும் கருத்திற்கொள்வது அவசியம். அன்பின் துணையோடு உடம்பினாற் செய்யும் இறை பணி எல்லாம் சரியை எனப்படும். அவற்றிலே சில, சிவாலயத்தை அலகிடல், மெழுகுதல், கழுவுதல், பூஞ்சோலை அமைத்தல், பூ எடுத்துக் கொடுத்தல், மாலை கட்டுதல், பூசைத்திரவியம் கொடுத்தல்,உபகரணங்களைத் துலக்கிச் சுத்தம் செய்தல், விளக்கிடல், தீவர்த்தி, குடைகொடி, வாகனம் ஏந்துதல் முதலிய னவாக எண்ணில்லாதன. இவற்றைச் செய்பவர்களுக்கு வேண்டிய உபகரணம் கொடுத்தல், அவர்களைச் சிவனடியாராக வழிபடல், அடியார்க்கு வேண்டுவன தருதல், அன்னதானம் முதலிய செய்தல் என்பன. இத்தொண்டுகளைச் செய்தவரும் வற்புறுத்தியவரும் திருநாவுக்கரசு நாயனார் அப்பூதியடிகள், திருக்குறிப்புத் தொண் நாயனார், அதிபத்தநாயனார், கண்ணப்பநாயனார், மூர்த்திநாயனார், திரு-நாளைப் போவார் நாயனார் எனப்பலர் இவர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய அப்பாடல்களிலே போற்றப்பெற்றவர்கள். முத்தியடைந்தவர்கள், இவர்களேயன்றி இன்னும் பலர் இத்தொண்டுகளில் நின்று ஏற்றம் பெறுகின்றனர்.

அமுதன்-திருகோணலை

## பணிவாழ்வின் விலை

நாம் பணிக்காகக் கொடுக்க வேண்டிய விலை மிக அதி-கம். இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் கசப்பான பக்கங்களில் ஒன்று அவரது உறவினர்களே அவரது பணிக்குத் தடையாக இருந்தது. இயேசு மதி மயங்கிவிட்டார் என்று மக்கள் பேசிக்கொண்டதாக அறிய வந்தனர் அவர்கள். எனவே, குடும்ப நற்பெயர் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவரைப் பிடித்துக்கொண்டுவரச் சென்றார்கள் என்னும் செய்தி மாற்கு நற்செய்தியில் மட்டும்தான் காணக்கிடக்கிறது. பின்நாளைய நற்செய்தியாளர்கள் இச்செய்தியைப் பரப்ப விரும்பவில்லை. எனவே, அது நீக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், ஓர் இறைவாக்கினருக்கேயுரிய இலக்கணத்தின்படி, இறைவாக்கினருக்குத் தம் சொந்த ஊரிலும், சுற்றத்தினரிடையேயும் மதிப்பில்லை என்பதற்கேற்ப, இயேசுவும் தம் ஊரிலும், சுற்றத்திலும் அவநம்பிக்கையையும், அவமானத்தையும் சந்தித்தார். இருப்பினும், அவர் தன் பணியைக் கைவிட்டுவிடவில்லை. யதார்த்த மனநிலை-லயுடன் போற்றுதலையும், தூற்றுதலையும் சந்தித்தார். நாமும் இயன்றவரை எம்பணியைச் செவ்வனே செய்ய முற்படுவோம்.

அ. மரியா, ஆனைக்கோட்டை

## இஸ்லாமிய வாழ்வு இன்பம் தரும்

இஸ்லாமிய போதனைகள் ஒரு மனிதனின் வையக வாழ்வுக்கு எதுவாகும். எது ஆகாது? எதனை எந்தளவுக்கு அனுமதிக்கலாம், அனுமதிக்க முடியாது? என்பதை எல்லாம் தெட்டத் தெளிவாக விளக்குகிறது. அலி இப்னு அபீதாலிப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். நீ சந்தேகம் ஏற்படுத்துபவைகளை விட்டுவிட்டு சந்தேகமில்லாதவற்றை எடுத்துக்கொள். நிச்சயமாக உண்மை என்பது மன அமைதியையும், பொய் என்பது மனக்குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்று. ஆதாரம்:அத்திர்மீதி

ஒரு மனிதன் ஒரு செயலைச் செய்ய முனையும் போது தனது உள்ளத்தில் ஒருவித உறுத்தலை உணர்ந்தால் அந்தச் செயல் தொடர்பில் அவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உள்ளம் எதில் திருப்தி காண்கிறதோ அவ்விடயத்தில் அவன் அமைதி அடையலாம். ஆகவே நாம் உள்ளத்தோடு முரண்பட்டுக் கொள்ளாமல் உண்மையின் பக்கம் திரும்பி அதில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்போது இஸ்லாமிய வாழ்வு இன்பம் தரும்.

எம். சி. கலீல்,
கல்முனை-05

# உங்கள் பக்கம்

## சட்ட விரோதங்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்

மழை விட்டும் தூவானம் விடாதது போன்று போர் முடிவுக்கு வந்தும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற கொலை, கொள்ளை போன்ற செய்திகள் குடாநாட்டு மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளது. போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் ஒரு சுமூகமான வாழ்வை வாழலாம் என்ற எதிர்பார்ப்போடு இருந்த மக்களுக்கு இவ்வாறான செய்திகள் திகைப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. மீண்டும் ஊரடங்கு, சுற்றிவளைப்புத் தேடுதல் சோதனைகள் போன்ற அசௌகரியங்கள் தொடர்கதையாகத்தான் இருக்கப்போகின்றதோ என்ற ஆதங்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான அசம்பாவிதங்கள் உலகின் அனைத்துப் பாகங்களிலும் நடைபெற்று வருவதாக இவற்றை நியாயப்படுத்தும் வகையிலான, அல்லது மக்களுக்கு ஆறுதல் கூறும் வகையிலான கருத்துக்கள் சிலரால் முன்வைக்கப்பட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனினும் கடந்த முப்பது வருட ஆயுதக் கலாசாரத்துக்குள் சிக்குப்பட்டு, திண்டாடிய குறித்த பிரதேசத்தில் இவ்வாறான சட்டவிரோதச் செயல்கள் கட்டுப்படுத்தப்படாமை தொடருமாயின் மோசமான விளைவு-களையே ஏற்படுத்தும் என்பதையே உரியவர்கள் புரிந்துகொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அனைத்து மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

க. நிவேதன், யாழ்ப்பாணம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


# கவிதைப் போட்டி இல.896



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 09.02.2011

கவிதைப் போட்டி இல. 896
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பொல்லாத காலம்

பொட்டலம் கமக்கட்டிலும்
பொற்தோடு காதினிலும்
கையதனில் காசும்
கொண்டு
பைய அமர்ந்திருக்கும்
பாட்டி பொல்லாத காலம்
கள்ளர் பயம்
கொல்லவும் பார்ப்பர்
கொஞ்சம் அவதானம்.

மயில். வேலாயுதம்பிள்ளை,
புளியம்பொக்கணை.

### வாழ்வு முடிந்தது!

இடிந்ததொரு மனையிடத்தில் எடுத்தது
தொகை பார்த்து
படிந்ததொரு துயர் முகமாய் பதைக்குமொரு
வடிந்ததொரு கண்ணீரும்
வற்றியதன் வகையதவோ
நிலையதுவோ முடிந்ததினி
வாழ்வென்று முதுமையுறு துயரதுவோ!

மு. பாலசுப்பிரமணியம்,
நல்லூர்.

### தேடுதல்

வயோதிபத் தாயே
கொடிய போரால்
பிணமாய்ப் போன
உன் இரத்த
உறவுகளையா
இங்கே
தேடுகின்றாய்?

சு. ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### நோட்டு

போட்டது வீட்டுக்கு
வோட்டு!
அதனால் இழந்தது
குடியிருந்த வீடு!
இறுதியில் கிடைத்துது
கூடார வாழ்வு
அங்கு மூதாட்டிக்கு
கிடைத்தது
இருபது ரூபா
நோட்டு.

எஸ். கமலினி,
அராலி.

### பொக்கிஷங்கள்

இடிந்தவீட்டில் பொறுக்கியது
இலாபம்!-என
பொல்லூண்டும் வயதினிலே
பொறுக்குகிறார் மூதாட்டி - தன்
பொக்கிஷங்கள் சிக்கும் என்ற
எதிர்பார்ப்புடன்-ஆனால்
பெற்றது நோட்டு!

எஸ். மது,
வெள்வத்தை

### வீணான சேமிப்பு

பெற்ற பிள்ளையைக் கூலிக்கு
அனுப்பிச் சிறுகச் சிறுக
சேமித்ததைக் கூட
அனுமதிக்கவில்லை கொடிய போர்
ஊராய் திரிந்து -இன்று
மீள்குடியேற்றமாய் மீண்டும்
வந்துவிட்டோம்.

சி. வரதன்,
கண்டி.

## கவிதைப் போட்டி இல.894

### பாராட்டுக்குரியது



### தவிப்பு

நான் கையில் வைத்திருப்பது
தெரிகிறதல்லவா
பிள்ளைகளைக் கூலிக்கு
அனுப்பியும்
நான் பலகாரம் விற்று
சேமித்த பணத்தை-எடுத்துச்
செல்லக் கூட விடவில்லையே
இந்தக்கொடியபோர்!
ஊரூராய்த் திரிந்து இன்று
மீள்குடியேற்றம் என்று
எம் ஊருக்கு வந்து
கூலிவேலையால் கிடைத்த
பணத்தில் சேமித்த உண்டியல்
இருந்த இடத்தில் இதுமட்டும்
இருந்து எடுத்தேன்- ஆனால்
உழைத்த என் பிள்ளை
இன்று உயிரோடு
இல்லையே!
நான் என் செய்வேன்!!!

ராணிமகள் றெசிந்தா,
சங்கத்தார்வயல்.






# வாசகர் சாலை

### வரவேற்பு

மக்களின் மனங்களில் அழியா இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் முரசே! நீ வாரந்தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பாராட்டுக்குரியவை. கடந்த வாரம் 895 முரசில் வெளிவந்த மரணம் ஒரு ஐக்கிய நிகழ்வு என்ற தலைப்பில் வெளி வந்த கட்டுரை மரணம் இன, மதங்களைக் கடந்த ஒரு நிகழ்வாகவே கருதப்பட்டதென்பதே வரவேற்கத்தக்கது.

வி. குவேதினி, திருகோணமலை

### இன்பத்துக்கு இன்பம்

உனது நீண்ட வாசகர்களில் நானும் ஒருவன். பலதரப்பட்ட விடயங்களை நாசூக்காக கையாள்வதில் உனக்கு நிகர் நீயே. முரசில் வெளிவரும் பாப்பா முரசு சிறுவர்களுக்கான தகவல்களை நிறையவே அள்ளி வழங்குகின்றாய். தெரியாத பல தகவல்களை சிறுவர்கள் படித்துப் பயனடையக் கூடியதாக உள்ளது. இதுபோன்ற இன்னும் அரிய பல தகவல்களை உன்னிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். புதிய தொடரான தீண்டும் இன்பம் எம்மை இன்பத்துள் ஆழ்த்துகின்றது.

நிர்மல்-வவுனியா.

### அன்புடன் முரசிற்கு!

நாடெல்லாம் ஓடி நற்பணி
செய்கின்றாய்
தேட வைத்து விட்டு-நீ
தூர ஏன் நிற்கின்றாய்
வாழ யான் ஏங்குகின்றேன்
வந்து மனம் குளிர்ந்திடுவாய்
வாடியடி சந்திக்கும்
வாரமொரு முறை நீ வந்து
பணி செய்திடவே
நாடி நான் நிற்கின்றேன்
நண்பா ஈங்கு வந்திடுவாய்!!!

பூநகர்
சாந்தன்

# உண்மைகளைச் சொல்வதற்கு ஊடகங்கள் தயங்குவது ஏன்?

## வாரணம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் - சந்திரகுமார். எம்.பி. கேள்வி.

நீண்ட போருக்குப் பின்னர், அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த அமைதிச் சூழலில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்துவதில் எமது சூழலில் உள்ள சில ஊடகங்கள் பின்னிற்கின்றன என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாரணம் எப்.எம். வானொலி நிறுவனத்தின் வாரணம் மாத சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் நடக்கும் சில அசம்பாவிதங்களையும் வன்முறைச் சம்பவங்களையும் பெரிதாக்கி அவற்றை சில ஊடகங்கள் விளம்பரப் படுத்துகின்றன. இவற்றின் பின்னால் உள்நோக்க அரசியல் இருக்கிறது. மக்களை ஒருவித பயப்பிராந்தியத்திற்குள் வைத்து அவர்களைக் குழப்பி, கலவரமூட்டி அரசியல் ஆதாயங்களைத் தேடுவதற்கு சில அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு ஊடகங்களும் துணை போகின்றன.

யாழ்ப்பாணத்தில் சிறந்த ஊடகப் பாரம்பரியம் ஒன்று கட்டிவளர்க்கப்பட வேண்டும். ஆனால் வதந்திகளைச் செய்திகளாக்கும் மரபில் இருந்து கொண்டு சிறந்த ஊடகப் பண்பாட்டை உருவாக்கவும் முடியாது. அதுபற்றி சிந்திக்கவும் முடியாது. ஊடகங்களுக்கு என இருக்கவேண்டிய அடிப்படை விதிகளையும் பொறுப்புணர்வையும் தார்மீகப் பின்னணியையும் எமது ஊடகங்கள் இழக்கக் கூடாது. ஜனநாயக அடிப்படைகளை ஊடகங்கள் இழந்துவிட்டு பிறரிடம் அதை எதிர்பார்க்கமுடியாது.

அண்மையில் யாழ்ப்பாண நிலவரம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நானும் அங்கே உரையாற்றியிருந்தோம். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றியிருந்தனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பெரும்பாலான பத்திரிகைகள் பொது உரைகளை வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்து விட்டன. மக்களுக்கு உண்மைகளைச் சொல்வதற்கும் பாரபட்சமில்லாமல் நடப்பதற்கும் ஏன் இந்த ஊடகங்கள் தயங்குகின்றன. மீண்டும் ஒரு இருண்ட காலத்திற்கு மக்களைத் தள்ளிவிட்டு அந்த அவலங்களில் இலாபத்தைத் தேட இவை பயிற்சியளிக்கின்றனவா? இந்த நிலையை நிச்சயம் மக்கள் மாற்ற வேண்டும். மக்கள் உண்மைகளைத் தேடி அறியவேண்டும். பொய்யை விலக்க வேண்டும். பொய்யும் வதந்தியும் ஆபத்தானது என்பதை மக்கள் உணரவேண்டும்.

யாழ்ப்பாணத்தைவிட வேறு இடங்களில் வதந்தி குறைவு. அங்கே பிரச்சினையும் குறைவு. பதற்றமும் குறைவு. இங்குதான் அதிகளவு பத்திரிகைகள் வெளிவருகின்றன. அதிகளவு வதந்திகளும் உலாவுகின்றன. வதந்திகளை உருவாக்குவது கிரிமினல் குற்றத்திற்கு ஒப்பான



செயலாகும். அது ஒரு சமூகத்தை சீரழித்துவிடும் என்றார் இந்த நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் திரு அ.வரதராஜப்பெருமாள். மூத்த ஊடகவியலாளர் திரு ஐயா சச்சிதானந்தம், வாரணம் ஊடக நிறுவனப் பணிப்பாளர் திரு குணசீலன், தினமுரசு பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளர் திரு ஸ்ராலின் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# 100 பேரூந்துகள் இறக்குமதி

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இந்தியாவிலிருந்து புதிதாக 100 பேரூந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் ஆலோசனையின் பிரகாரமே இந்த பேரூந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்துசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனை யின் கீழ் இந்தியாவிலிருந்து 100 பேரூந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்தப் பேரூந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பேரூந்து ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாயில் 40 இலட்சமாகும். இதற்கான செலவினை இலங்கை போக்குவரத்துச் சபை ஈடுசெய்யும் என்றும் இந்தப் பேரூந்துகள் யாவும் நீண்ட தூரப் சேவைகளில் ஈடுபடுத்தப்படும் என்றும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# புலனாய்வு அதிகாரிகள் பாதுகாப்பு கடமையில்

யாழ். குடா நாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துவந்த குற்றச் செயல்களை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில் பல விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸார் மற்றும் முப்படையினர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். மக்களின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட புலனாய்வு அதிகாரி களும் யாழ். பொலிஸ் நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது

தற்போது யாழ். குடாநாட்டில் அமைதிச்சூழல் ஏற்பட்டுள்ள அதேவேளை மக்கள் இரவிலும் அச்சமின்றி நடமாடக்கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றச்செயல்கள் அதிகமாக இடம்பெற்று வந்த பிரதேசங்களிலே இவ் விசேட புலனாய்வு அதிகாரி கள் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்ற செயல்களில் ஈடுபட்டோர் மற்றும் அவற்றின் பின்னணியில் இருந்தோரை புலனாய்வு தகவல்கள் மூலம் விரைவில் கண்டறியும் அதேவேளை நிலைமை முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையர் இருவர் சென்னையில் கைது

இந்திய விமான நிலையத்தில் வைத்து இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளி நாட்டிற்கு செல்ல முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் சிலர் சென்னையில் இருந்து ஜேர்மனிக்கு செல்லவிருந்த விமானத்தைச் சோதனையிட்ட போது இவர்கள் போலியான கடவுச்சீட்டு மூலம் ஜேர்மன் பயணிக்க இருந்தமை தெரிய வந்தது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பைச் சேர்ந்த மகேஸ்வரன் (வயது 38) மற்றைய நபர் வவுனியாவை சேர்ந்த சுதேஷகரன் (வயது 23) என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் நடத்தப்பட்ட விசாரணையில் இவர்கள் இருவரும் இலங்கையில் இருந்து ஜேர்மனி செல்ல முடியாததால் சென்னை வந்ததாகவும் இங்குள்ள முகவர்கள் மூலம் போலி ஆவணம் தயாரித்து ஜேர்மனி செல்ல முயன்றதாகவும் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய கடற்படைக் கப்பல் இலங்கை வருகை

அவுஸ்திரேலிய கடற்படைக்குச் சொந்தமான 'H.M.A.S மெல்பொன்' என்ற கப்பல் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கடந்த ஜனவரி 22ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலை





இலங்கைக் கடற்படையினர் வைபவபூர்வமாக வரவேற்றுள்ளனர்.

அவுஸ்திரேலிய றோயல் கடற்படையினரின் 'H.M.A.S மெல்பொன்' என்ற இக் கப்பல் ஏவுகணைகளை பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட யுத்தக்கப்பல் ஆகும்.

வான் பாதுகாப்பு மற்றும் கடலுக்கடியிலான யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஏற்ற சகல வசதிகளும் இக் கப்பலில் காணப்படுவதோடு, கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடிய வசதிகளும் இந்தக் கப்பலில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

138.1 மீற்றர் நீளமும், 4200 தொன் எடையையும் கொண்ட இக்கப்பலை அவுஸ்திரேலிய கடற்படை கட்டளைத்தளபதி மைக்கல் ஜோன் ஹரிஷ் தலைமையில் 28 அதிகாரிகள் மற்றும் 191 கப்பலோட்டிகளுடனும் இக்கப்பல் இயங்கி வருகின்றது. இரு நாட்டு கடற்படையினருக்கும் இடையே நல்லெண்ண உறவுகளை வளர்க்கும் நோக்கில் பல நிகழ்வுகள் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

27ஆம் திகதி இக் கப்பல் அவுஸ்திரேலியா நோக்கி தனது பயணத்தை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடியோ விற்ற நபர் கைது

ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை இரகசியமாக விற்பனை செய்து வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் தெல்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெல்தெனிய பொலிஸ் நிலையத்துக்கு முன் உள்ள சுற்றுவட்டாரத்தில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளார் என தெரிவிக்கப் பட்டுள்ளது. கைது செய்யப் பட்டவர் தனது கணினியில் ஆபாச வீடியோக்களையும், புகைப்படங்களையும் தரவி றக்கம் செய்து சேமித்து வைத்து வாடிக்கையாளர்கள் கேட்கும் போது அதனை வழங்கி வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**தினமுரசு வாரமலர்**

த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com


# முரசம்

## வருவார்கள் வேட்பாளர்கள்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களைக் கையளிக்கும் இறுதி நாள் இன்று. ஒவ்வொரு தேர்தலுமே ஒப்பீட்டளவில் முக்கியமான அரசியல் சூழலிலேயே வந்துவிடுகின்றன. அது போலவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலும் முக்கியமானது.

பிரதான தேசியக்கட்சிகள், எல்லா அதிகாரங்களையும் தாமே விழுங்கிவிட வேண்டும் என்றே காய்நகர்த்தி வருகின்றன. ஏனைய கட்சிகள் என்னதான் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்து பயணித்தாலும், தத்தமது பிராந்திய சமூக தளங்களிலேயே தமது கவனத்தை நிலைநிறுத்திச் செயற்படுகின்றன. இதில் தமிழ், முஸ்லிம் என எந்தக் கட்சிக்கும் விதிவிலக்கு இல்லை. இதற்கிடையே சிறுபான்மை கட்சிகளின் அடித்தளத்தில் புதிய இறக்குமதிகளைச் செய்து ஒரு வகைத் தளம்பல் நிலையை உருவாக்கும் வேலைகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த சதிக்குப் பின்பலமாக பணமும், மனிதவலுவும் தேவைக்கு அதிகமாகச் செலவு செய்யப்படவுள்ளதாக வரும் செய்திகளையும் புறக்கணித்துவிட முடியாது. சுருக்கமாகச் சொன்னால் தமிழ்பேசும் சமூகங்கள் ஸ்திரமான அரசியல்பாதை ஒன்றில் பயணிக்க இடமளித்துவிடக்கூடாது என்ற போக்கை அவதானிக்க முடிகிறது. தேசிய அரசியல் சிந்தனை இவ்வாறு இருக்க மறுபுறத்தில், சந்தேகம், வெறுப்பு, குழிபறிப்பு, காட்டிக்கொடுப்பு என்ற கிடங்குக்குள் தள்ளப்பட்டுள்ள பல கட்சிகள் மக்களுக்கு எந்த முகத்தைக் காட்டுவது, தமது அரசியல் எதிரிகளுக்கு எந்த முகத்தைக் காட்டுவது என்ற குழப்பத்தில் நிற்கின்றனர்.

ஒரு சில கட்சிகள் தாம் எதைச் சொன்னோமோ, எதை ஏற்றுக்கொண்டோமோ அதுதான் தமது இப்போதைய நிலைப்பாடு என்றும் கூறுகின்றன. இதற்கிடையே ஆயுளுக்கும் தாம் எதிர்ப்பு அரசியல்தான் செய்யவுள்ளோம் என்று முடிவு செய்தவர்களுக்கு இதில் பிரச்சினையில்லை.

இதில் அரசியலிலும் சிரமமில்லை. மக்களுக்கும் ஏதாவது ஒரு கயிற்றை வாயில் திணித்துவிட்டால் புல்லரிப்பு மிகுந்த மக்கள் அதை விழுங்கிக்கொண்டிருப்பார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தேர்தலில் சுறுசுறுப்பாக இறங்கியுள்ளனர். இதிலும், தமிழ் மக்களின அரசியல் தளத்தின் நிலைமை இதுதான். மக்கள் நிர்வாகமொன்றை பொறுப்பெடுத்து நடத்துவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. உதாரணத்துக்கு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மாநகரசபை களிலும், வவுனியா நகரசபையையும் எடுத்துக்கொண்டால் மாநகரசபைகள் இரண்டும் இதுநாள்வரை தமது சேவையை செய்து கொண்டிருக்கின்றது. வவுனியா நகரசபை முடங்கிப்போய் இருக்கின்றது. ஏற்கனவே திருகோணமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வந்த சபைகளின் நிலைமையும் இதுதான். சாதாரண உள்ளூராட்சி சபைகளையே திறம்பட நடத்தமுடியாத சூழலைக் காணமுடிகிறது. மக்கள் மன்றங்களைப் பொறுப்பெடுப்பதில் பல சிக்கல் உண்டு. ஆகவே எவருக்கும் பொறுப்புச் சொல்லத் தேவையில்லாத எதிர்ப்பு அரசியல் எவ்வளவோ மேன்மையானது.

தமிழ் மக்கள் மீண்டும் சிந்திக்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. எது சரியோ அதைத் தீர்மானிக்கட்டும். வேட்பாளர்கள் வீடுகளுக்கு வருவார்கள். ஆராத்தித்தட்டுடன் தயாராக இருங்கள் வரவேற்க.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# வேட்புமனுத் தாக்கல் கூட்டுக்களும் வேட்டுக்களும்

சிவன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக் கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கால எல்லையாக இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியை தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன்படி கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இத்தேர்தலில் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஆகிய இரண்டு கட்சிகளை யும் அடிப்படையாகக் கொண்டே தேர்தல் வியூகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நடைபெறவிருப்பது பிரதேசங்களின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பதால் ஆளும் கட்சியை அல்லது அதற்கு சார்பான கட்சிகளிடம் உள்ளூ ராட்சி சபைகளை கையளிப்பதன் மூலம் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ளலாம் என்று யதார்த்தத்தின் அடிப்படையில் மக்கள் சிந்திப்பதால், ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இல்லையேல் உடன்பாட்டு டன் போட்டியிடுவதற்கு பெரும்பாலான கட்சிகள் ஆர்வம் காட்டி வருகின்றன. இதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சி சிறிய கட்சிகளுடன் கூட்டமைப்ப தில்லையென்று எடுத்த தீர்மானத்தை பற்றி சிறிய கட்சிகள் பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் கடந்த தேர்தல்களில் போட்டியிட்ட அதே கட்சிகளுடன் அண்மைக் காலங்களில் கட்சிதாவிய ஒருசில கட்சிகளும் இணைந்து கொண்டுள்ளன. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே களமிறங்குகிறது. அதேபோன்று ஜே.வி.பி.யும் தனித்து களமிறங்குகின்றது. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகளை அடிப்படையாக கொண்டு தேர்தலைச் சந்திக்க இருக்கின்ற பிரதான கட்சிகளுக்கு இத்தேர்தலில் பாரிய சிக்கல்கள் இல்லை. அவை ஒவ்வொன்றும் தங்களது வாக்கு வங்கி களை அடித்தளமாகக் கொண்டு தற்போதைய சூழலை முதன்மைப் படுத்தி வாக்குகளை கவரும் முயற்சிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆனால் சிறுபான்மை இன மக்களுக்கும் அவர்களை அடிப்படை யாகக் கொண்டு இயங்குகின்ற கட்சிகளுக் குமே யுத்தம் முடிவடைந்த பின்னர் நடாத்தப்படுகின்ற இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தாகக் காணப்படு கின்றது. கடந்த கால யுத்தத்தினால் வடக்கு, கிழக்கின் பகுதிகள் அழிந்து போய் அல்லது பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. அவற்றை அபிவிருத்தி செய்துகொள்வதற்கான வழிமுறையாகவே இந்த உள்ளூராட்சி சபைகள் கையாளப்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

கடந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களினாலும், சந்தர்ப்பங்களினாலும் கருத்து வேறுபட்டு சின்னாபின்னாமாகிப் போயிருக்கின்ற தமிழ் கட்சிகள் அனைத்துமே இந்தத் தேர்தலை தமது அரசியல் எதிர்காலத்துக்கான தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல்களாக எண்ணி களமிறங்கியுள்ளன. அண்மைக்காலம் வரை எதிர்ப்பு அரசியலை நடாத்தி வந்த தமிழ் கூட்டமைப்பு ஓர் இணக்க அரசியலுக்கான தேவையை உணர்ந்து அரசுடன் ஒத்துப்போகின்ற வகையில் சில சமிக்ஞைகளை வெளியிட்டு வருகின்றது. இது கடந்த காலங்களில் கூட்டமைப்பு முன்வைத்த கருத்துக்கு எதிர்மாறானது என்பதுடன் அந்தக் கருத்துக்களை ஆதரித்து வாக்களித்த மக்களையும் எரிச்சலடைய வைக்கின்றது. மறுபுறத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரச எதிர்ப்பு என்பது உதவாத ஒன்று என்பது கூட்டமைப்பின் கரங்களில் இருக்கின்ற வவுனியா நகர சபையின் செயற்பாடுகளின் மூலம் தெளிவாகுவதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் கூட்டமைப்புடன் போட்டியிடுவதற்கு பல சிறிய கட்சிகளும் முயற்சி களை மேற்கொண்டிருந்தன. இவற்றுள் புளொட் உள்ளிட்ட சில கட்சிகளை உள்வாங்கிக் கொண்ட கூட்டமைப்பு சிலரை புறந்தள்ளி விட்டுள்ளது. புறக்கணிக்கப் பட்டவர் களுள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும், அவர் சார்ந்த கட்சியும் அடங்குகிறது. கூட்டமைப்பின் முடிவினால் ஆத்திரமடைந்த சிவாஜிலிங்கம் இடதுசாரி கட்சியான நவசமாஜக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு கூட்டமைப் புக்கு பாடம் புகட்டவுள்ள தாக சூளுரைத்துள்ளார்.

வடக்கின் பலமான வாக்கு வங்கியைக் கொண்டிருக்கின்ற ஈ.பி.டி.பி. வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடு வதாக திட்டவட்டமாக அறிவித்துள்ளது. கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றிலையில் போட்டியிடுகின்றது. வடக்கில் ஈ.பி.டி.பி. யும் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் நம்பகமான வாக்கு வங்கிகளைக் கொண்டவை என்பதால் அந்தந்தப் பிரதேசங்களில் இந்த இரு கட்சிகளிடமே வெற்றிலையின் தலை மைப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. இது வெற்றிலையில் போட்டி போடுகின்ற ஏனைய சில தரப்புகளுக்கு அதிருப்திகளை ஏற்படுத்தி யிருக்கின்ற போதிலும் அதிருப்தியாளர்களின் அரசியல் பின்னணி தெரி யும் என்பதால் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமையி- னால் அவர்களின் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

**பல்வேறு சம்பவங்களினாலும், சந்தர்ப்பங்களினாலும் கருத்து வேறுபட்டு சின்னாபின்னாமாகிப் போயிருக்கின்ற தமிழ் கட்சிகள் அனைத்துமே இந்தத் தேர்தலை தமது அரசியல் எதிர்காலத்துக்கான தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல்களாக எண்ணி களமிறங்கியுள்ளன.**

முஸ்லிம்கள் மத்தியில் பலமான வாக்கு வங்கியைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்க்கப்பட்டது போன்றே கிழக்கில் தனித்து போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றது. அதேவேளை ஏனைய பகுதிகளில் வெற்றிலையில் இணைந்து போட்டியிடுகிறது. இது, மு.கா.விற்கு எதிரான முஸ்லிம் கட்சிகளுக்கு பிடித்தமானதாக இல்லை. தங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைப் பாதிப்பு ஏற்படுவதாக அவர்கள் உணர்கிறார்கள். எனினும் யதார்த்தத்தை புரிந்து கொண்டு அமைதி காக்கிறார்கள்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெற்றிலையுடன் இணைந்துவிட்டது. ஆரம்பத்தில் வெற்றிலையில் போட்டியிட சம்மதித்திருந்த மலையக மக்கள் முன்னணி, இடஒதுக்கீட்டுப் பிரச்சினையால் அதிருப்தி அடைந்துள்ளது. ஏழு உறுப்பினர்களுடன் தமது ஆட்சியின் கீழ் இருந்த நுவரெலியா பிரதேச சபையில் போட்டியிட தமது ஐந்து வேட்பாளர்களை நிறுத்துவதற்கு மலையக மக்கள் முன்னணி கோரியிருந்தது. அது மறுக்கப்பட்ட நிலையில் ஏற்கனவே இடஒதுக்கீட்டுப் பிரச்சினையால் சில கட்சிகள் இணைந்து புதிதாக உருவாக்கியுள்ள கூட்டணியுடன், மலையக மக்கள் முன்னணி இணைந்து கொண்டுள்ளது.

கடந்த காலத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அதன் அங்கமாகவே தேர்தல்களைச் சந்தித்த மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு கடந்த பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் ஆசன விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு முறுகல் ஏற்பட்டிருந்தது. அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தீர்மானமும் ஒன்றுசேர இம்முறைத் தேர்தலை தமது ஏணிச் சின்னத்திலேயே சந்திக்க வேண்டிய நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டுள்ளது. இதுதவிர ஏனைய சில சிறிய கட்சிகள் கிடைத்தது இலாபம் என்ற அடிப்படையில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட தயாராகிவருகின்றது. இன்னும் சில தரப்புகள் இறுதி முயற்சியாக சுயேட்சைக்குழுக்களாக கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. இவ்வாறு நடைபெற இருக்கின்ற தேர்தலில் பல்வேறு சூழ்ச்சிகளுக்கும், முயற்சிகளுக்கும் மத்தியில் ஒவ்வொரு கட்சிகளும் தாங்கள் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ள வழியைத் தீர்மானித்துள்ளது. அடுத்து வரும் வாரங்களில் நடைபெறவுள்ள அனல் பறக்கும் பிரசாரங்களும் ஆரம்பமாகவுள்ளது. எனி னும் இறுதித் தீர்மானம் மக்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. ❋





அலசுவது
- மதியூகி -

# கப்பலில் புலிகள் கடலில் போராட்டம்

**புலிகள் பற்றிய** செய்திகள் நாளுக்குநாள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்னும் கண்டெடுக்கப்படும் ஆயுதங்கள், கிண்ணியாவில் பிரபாகரனின் புகைப்படம் பொறிக்கப்பட்ட கலண்டர், வேலணையில் புலிக்கொடி என்று செய்திகளுக்குப் பஞ்சமில்லை.

சிறு பிள்ளைக்கு பூச்சாண்டி காட்டி உணவு கொடுப்பதுபோல், தமிழ் மக்களுக்கு புலிக்கதை சொன்னால்தான் அந்தப்பயத்தில் இருப்பார்கள். இல்லாவிட்டால் தத்தமது வேலைகளைப் பார்த்துக்கொண்டு போய்விடுவார்கள்.

இப்படி நினைக்கும் சில புலம்பெயர் தமிழர்கள். இருக்கிறார்கள். நாடுகடந்த தமிழீழ அரசு அதற்கொரு பிரதமர். அவர் பெயர் ருத்திரகுமாரன். பிறகு அமைச்சரவை அவர்கள் பெரும்பாலும் வர்த்தகப்புள்ளிகள், அதற்கு சூடானின் அழைப்பு ஒரு அங்கீகாரம் என்று சொல்லிக் கொண்டு திறந்தவெளி மனநோயாளிகளாகத் திரிகின்றார்கள்.

இப்போது தமிழீழ அடையாள அட்டையும் கொடுக்கின்றார்களாம். எல்லா வளமும் பெற்றிருந்த புலிகள் இயக்கமே "தமிழீழம்" என்ற இலக்கை அடைய முடியாமல் போயிருக்கும் நிலையில் ருத்திரகுமரான் கூறும் நாடு கடந்த தமிழீழம் இலங்கையில் தமிழருக்கு எதற்கு உதவப்போகிறது.

புலம்பெயர் தேசங்களில் இலங்கை அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களும், போராட்டம் நடத்துபவர்களும், ருத்திரகுமாரனின் தமிழீழ மாயையை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல.

அவர்கள் இனப்பற்றின் காரணமாக உந்தப்பட்டவர்களாகவும், தமது ஆத்திர உணர்வுகளுக்கு வடிகாலொன்றைத் தேடுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பீரீட்டுக்கிளம்பும் கோபத்தையும் புத்திசாதுரியமாக எப்படி வெளி ட வேண்டும் என்ற சிந்தனையைத் தொலைத்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர். இறந்தவர்களுக்காக உணர்ச்சிவசப்படும் அதேவேளை உயிரோடு இருப்பவர்களுக்காகவும் கொஞ்சம் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

புலிகள் இன்னும் இருக்கிறார்கள் என்று கூறினால் முழுமையான சிவில் நிர்வாகச் சூழல் ஒன்றை மக்கள் அனுபவிக்க முடியாத நிலைமை ஒன்று தோன்றும். உதாரணத்துக்கு இன்றைய யாழ்.குடா நாட்டின் நிலைமை அதுதான். தொடராக நடந்த கொலைகள். கொள்ளைகள், வம்புத்தனமான நடவடிக்கைகள், மீண்டும் படையினரின் பிரசன்னத்தையும் பரிசோதனைகளையும் அதிகரிக்கச் செய்துள்ளது. சம்பவங்களுக்கு படையினர் பொறுப்புச் சொல்ல வேண்டுமென கேட்கப்படுவதால் படையினர் நடவடிக்கைகளில் இறங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

சமகால இளைஞர், யுவதிகளை, தமிழருக்கும், சிங்களவருக்கும் ஜென்மபகை என்பதுபோல கடந்த காலத்தில் வழிநடத்தப்பட்டதன் விளைவையும் காணமுடிகின்றது.

சாதாரணமாக வீதி ஒழுங்குகளைக்கூட கடைப்பிடிக்காமல் பொலிசாருக்கு போக்குக்காட்டி விடுவோன் என்ற மனோநிலையில் இருக்கின்றனர்.

இதுதவிர முன்னாள் புலி உறுப்பினர்கள் மீது எல்லோரும் குற்றம் சுமத்துகின்ற நிலையும் மிக அதிகளவில் இடம்பெறுகின்றது. அவர்கள் தம்மை சாதாரண குடிமக்களாக நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் சமூக. அழுத்தங்களுக்கு உட்பட்டு இருக்கின்றனர்.

புலிகளின் பெயரால் இன்னும் கூட தொடரும், சந்தேகப்பார்வைகள், விசாரணைகள், சோதனைகள், இந்த மண்ணில் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த இரண்டும் கெட்டான் நிலையை மேலும் சிக்கலாக்கும் இன்னொரு விடயமும் உண்டு. அதாவது, தமிழ்மக்களின் அரசியல் பாதையையும், விருப்ப வெளிப்பாடுகளையும் தீர்மானிப்பதில் திரைமறைவான முயற்சிகள் நடக்கின்றன. இதில் தமக்கு இலாபம் எனக்கருதும், சில ரெடிமேட் தமிழ் அரசியல் முகங்கள் அல்லது திட்டமிட்டு அரசியலில் இறக்கப்பட்டவர்களும் கூட்டுச் சேர்ந்துள்ளனர். இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளில் கூட காணமுடியும்.

இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழ் மக்களின் வாழ்வு இவ்வாறு இடியப்பச்சிக்கலாகி இருக்கையில்தான் இலங்கைக்கு வெளியே புலிகள் பற்றிய புதிய புதிய செய்திகள் வெளியாகின்றன.

அதாவது போர்க்காலத்தில் தப்பித்த பெருமளவான புலிகள் தாய்லாந்து இந்தியா பங்களாதேஷ் போன்ற நாடுகளில் தலைமறைவாக இருப்பதாகவும் அவர்கள் கப்பல்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு அகதி அந்தஸ்துக்கோரிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக கனடாவுக்குப் போகும் புலிகள் கனடாவை தமது தளமாக பயன்படுத்த முயற்சிக்கின்றன.


கடந்த வாரம் கனடாவுக்குச் சென்ற 18 புலி உறுப்பினர்கள் அந்நாட்டுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 50 பேர் கனடா நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும், அவர்களையும் கனடா கைதுசெய்யும் என்றும் அறிவித்துள்ளது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் தொடர்ந்து கப்பல் அகதிகள் வருகின்றபோதும் அவர்கள் எங்கிருந்து வருகின்றார்கள், கப்பல் பயணத்துக்கான ஒழுங்குகளைச் செய்பவர்கள் யார் என்பது பற்றி எவரும் தெரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை என்பதுதான்.

அண்மையில் கனடா அரசு அகதிகளை ஏற்றுக் கொள்ளும் நடைமுறையில் தாராளபோக்கை கடைப்பிடிப்பதாக அறிவித்தது. இதுகூட கனடா நோக்கி அகதிகள் படையெடுக்கக் காரணமாக இருக்கலாம். இலங்கையில் போர் நடந்துகொண்டிருக்கின்ற போது இரண்டு விதமானவர்கள் தப்பித்துக் கடல் வழியாக வெளியேற புலிகள் அனுமதித்தனர். புலிகளின் பொறுப்பாளர்களாக இருந்தவர்களின் குடும்பங்கள், உறவினர்கள், மற்றவர்கள், வன்னியில் அல்லது புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து பண உதவி வழங்கிவிட்டு கடல் வழியாக தப்பிக்க முற்பட்டவர்கள் அடங்குகின்றனர்.இவர்களுக்கு மேலதிகமாக சிலர் புலிகளின் தடைகளையும் மீறி தப்பித்துச் சென்றவர்கள் இவர்கள்தான் இப்போது கடலில் உயிருக்காகப் போராடியபடி கரைதேடி அலைகினறனர். முன்னர் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்றார்கள். இப்போது கனடா நோக்கிச் செல்கின்றார்கள். எங்கு போய்ச் சேரப் போகின்றோம் என்பது தெரியாமல் பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



**போன நாடாளும்** சபைத்தேர்தலில, யானையில ஏறி மலையக மக்களின்ர முதுகில சவாரி விட்டு, குள்ளநரித்தனம் பண்ணி பிரதிநிதியாய் மாறின ரங்கமணியார் ஏதோ தனக்கு ஒரு 'குழு'வையும் ஏற்படுத்தி வைச்சிருக்கிறாருங்கோ.

அதுக்கு... இப்ப என்ன? எண்டு நீங்கள் ஒரு மாதிரி மார்க்கமாய்க் கேட்கிறது எனக்கு விளங்குதுங்கோ.

அங்கதான் விசயமே இருக்குது. நடக்க இருக்கிற உள்ளூராட்சிச எலக்ஷனில முல்லை மாவட்டத்தில ரங்கமணியாரின்ர 'குழு' களமிறங்கப்போகுதாம். அவருக்கு சப்போர்ட் குடுத்து அதிகாரத் தரப்பு முல்லை மாவட்டத்தில விலத்திக் கொள்ளுயினுமாமுங்கோ.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே எங்கட வாத்தியார் கேக்கிறார்.. "தமிழ் மக்கள் என்ன ............ எண்டு நினைச்சுக்கொண்டு இஷ்டத்துக்கு ஆட்டம் போடினமே" எண்டு. இது ஒரு பக்கம் கிடக்க, இதைப் பார்க்கிறப்ப எங்கட இயக்கங்கள் ஒவ்வொண்டும் கருவியளோட திரியேக்க இயக்கங்களுக்கையே கொளுத்திப்போட்டு காரியம் சாதிச்ச வரலாறுதானுங்க ஞாபகத்துக்கு வருகுது. ஆனா என்ன பயனுங்கோ?! எங்கட ஆட்களுக்கு இருக்கிற ஞாபகமறதி மற்றவைக்கு வேலையை இலேசாக்கிக் கொண்டிருக்குதுங்கோ.

**பொசிப்புக்களுக்காகக்** குறுக்கோட்டம் ஓடி சிதறிப்போய்க் கிடக்கிற தமிழ்க்கட்சிகள் எல்லாத்துக்கும் உள்ளூராட்சி எலக்ஷனில ஒற்றுமையின்ர அவசியம் விளங்கின மாதிரி "ஒண்டுபட வேணும்" எண்டு ஒற்றைக்காலில நிற்கினமுங்கோ. இந்த ஒற்றுமை பல்லவிக்குத்தனிச்சு நிண்டு பட்டுக்கொண்டது மட்டும் காரணமில்லையாமுங்கோ. தனிச்சு போட்டிபோட்டால் வேட்பாளர் பட்டியலில போடுறதுக்கே ஆள்பிடிச்சு மல்லுக்கட்டவேண்டி இருக்கும் எண்ட ரென்ஷனும் காரணமுங்கோ.

தங்களுக்கு அதிகாரம் கிடைச்சா காணும் எண்டு சொல்லிப்போட்டுப் . பக்கத்தில நிண்டவையெல்லாம் கழட்டிவிட்டவை எங்கட தலையளுக்கு இப்பதான் விசயம் உறைக்குது போலக்கிடக்குது.

**இதுவும் உள்ளூராட்சி** எலக்ஷன் சம்பந்தப்பட்ட சப்டர் தானுங்கோ. தமிழ் மக்கள் தங்கட தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்திறதுக்குத் தங்களுக்கு வோட் போட வேணுமெண்டு கூட்டமைப்பின்ர சட்டம்பி ஒருத்தர் செப்பியிருக்கிறாருங்கோ. இதைக் கேட்க "ஊருக்குத்தான் உபதேசம் தனக்கில்லை...." எண்டுறதுதான் ஞாபகத்துக்கு வருகுதுதுங்கோ.

இந்த சட்டம்பி, சனத்திட்ட அபிலாசையைக் காட்டுங்கோ எண்டு கேட்கிறதுக்கு முன்னம், தான் சுத்தத் தேசியவாதி எண்டதைப் புறூவ் பண்ணவேணுமுங்கோ. அப்படியெண்டா ருத்தினராரின்ர நாடுகடந்த கவுண்மன்ட் இசூ பண்ணுற அடையாள அட்டைக்கு விண்ணப்பிச்சு எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் தங்கட தூய்மையான தேசிய உணர்வை நிரூபிக்க வேணுமுங்கோ.

ஹி...ஹி..ஹி அது நடக்காதுங்கோ. அப்படிச் செய்யிறதுக்குக் கூத்தமைப்பில பைத்தியம் பிடிச்சவையே இருக்கினம். விண்ணப்பிச்சா தங்கட பதவிகள் பிடுங்குப்பட்டு ஆண்டியா நிற்கவேணும் எண்டதைச் சட்டப் புத்தகத்தில படிச்ச கனபேர் இருக்கினமுங்கோ.

# மின்சாரத்தில் இயங்கும் கார்

**புதிய** அம்சங்களுடன் கூடிய இ என்-வி என்ற பெயரில் மின்சாரத்தில் இயங்கும் காரை ஜெனரல் மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கார் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் பயன்பாட்டை குறைக்கவும், சாலைகளில் போக்குவரத்து நெரிசலை




குறைக்கவும் பேட்டரியில் இயங்கும் எலக்ட்ரிக் கார்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் குறைந்த தொலைவு மட்டுமே செல்ல முடியும் என்பதால் அவை மக்கள் இடத்தில் போதிய வரவேற்பை பெறவில்லை. இந்நிலையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையிலும், தரிப்பிட தொல்லைக்கு பதிலளிக்கும் வகையிலும் மேம்படுத்தப்பட்ட எலக்ட்ரிக் காரை ஜெனரல் மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் நடந்த விழாவில் இந்நிறுவனத்தின் இயக்குனர் இக்கார் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் இ-என்-வி காரானது சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையிலும்,குறைந்த மின்சாரத்தில் இயங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தகாரை ஒருமுறை சார்ஜ் செய்தால் 25 கி.மீ வரை பயணம் செய்யலாம். இரண்டு பேர் அமர்ந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்ட இந்த கார் அதிகபட்சம் 25 கி.மீ வேகத்தில் செல்லலாம்.இந்த காரை நிறுத்தவதற்கு குறைந்த இடவசதி போதுமானது. மேலும் அடுத்த முயற்சியாக எலக்ட்ரிக் உந்துருளிகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். இந்தக் காரின் வர்த்தக ரீதியான விற்பனையை துவங்குவது குறித்து எந்த அறிவிப்பும் இதுவரை வெளியிடப்படவில்லை

# வாய்விட்டுச் சிரித்தால் குழந்தை பாக்கியம்!



'வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும்'' என்பது பழமொழி. அந்த நகைச்சுவை உணர்வானது, பெண்களை கர்ப்பம் தரிக்கச் செய்யும் அருமருந்தாகவும் உதவுகிறது. என்று ஒரு ஆய்வின் மூலம் தெரிய வந்திருக்கின்றது.

சிரிப்பு என்பது நோய்களைத் தீர்க்கும் சிறந்த மருந்தாகவே செயல்பட்டு வருகிறது. அதன் மூலம், பெண்களும் கர்ப்பம் தரிக்கின்றனர் என்பது ஆய்வியல் உண்மை. நகைச்சுவை உணர்வினால் கர்ப்பம் அடையலாம் என்பது குறித்த ஆய்வினை, இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஷேவாச் பிரைட்லர் தலைமையிலான குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

இக்குழுவினர், சோதனை குழாய் மூலம் குழந்தை பெறுவதற்கு, சிகிச்சை பெற்று வரும் பெண்களிடம் ஆய்வு நடத்தினர். இவ்வாறாக, சிகிச்சை பெற்ற 219 பெண்கள் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டனர். அறிவியல் ரீதியாக மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுவரும் பெண்களுக்கு, மருத்துவ சிகிச்சையின் இடையே கோமாளிகளின் நகைச்சுவையும் வழங்கப்பட்டது. இதற்காக, நகைச்சுவை உணர்வுமிக்க கோமாளிகள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

அவர்கள், சிகிச்சை பெற்றுவரும் பெண்களிடம் நகைச்சுவை உணர்வுடன் பேசி, பெண்களின் மனதில் உள்ள அழுத்தங்களை காற்றில் பறக்கச் செய்தனர். இவ்வாறு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில், 36 சதவீதம் பெண்கள் கருத்தரித்தனர். கோமாளிகளின் நகைச்சுவையானது நல்ல பலனைத் தந்தது. பொதுவாகவே, பெண்கள் இது போன்ற நேரங்களில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். மாறாக, சோதனை குழாய் முறையிலாவது, தாங்கள் கர்ப்பம் ஆக வேண்டும் என்ற ஆதங்கத்துடன் பெண்கள் இருப்பதால், அவர்களிடையே மன அழுத்தமானது மேலோங்கி காணப்படுகிறது.

மன அழுத்தத்தை குறைத்து, அவர்களை அமைதிபெறச் செய்து மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதே கோமாளிகளின் பணி. இதற்காகவே தான் கோமாளிகள் பணியில் அமர்த்தப்பட்டனர். கோமாளிகளின் நகைச்சுவை உணர்வுதான், பெண்களின் மன அழுத்தத்தை போக்கி, அவர்களை கருத்தரிக்கச் செய்தது என்று, மருத்துவர் பிரைட்லர் தகவல் வெளியிட்டுள்ளார்.



பகுதி 155

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

## - ஏழாம் பாகம் -

**"மேலும்,** சரீர உழைப்பும் விளையாட்டுக்களும் மிகவும் வாலிபப் பருவத்திலிருக்கும் பிள்ளைகளுக்கு மாத்திரந்தான் பொருந்துமென்று ஒரு தப்பெண்ணம் சிலரிடம் ஏற்பட்டிருக்கிறது.

"மனிதனுக்கு இயற்கை வயது நூறு. ஆகையால், ஐப்பது வயதாகும் வரை ஒருவன் இளமை தீர்ந்தவனாக மாட்டான். பிஞ்சிலேயே உடம்பை நாசப்படுத்தினால் சீர்கெட்டுக் குலைந்துபோய், இருபதுவயதாகு முன் கிழத்தன்மை வந்துவிடும். எனினும் இயற்கை விதிப்படி ஐம்பது வயது வரை இளமை நிற்குமாகையால், அதற்குள்ளே செயற்கைக் கிழத்தன்மை பெற்றோர், தமது உடம்பைத் திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முயற்சி செய்யலாம்."

மேலே நான் குறிப்பிட்டிருப்பது மகாகவி பாரதியாரின் கட்டுரையில் இருந்து ஒரு பகுதி.

மனிதனை அண்டிவரும் ரோகத்திற்கான அடிப்படையை இப்படி அவன் விவரிக்கிறான்.

இது பற்றி முன்பே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

சிறு வயதில் இருந்தே, பெருந்தீனி தின்று பழக்கப்பட்டவன் நான்.

அந்நாளில், மணியாச்சியை அடுத்த ஓட்டநத்தத்தில் எங்களுக்னு ஒரு 'ஜின்னிங் பாக்டரி' இருந்தது.

வாஞ்சிநாதன், ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற அந்த மணியாச்சி ஜங்ஷன், தென்னாட்டிலே பூரி கிழக்குக்குப் பிரசித்தமானது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தன் போது, பூரி சப்பாத்தி சாப்பிட வேண்டிய கட்டாயம் தென்னாட்டவர்க்கு வந்ததென்றாலும், அதற்கு முன்பாகவே ஹோட்டல்களில் பூரி கிழங்கு என்பது ஒரு சுவையான உணவாகக் கருதப்பட்டது.

1933 இல் எனக்கு வயது சுமார் ஆறு.

அந்த வயதில் சுமார் பதினாறு பூரிகள் சாப்பிடுவேன். உறவினர்களே கூடத் திகைத்துப் போவார்கள்.

பாரதி சொல்வது போல், கம்பும் கேழ்வரகும், கோதுமையும் உடம்புக்குச் சக்தியூட்ட வல்லன.

ஆரம்ப சக்தியே, எனக்கு உணவில் இருந்து கிடைத்தது.

ஆனால், வெள்ளைக்காரர்கள் உணவையும் சீனத்து உணவையும், சுவை பார்க்கத் தொடங்கிய பிறகு, நாக்கு ருசியேறி ஊளைச்சதைபோடத் தொடங்கிற்று. கொழுப்புச் சத்தும் ஏறி பத்துப் படியேறினால் மூச்சு வாங்குகிற நிலைமை வந்தது.

இப்போது என்னால் அதிகம் சாப்பிட முடியவில்லை. குறைந்தபட்ச உணவிலேயே திருப்தியடைய வேண்டியதாக இருக்கிறது.

அந்த உணவு, 'புரதச் சத்து நிறைந்ததாக இருந்தால் போதும்' என்றே நான் நினைக்கிறேன்.

உடம்பும் அளவோடிருக்கிறது.

ஆனால், மூளை 'சென்சிட்டி'வாகிவிட்டது.

எந்த ஒலியையும் அது எதிரொலிக்கிறது.

திருமூலரும், போகரும், பதார்தகுண சிந்தாமணியும் உணவுக்குச் சொல்லும் குணங்களை, இப்போது என்னால் உணர முடிகிறது.

கிழங்கு வகைகள், பட்டாணி, முட்டை, நண்டு, இறால் இவற்றில் வாயு அதிகமா?

மத்தியானம் சாப்பிட்டால், மாலையிலே எதிரொலி கேட்கிறது.

மாமிசக் கொழுப்பும், உப்பும் ரத்தக் கொதிப்பை ஏற்றுமா?

இருபத்து நான்கு மணி நேரத்தில் ரிசல்ட் தெரிகிறது.

புளியிலும், எலுமிச்சம் பழத்திலும் 'திரவம்' உண்டா?

அந்தத் திரவம் இப்போது கண்ணை மயக்குகிறது. தலையைச் சுற்றுகிறது.

இரத்த அணுக்களின் தாங்கும் சக்தி ஒரு குறிப்பிட்ட காலத்தோடு முடிந்து விடுகிறது.

வெள்ளை அணுக்களும், சிவப்பு அணுக்களம் பலமிழந்து, போராடக் கூடிய வல்லமையை அவை இழந்து விடுகின்றன.

இரண்டு மோட்டார் வைத்துத் தண்ணீர் இறைக்கும் கோயம்புத்தூர் கிணறு போல, ஏராளமான மாத்திரைகளைப் போட்டே அந்த இரத்த அணுக்களை உயிர்ப்பிக்க வேண்டியிருக்கிறது.

வானைத்தொடும் அளவுக்குக் கால் பந்து அடித்த கால்கள, ஒரு வாளித் தண்ணீரைத் தூக்குவதற்குப் பயப்படுகின்றன.

ஏழு மாடி ஏறினாலும் வராத பெரு மூச்சு, ஏழு படி ஏறினாலே வருகிறது.

எனக்கல்ல:

வயதானவர்களுக்கு!

இருபது வருஷங்களுக்கு முன் அரசியலிலும், இலக்கியத்திலும், கலையிலும் என்னோடு ஈடுபட்ட சிலரை இப்போது பார்க்கிறேன்.

சிலர், 'சர்க்கரை' என்கிறார்கள். சிலர் 'உப்பு' என்கிறார்கள்.

சாப்பாட்டைக் கண்டால் பயப்படுகிறார்கள்.

ஆஸ்பத்திரியைக் கண்டால் படுத்துக் கொள்கிறார்கள்.

ஆளுக்கு ஒரு மூட்டை மாத்திரை சாப்பிடுகிறார்கள்.

போகம் ஒரு கட்டம் வரையில்தான். 'மறுகட்டம் ரோகம்' என்பதைத் தேகம் நினைவுபடுத்துகிறது.

சிறுவயதில் திட்டமிட்டு வாழாத யாரும், தற்குத்த தப்ப முடியவில்லை.

தொடர்ச்சி அடுத்த வாரம்...

# அரசின் சாதக தாமத நகர்வுகளும்

அமலன்

**இலங்கையின்** அரசியலில் பல்வேறு விடயங்கள் அன்றாடம் நடந்து வருகின்றன. இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி என்ற கோட்பாட்டை முன்னோக்கி நகர்த்திச்செல்வதாக கூறிவருகிறது. அதன் அடிப்படையில் வடக்கின் வசந்தம் என்ற அடிப்படையில், வட பகுதியில் அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்கிறது

அதேநேரம், நாடளாவிய ரீதியிலும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் எதிர்க்கட்சிகள், ஆளும் கட்சியின் அதிகாரம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் ஊழல்கள் மலிந்துள்ளதாக குற்றம் சுமத்தி வருகின்றன. இலங்கையில் எதிர்க்கட்சிகளால் ஆளும் கட்சிக்கு அழுத்தம் கொடுக்கமுடியாது நிலைமை 2009 ஆம் ஆண்டு இறுதியுத்தம் முடிவடைந்த போது காணப்பட்டது.

அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக பொதுமக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றதால், அரசாங்கத்தின் மீது குற்றங்களை சுமத்துவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு முடியவில்லை அவ்வாறு குற்றங்களை சுமத்தினாலும் அதனை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

எனினும் அந்த நிலைப்பாடு தற்போது தளர்ந்துள்ளமையை ஆளும் தரப்பினரே ஏற்றுக்கொள்கின்றனர். இதற்கு காரணம் நாட்டில் இன்று பொருட்களின் விலை வாசியில் ஏற்பட்டுள்ள உயர்வுகள், பாதுகாப்பு நிலைமை குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற வன்முறைகள் என்பன அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதற்கு இடமளித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சூரியப்பொங்கல் நிகழ்வின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, உரையாற்றும் போது நாட்டின் எந்த பகுதியிலும் பாதாள உலகக்குழுக்களையோ அல்லது மாபியாக்களையோ இயங்கவிடப்போவதில்லை எனக்குறிப்பிட்டிருந்தார்.

அனைவரும் இனமத பேதமின்றி நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்போம் என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயம் முன்னரை காட்டிலும் அவருக்கு ஓரளவு வரவேற்பை கொடுத்திருந்தது எனலாம். ஏனெனில் லண்டனில் அவருக்கு எதிராக புலம்பெயர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் அவரின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? என்ற அச்சம் இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணத்தில் அவர் பங்கேற்ற வைபவம் மற்றும் உரை என்பன மக்கள் மனதில் அவர் தொடர்பிலான நல்லெண்ணத்தை உருவாக்கியுள்ளதாகவே கருதவேண்டும். இந்த நிலையில் ஜனாதிபதி, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நல்ல அபிப்பிராயத்தை முன்னோக்கி நகர்த்தி செல்லவேண்டும் என்பதே அனைவரதும் ஆவலாக உள்ளது. இனப்பிரச்சினைக்கான உரிய தீர்வை வழங்குதல், பல வருடங்களாக சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல் மற்றும் தமிழர் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பனவே ஜனாதிபதிக்கு முன்னால் உள்ள சவால்களாக அமைந்துள்ளன.

> **இலண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக புலம்பெயர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் அவரின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்ற அச்சம் இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது எனினும் யாழ்ப்பாணத்தில் அவர் பங்கேற்ற வைபவம் மற்றும் உரை என்பன மக்கள் மனதில் அவர் தொடர்பிலான நல்லெண்ணத்தை உருவாக்கியுள்ளதாகவே கருதவேண்டும் இந்தநிலையில் ஜனாதிபதி, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நல்ல அபிப்பிராயத்தை முன்னோக்கி நகர்த்தி செல்லவேண்டும்**


இதனையே நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட எதிர்க்கட்சிகளும் கடந்த வாரத்தில் வலியுறுத்தின அதேநேரம் ஆளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்ப்பாண வன்முறைகளை நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். இந்தநிலையில் இந்த வலியுறுத்தல்கள் அரச நிர்வாகத்தை செயற்படவைத்துள்ளன என்றே கூறவேண்டும். அரசாங்கத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் பதிலளித்த பிரதம மந்திரி டி.எம்.ஜெயரத்ன, யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற வன்முறைகள் யானையின் வாலில் உள்ள ஒரு மயிருக்கு சமனாகும். எனவே அதனையும் அரசாங்கம் விரைவில் பிடுங்கி எறிந்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் காவல் துறையினர் மற்றும் பாதுகாப்பு படையினர் இந்த வன்முறைகள் குறித்து தமது கவனத்தை செலுத்துவதை அவதானிக்கமுடிகிறது. யாழ்ப்பாணத்தில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. கொள்ளைகளிலும் கொலைகளிலும் ஈடுபடுவோரை கட்டுப்படுத்த காவல்துறை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நகர்வுகளை ஏற்படுத்தியுள்ளது இந்தநிலையில் இந்த நகர்வுகள் பலனளிக்க வேண்டும். அதேநேரம் கடந்த ஒருமாதக்காலப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளில் தொடர்புடையோரை கைதுசெய்து சட்டத்தின் முன் காவல்துறையினர் நிறுத்தவேண்டும்.

அப்போதே யாழ்ப்பாண மக்களுக்கு காவல்துறையின் மீது நம்பிக்கை ஏற்படும். அந்த நம்பிக்கை அரசாங்கத்தின் மீதும் ஏற்படும்.அதேநேரம் அது எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலிலும் தாக்கத்தை செலுத்தும் என்பதை கூறலாம் இதேவேளை, வடக்கில் இவ்வாறான நிலை உள்ள போது கிழக்கில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்ந்தும் மக்களை நிர்க்கதிக்கு உள்ளாக்கி வருகின்றன.இதன் போது அரச நிர்வாகம் உரியமுறையில் இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு வருகிறது இதற்கு உதாரணமாக ஆரையம்பதி போராட்டம் பின்னர் மட்டக்களப்பு நகர் வாயிலில் இடம்பெற்ற போராட்டம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இந்நிலைமையை இலங்கைக்கு கடந்த வாரம் வந்திருந்த ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியும் தெளிவாக தெரிவித்திருந்தார். வடக்கில் உள்ள மக்கள் போராலும் கிழக்கில் உள்ள மக்கள், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார் வடக்குகிழக்கில் கட்டுமானப்பணிகள் முன்னெடுத்துச்செல்லப் படுகின்றன இந்தநிலையில் பொதுமக்களுக்கான மூலாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனவே அரசாங்கம், இவ்வாறான விடயங்களில் முன்னதாகவே மற்றவர் கூறுவதற்கு முன்னர் செயற்படுமானால் அது தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை அது கட்டியெழுப்பும் எனலாம் சர்வதேசத்தில் இன்று இலங்கைக்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு வந்தாலும் அதற்கு மத்தியில் அமரிக்காவுக்கு சென்றதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, லண்டனில் ஏற்பட்ட நிலைமையை ராஜதந்திர ரீதியாக வெற்றிக் கொண்டுள்ளார் என்றே கருதப்படுகிறது

இதேவேளை, இலங்கை மீனவர்கள் கடற்பிரதேசத்தில் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான கோசங்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே இந்த விடயத்திலும் இலங்கை அரசாங்கம் ராஜதந்திரரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கடற்பிரதேசத்தில் தமிழக மீனவர்கள் கொல்லப்படுகின்றமை மற்றும் தாக்கப்படுகின்றமை தொடர்பில், இலங்கை அரசாங்கம் தமது மறுப்பை வெளியிட்டு வருகிறது. எனினும் தொடர்ந்தும் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் இந்த வாரம் இந்திய மீனவர் பிரச்சினை இலங்கை இந்திய இராஜதந்திர விடயத்தில் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)



# வெள்ளம் தந்தது சோதனை மீட்சிப் பணிகளில் சோதனை

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

"**ஆற்று** வெள்ளம் போன பின்னாலே அமைதி கொள்ளும் வெண்மணல் போலே நேற்றுத் துன்பம் நாளை விலகும்" என்று நம்பிக்கொண்டிருப்பதும் "ஆள் ஆற்றாத் துயரெல்லாம் நாள் ஆற்றும்" என்று சமாதானப்பட்டுக் கொள்வதும் வழமை போன்று இப்பொழுதும் கிழக்கு மக்களின் வாழ்க்கையாகிவிட்டது.

வெள்ளம் வற்றிவிட்டது. வெயில் எறிக்கிறது. மக்கள் தமது வாழிடங்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். எல்லாம் வழமைக்குத் திரும்பிவிட்டது என்று முடங்கிக்கொண்டார்கள். இதில் தமிழ் முஸ்லிம் என்ற பாகுபாடுகள் இருக்கவில்லை. வீடுகளுக்குள் கட்டில்களிலும் கதிரை மேசைகளின் மீதும் பரண்களிலும் பல நாட்கள் ஏறிக்குந்திக்கொண்டு காலங்கழித்தவர்கள் உண்டு.

அடைமழை பெய்யத் துவங்கி பெருவெள்ளம் ஏற்பட்டது வரையான ஒரு மாத காலப்பகுதியில் பசி பட்டினியால் எல்லோருமே வாடிக்கிடந்தார்கள். ஆயினும் நலன்புரி முகாம்களை நாடியோருக்கே சமைத்த உணவும்




மனிதாபிமானத்தோடும் பணியாற்றுங்கள்" என்று அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அவசர கட்டளையிட்டிருந்தார். இதனால் உங்களுக்கு ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமாக இருந்தால் அதற்கு நான் பொறுப்பாளி என்றும் ஜனாதிபதி அவர்கள் உத்தரவாதம் அளித்திருந்தார். ஆயினும் இத்தகைய சாதகங்களைக் கூட கவனத்தில் எடுக்காது சில அதிகாரிகள் இறுமாப்புடனும் ஏனோதானோ என்ற மனப்பான்மையுடனும் நடந்து கொண்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் எரிச்சலூட்டுவதாக இருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பல நிறுவனங்களும் பரோபகாரிகளும் முன்வந்து தாராளமாக உதவியிருந்தார்கள். ஆனால் இந்த நிவாரண விநியோகம் சீரான திட்டத்தின் அடிப்படையில் உரியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற பரவலான அதிருப்தி நிலவுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. பல்வேறு செல்வாக்குகளின் அடிப்படையில் நிவாரண விநியோகம் செய்யப்பட்டிருப்பதும் அதிகாரிகள் தம் இஷ்டப்படி நடந்திருப்பதும் அருவருக்கத்தக்க உண்மைகளாக உள்ளன. பாதிக்கப்பட்டுப்போய் இன்றுவரையில் எதுவிதமான நிவாரணமும் கிடைக்காத மக்கள் அதிருப்தியோடு தெருவுக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஆத்திரத்தோடு உள்ளார்கள்.

இடர்முகாமைத்துவ அதிகாரிகளின் ஒருங்கிணைப்போடுதான் எல்லா நிவாரணங்களும் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைய வேண்டும் என்று அரசு கூறியது ஆரம்பத்தில் சற்று ஆறுதலாகத்தான் இருந்தது. ஆயினும் அந்த வாக்குறுதி மீறப்பட்டு கடைசியில் அதிகாரிகளும் நிறுவனங்களும் தம் இ'டப்படி நடந்து கொண்டதால் குளறுபடிகளும் குழப்பங்களும் அடிபிடிகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன.

உண்மையில் அரசாங்கம் கூறியதுபோன்று அகதிகளுக்காக ஒன்று சேர்க்கப்பட்ட நிவாரணங்கள் அது அரசினுடையதாக இருந்தாலும் உதவி வழங்கும் நிறுவனங்களுடையதாக இருந்தாலும் அல்லது பரோபகாரிகளுடையதாக இருந்தாலும் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து அவை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையக் கூடியதான ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தால் அது பயனளித்திருக்கும். அத்துடன் அதிருப்திகளையும் குழப்பங்களையும் குளறுபடிகளையும் தவிர்த்திருக்கும். வெள்ளத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கொழும்பு மாவட்ட செயலகத்தினால் சேகரித்து பதின்மூன்று லொறிகளில் அனுப்பிவைக்கப்பட்ட



கூறுவதில் எல்லோருக்கும் உள்ளூர ஒரு மகிழ்ச்சிதான். ஆனால் இந்த மகிழ்ச்சிக்குப் பின்னால் மறைக்கப்பட்டிருக்கின்ற துயரங்கள் சொல்லில் அடங்காதவை.

கிழக்கில் உண்டான அடைமழையும் பெருவெள்ளமும் திடீரென ஓரிரவில் ஏற்பட்ட ஒன்றல்ல. சரியாக ஒருமாத காலம் அந்த மக்களை வீட்டுக்குள்ளே முடங்க வைத்ததோடு அவர்களது வாழ்வாதாரத்தையும் அழித்து நாளாந்த ஜீவனோபாயத்தை நாசம் செய்தது. கடந்த ஒரு மாத காலமாக மூடிய வானத்துக்குள் இருட்டுச் சூழலில் அடைபட்டுக் கிடந்த மக்கள் எல்லா வகையான துன்பங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். இடைவிடாது கொட்டிய மழை கூடவே கடுங்குளிர், இடிமின்னல், பலத்தகாற்று, வெள்ளம் என்பன அவர்களை பதம் பார்த்துவிட்டது. பசி ஒருபுறம் பயமும் துயரமும் மறுபுறம் என்று நாளாந்த வாழ்க்கை சுமார் ஒரு மாத காலத்துக்கு மேலாக பெரும் பாதிப்பை உண்டுபண்ணியிருந்தது.

வீட்டுக்கதவை திறந்து வெளியேற முடியாத நிலையில் வெளியேயும் வெள்ளம், வீட்டுக்குள்ளேயும் வெள்ளம், கால் நீட்டித் தூங்க இடமில்லை, அடுப்பெரிக்க முடியவில்லை, பசியைப் போக்க வழியில்லை என்று வாழ்க்கை அவஸ்தையாகிப் போய்விட்டது. இந்த வேளையில் வீடுகள் வெள்ள நீரில் மூழ்கிப் போனதால் வேறு வழியில்லாமல் சிலர் நலன்புரி நிலையங்களையும் சற்று உயரமான இடங்களையும் தேடி ஓடினார்கள். ஆயினும் அகதிமுகாம் வாழ்க்கை அலுத்து விட்டதாலும் அந்த வாழ்க்கையின் அவஸ்தையை உணர்ந்ததாலும் பலர் தமது வீடுகளுக்குள்ளேயே இன்னபிற உதவிகளும் சென்றடைந்தன என்ற விடயம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிருப்தியைத் தந்தது.

எந்த நிவாரணங்கள் வந்தாலும் நாங்கள் அகதி முகாம்களை நாடப்போவதில்லை என்று சுயகௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டு பிடிவாதமாக இருந்தவர்களை இந்த இடத்தில் குறைகாண முடியாது. காரணம் ஒட்டுமொத்தத்தில் கிராமப் புறங்களில் எல்லோருமே பாதிக்கப்பட்டிருந்தார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய வீடுகளைத் தவிர மற்றெல்லா வாழ்விடங்களுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்து விளையாடியது. அதனோடு வாழ்வாதாரமும் ஜீவனோபாயமும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட எல்லோரும் நலன்புரி முகாம்களை நாடியிருந்தால் அவர்களைப் பராமரிப்பது அதிகாரிகளுக்கு முடியாத காரியமாகவும் சமைத்த உணவு வழங்குவது என்பது சவால் நிறைந்த ஒன்றாகவும் இருந்திருக்கும். நல்லவேளையாக முன்னர் உள்ள காலங்களைப் போல நிவாரணங்களை வேண்டி நலன்புரி முகாம்களை நாடும் மக்களின் மனநிலை இப்போது மாற்றமடைந்திருக்கிறது. அதனால்தான் இப்பொழுது அகதி முகாம்கள் நிரம்பி வழியவில்லை. அதிகாரிகளும் தப்பித்துக் கொண்டார்கள்.

ஆயினும் வழமை போன்று இடர்கள் இடம்பெறும் காலங்களில் ஒருசில அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதே மனப்பாங்குகளோடுதான் இப்பொழுதும் அந்த அதிகாரிகள் பணியாற்றி வருவது அதிருப்தியைத் தந்திருக்கிறது. "சுற்றுநிருபங்களைக் கடந்தும் சட்ட திட்டங்களுக்கு அப்பாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெகிழ்வுத் தன்மையோடும் ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாய் உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களை எப்படியும் பயன்படுத்தலாம் என்பதில் பலர் கண்ணுங்கருத்துமாய் உள்ளார்கள்.

நிவாரணம் வழங்குகிறோம் என்ற கோதாவில் வந்து வாகனங்களில் ஒலிபெருக்கி சகிதம் சனங்கள் குளிரில் நடுங்கி குந்திக்கொண்டு இருக்கும் போது நடுச்சாமத்தில் அவர்களை தெருவுக்கு வரவழைத்து வீடியோ எடுத்து படம் பிடித்து கடைசியில் ஒரு பக்கெற் நூடில்சும் ஒரு நுளம்புத்திரியும் வழங்கிய சக்தி படைத்த ஊடக நிறுவன அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். இவ்வாறு சனங்களைத் தெருவுக்கு அழைத்து தெருநாய்களுக்கு எலும்புத்துண்டை வீசி எறிவது போல் நடந்துகொண்ட இத்தகைய ஊடக அரசியல்வாதிகளின் அசிங்கத்தையும் மக்களின் அவலத்தையும் எண்ணி வருத்தப்படவேண்டியிருந்ததாக கூறுகிறார் சமூக ஆர்வலரும் ஆய்வாளருமான ஜெகதீஸ்வரி குணசிங்கம்.

பாதிக்கப்பட்ட மக்களது வயிற்றுப்பசியையும் அவர்களது பலவீனத்தையும் எவ்வாறெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

அடுத்த நாள் நிவாரணம் வழங்குகிறோம் என்று கூறி அதற்காக முதல்நாளே மக்களை நீண்ட வரிசையில் நிற்க வைத்த காட்சிகளும் இடம்பெற்றன. எழுநூறு ரூபா பெறுமதியான ஏதோ பொருட்கள் அடங்கிய பார்சல் ஒன்றை வழங்குவதற்காக இரவோடு இரவாக தமிழ் கூட்டமைப்பு அரசியல்வாதி ஒருவர் பிரசாரம் செய்து திரிந்தார். அதேவேளை அந்தப் பார்சலைக்கூட அவரது ஆதரவாளர்கள் கள்ளக் கையெழுத்துப் போட்டுப் பெற்றுக்கொண்டதாக ஊர்மக்கள் நிவாரணப்பொருட்களுக்கு என்ன ஆனது என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இதுதவிர சுமார் 65 இலட்ச ரூபாவுக்கு மேற்பட்ட மதிப்பில் பெருந்தொகையான நிவாரணப் பொருட்கள் சர்வதேச நிறுவனம் ஒன்றினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விநியோகிப்பதற்கென மாவட்ட செயலக அதிகாரிகளுக்கூடாகப் பெறப்பட்டுள்ளது. இது தவிர யுனிசெப் உட்பட ஐக்கியநாடுகள் நிறுவனங்களும் பெருந்தொகையில் நிவாரணங்களை வழங்கியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டமே சமீபத்திய பெருவெள்ளத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி என்கின்ற அடிப்படையில் இன்னும் ஏராளமான உதவிகள் வந்து சேர்ந்திருக்கின்றன. இந்திய அரசின் உதவிகூட கிடைத்திருக்கிறது.

இருந்த போதிலும் இன்றுவரை எதுவிதமான நிவாரணங்களும் கிடைக்காத நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஏராளமான ஏழை எளியவர்கள் எதையாவது எதிர்பார்த்து ஏங்குகிறார்கள். ஒரு புறத்தில் இல்லாத இயலாத மக்களுக்கென ஏராளமான நிவாரணங்கள் வந்து குவிந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் பாதிக்கப்பட்ட வறியவர்கள் தமக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பதனால் தெருவுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்யும் கவலைக்குரிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நிவாரண விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாமல் போனதும் மனிதாபிமான அடிப்படையில் நேர்மையான நிவாரண விநியோகம் இடம்பெறாமல் போனதுமே இத்தகைய குழப்பமான சூழ்நிலைக்கு மக்களை இட்டுச்சென்றுள்ளது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன் — அவலம் 15

**“எடி அக்கா** அங்கை பாரடி... ஐயோ... என்ர குட்டித்தாச்சி ஆடு...”

அவள் கத்தியபடி அந்த இடத்தை நோக்கி வேகமாக நடக்க, அவளுக்குப் பின்னால் அக்காளும் வேகமாக நடந்தாள்.

கடற்புலிகளின் முகாம்மீது விமானத்தாக்குதல் நடந்தபோது, வெடித்த குண்டின் ஒரு சிறு துண்டு ஆட்டின் வயிற்றைக் கிழித்து மறுபக்கமாகச் சென்றதில், ஆடு இறந்துபோய் விட்டிருந்தது. இதில் பால் மடிக்காம்பு ஒன்றும் நறுக்கப்பட்டுப் போனதில், பால்மொச்சையில் இலையான்கள் பரவலாக அதிலும், ஆட்டிலும் மொய்த்தபடி கிடந்தன.

“ஐயோ! என்ர பிள்ளைமாதிரி வளர்த்த ஆடு...” தங்கை அழுத படி.. அந்த இடத்திலேயே குந்திவிட்டாள்.

ஆடு கிடந்த கோலத்தைப் பார்க்க அக்காவுக்குக் குமட்டலும் தலைச்சுற்றும் வருவது போலவும் இருந்தது. ஆட்டைப் பார்த்து அழுதுகொண்டிருக்கும் தங்கையைப் பார்க்க அவளுக்கு பரிதாபமாக இருந்தது. சிறு வயதுப் பிள்ளைகள் இருக்கிற இடத்தில், ஆடு குட்டி போட்டால் பால் எடுத்துக் கொடுக்கலாம் என்று நினைத்திருப்பாள் தனது தங்கையென தன்னுள் எண்ணியவாறே சிலநிமிடங்கள் வரை அந்த இடத்தில் நின்றாள்.

ஆட்டின் மீது இலையான்கள் மேலும் பரவலாக மொய்க்கத் தொடங்குவதைக் கண்டதும்,

“சரி இனி என்ன செய்யிறது? இலையான்கள் மொய்க்குது. எழும்பு.... பிறகு கிடங்கு வெட்டித் தாழ்ப்பம்...” என்று கூறியவள், பக்கத்தில் கிடந்த ஒரு உரப்பை ஒன்றை எடுத்து இலையான்களை பையினால் விசுக்கிக் கலைத்துவிட்டு, ஆட்டின் மீது போர்த்து மூடினாள். பின், தங்கையை அழைத்துக் கொண்டு குசினி வாசலுக்குச் சென்றபோது, குசினிக்குள்ளிருந்து அவர்களது பெட்டை நாய் வெளியே ஓடிவருவதை இருவரும் கண்டார்கள்.

“அடிக்...’ என்று நாயைக் கலைத்துவிட்டு அக்காள் குசினிக்குள் சென்று பார்த்தபோது, அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

“எடி தங்கச்சி... நாய் எல்லாத்தையும் கவிட்டுக் கொட்டித் திண்டிட்டுப் போகுதடி...”

முற்றத்தில் நின்ற தங்கை வேகமாக வந்து குசினியைப் பார்த்தாள். சோற்றுப் பானை நிலத்தில் உடைந்து சோற்றுப் பருக்கைகள் சிதறுண்ட நிலையில், சம்பல் பாத்திரம் அடுப்புச் சாம்பலுக்குள் விழுந்து கிடந்தது. கருவாட்டுக் கோப்பையைக் காணவில்லையென அவள் தேடியபோது, அம்மிக்குப் பக்கத்தில் அது வெறுமையாக கழுவித் துடைத்தது போல் இருந்தது.

குண்டுவெடிப்புக் கேட்டதும், அவசரத்தில் குசினிக் கதவைப் பூட்டாமல் ஓடியது தங்கைக்கு நினைவு வந்தது.

“சரி எல்லாம் போச்சுது. இண்டைக்குப் பட்டினிதான்...” என்று கூறிய தங்கைக்கு இயக்கத்தின் மீதும், கிபிர்க்காரன் மீதும் ஆத்திரம் ஏற்பட்டது. வாயிலே வந்தபடி, இரண்டு பகுதி மீதும் வசைமாரி பொழிந்தபடி... தும்புக்கட்டையால் கொட்டுப்பட்டுக்கிடந்த சோற்றுப் பருக்கைகளைக் கூட்டி அள்ளி முற்றத்தில் நின்ற கோழிகளுக்குப் போட்டாள்.

அக்காள் கேற்றிலைக் கழுவித் தண்ணீர் வார்த்து அடுப்பில வைத்து மூட்டினாள்.

“இப்ப தேத்தண்ணியைக் குடிச்சிட்டு, பொழுதுபட ஏதும் செய்வமக்க...”

“ஓமோம்! இப்ப இருக்கிற மனநிலையில சாப்பிட்டாலும் இறங்காது. பேந்து பார்ப்பம்...”

அக்காளும் கூறிவிட்டு, குழந்தையைப் பார்ப்பதற்காய் பங்கருக்குள் சென்றபோது, தங்கையும் குசினிக்கதவை இழுத்துப் பூட்டிவிட்டு, அக்காளைப் பின் தொடர்ந்தாள்.

அதேசமயம், அவர்களது தெருப்படலையைத் திறந்துகொண்டு ஒருவர் ஒரு துயரச் செய்தியோடு வருவது அவர்களுக்குத் தெரியவில்லை.

“பிள்ளை! தங்கச்சி... எங்கை ஒருத்தரையும் காணேல்லை?” பங்கருக்குப் பின்புறமாக இருந்து ஒலித்த குரலைக் கேட்டு தங்கை “ஆர் அது கூப்பிடுறது...? எனக் குரல் கொடுத்தாள்.

குரல் வந்த திக்கை அறிந்து, வந்தவரும் பங்கருக்கு முன்பாக வந்து, குனிந்து பங்கருக்குள் நுழைந்தார்.

“அட... முருகேசண்ணையே! என்ன இந்தப் பக்கம்....?” சகலனின் மனைவி கேட்டாள்.

வந்தவர் சற்றுத் தயங்கிவிட்டுக் கூறினார்.

“உங்கட தம்பி காயப்பட்டு, இப்ப மாத்தளன் ஆஸ்பத்திரியில இருக்கிறார். நான் இஞ்சாலப் பக்கம் ஒரு அலுவலா வாறதை அறிஞ்சு பெட்டையளின்ர ‘பேஸ்’ இருந்ததாம். அதுக்கு அடிச்சதில இவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர் எழும்பி பங்கருக்குள்ள ஓடுறதுக்கிடையில ‘பீஸ்’ பட்டிட்டுது எண்டு கொம்மா சொன்னவா.”

“கடவுளே என்ன இது? இண்டைக்கு ஒரே இழவு பாடான செய்தியளாக்கிடக்குது...”



கொம்மா ஒருக்கா உங்களிட்டை சொல்லிவிடச் சொன்னவா.”

அவர் சொன்னதைக் கேட்டதும் அக்காளும்-தங்கையும் பதறிப் போய்விட்டார்கள்.

“என்னது.. தம்பிக்குப் காயமோ? எங்க காயம்? எப்ப நடந்தது?” அக்காளும்-தங்கையும் மாறி மாறி வந்தவரை வினாக்கணையால் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

“கொஞ்சம்பொறுங்கோ.. பதறாதையுங்கோ... பயப்படாதையுங்கோ... பெரிய சீரியஸான காயமில்லை. தொடையில தான் ஒரு சின்னக் காயம். இப்ப மருந்து கட்டிவிட்டிருக்கு...”

வந்தவர் ஆறுதலாகவும் நிதானமாகவும் கூறிய போதிலும், அக்காளுக்கும் தங்கைக்கும் படபடப்புக் குறையவில்லை.

“எங்கை நடந்ததாம்...?” அக்கா கேட்டாள்.

‘ஆனந்தபுரத்தில அவற்ற மனிசி வீட்டை இருக்கேக்கை கிபிர் அடிச்சதில சின்னப்பீஸ் ஒண்டு பட்டிட்டுது. பக்கத்தில



என்று கூறிய அக்காள், உடனே தங்கையையும் கூட்டிக்கொண்டு மாத்தளனுக்கு வெளிக்கிட ஆயத்தமாகினாள்.

“ எடி அக்கா! இந்த மனி சனை இப்படி விட்டிட்டு நான் என்னெண்டுவாறது. நீ போய் பார்த்திட்டு வாக்கா.”

செய்திகொண்டு வந்தவர் அப்போதுதான் அங்கு படுத்திருந்த தங்கையின் கணவனைப் பார்த்தார்.

“என்ன ஆள் படுத்திருக்கிறார்? உடம்புக்கு ஏதும் சுகமில்லையே?”


“ஓமண்ணை. இண்டைக்கு இஞ்சாலப் பக்கம் கிபிரடி நடந்திருக்கு. பக்கத்தில குண்டடிச்சதில இவர் ஏங்கிப் போனார்...” தங்கை கூறினாள்.

வந்தவர், உடனே எதுவும் கூறவில்லை. சிறிது வினாடி அமைதியாக இருந்துவிட்டுக் கூறினார்.

“நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு போகுது. சுதந்திரபுரத்தை பாதுகாப்பு வலயமாக அரசாங்கம் பிரகடனப் படுத்திப்போட்டு, அதுக்குள்ள இருந்த சனத்துக்கு மேல, ஆமியைக் கொண்டு ஆட்லறி ஷெல்லுகளை அடிச்சதில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட சனங்கள் செத்துப் போச்சுதாம். சிதறிப்போன உடம்புகளை அப்படியே விட்டுப்போட்டு சனங்களெல்லாம் எழும்பி ஓடிவருதுகள். உங்கை இரணைப்பாலை றோட்டைப் பார்க்க வேணும். தேர்த்திருவிழாவுக்கு நிண்ட சனங்கள் மாதிரி நிற்குதுகள்; போகுதுகள்; வருகுதுகள்.”


“அப்பவே என்ரை ஆள் சொன்னவர்தானே. சுதந்திரபுரத்துக்கை போய் இருக்கச் சொல்லுறாங்கள். உதுக்குள்ள ஏதோ சூழ்ச்சி இருக்குது. அது நடக்கப் போகுதெண்டு....” அக்காள் கூறினாள்.

**அவலம் தொடரும்....**



கண்ணாடி ஒரு 'விந்தைப்பொருள்' என்று சொல்லலாம். நீராலோ அல்லது நெருப்பாலோ சேதமடையாது, பூச்சி, புழுக்களால் அரிக்க முடியாது, இதில் மின்சாரம் பாயாது, அமிலங்களால் அழிக்க முடியாது, லேசானது, ஒளி ஊடுருவி செல்லக்கூடியது

## கண்ணாடி




என இப்படி ஏகப்பட்ட சிறப்புகள் கண்ணாடிக்கு இருக்கிறது. கண்ணாடி செய்யும் கலை பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது. ஆனால், சரியான காலத்தை கணிக்க முடியவில்லை. சுமார் 4 ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் செய்யப்பட்ட கண்ணாடி தாயத்துகள், மணிகள், ஆபரணங்கள் போன்றவற்றை எகிப்திய பிரமிட்டுக்களில் இருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் கண்ணாடியை ஒரு ஆடம்பரப்பொருளாகத்தான் பயன்படுத்தினார்கள். மன்னர்கள் மட்டுமே கண்ணாடிக் கோப்பைகளில் மதுஅருந்த முடியும் என்ற நிலைமை இருந்தது. இந்த நிலையை மாற்றி, சாதாரண மக்களும் கண்ணாடியை பயன்படுத்த வகை செய்த பெருமை பொனீவியர்களையும், சிரியர்களையும் சேரும். சுத்தமான மணல், சுட்ட சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக்கல், சோடா ஆகியவற்றை சரியான அளவுகளில் கலந்து கண்ணாடி தயாரிக்கிறார்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

*நெருப்புக்கோழி, மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்
*அன்னாசிப் பழத்தில் விதை கிடையாது.
*ஒளிச் சிதறலைக் கண்டுபிடித்தவர், சேர். சி.வி.ராமன்.
*அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி, அன்னை தெரசா.
*கலர் ரி.வி.யை முதன்முதலில் உலகத்திற்கு அறிமுகம் செய்த நாடு, பிரான்சு.
*மழையின் அளவைக் கண்டறிய உதவும் கருவி, ரெயின்கேஜ்.
*ராணித்தேனீயின் ஆயுட்காலம், 3 - 4 ஆண்டுகள்.
*உலகின் மிகப்பெரிய நதி, நைல்.
*மனிதன் முதன்முதலாகப் பயன்படுத்திய தினை வகை, கோதுமை.
*சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1838.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.02.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.876
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 874

**பரிசுக்குரியவர்:** சு.விதுஷன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்

01. அ.ஜான்சலீன்,கந்தசாமி வீதி கந்தரோடை, சுன்னாகம்.
02. வா.ஜெனனி, 70/20 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
03. அ.சோபிகன், நுணாவில்மேற்கு, சாவகச்சேரி.
04. அ.கீர்த்திகாயா/நவாலிசெண்பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை.
05. அ.அருண்மொழி,பேசாலை, மன்னார்.
06. கு.காதீசன்,இறம்பைக்குளம், வவுனியா.
07. ப.தாரணியன்,வாழைச்சேனை, மட்டக்களப்பு.
07. செ.குமாரிகா,வெள்ளவத்தை.

## எது சொத்து?

வெற்றி, எண்ணத்தைப் பொறுத்திருக்கிறது

நெப்போலியன்

பாப்பா முரசு சிறுகதை



**முனுசாமி** ஒரு ஏழை விவசாயி. அவருக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். ஒரு-வரும் பொறுப்பின்றி அடிக்கடி அடிதடி சண்டையில் இறங்கிக் காலத்தை வீணாகக் கழித்தனர். முனுசாமி, தாயில்லாத தன் மகன்களுக்காக பெரிதும் வருந்தினார். அவர்களை நல்வழிப்படுத்த முடியாமைக்காக மனம் விட்டு நாள்தோறும் அழுதார். இப்படி இருக்கையில் ஒருநாள் முனுசாமி திடீரென்று நோய் வாய்ப்பட்டார். நாளுக்கு நாள் அவர் உடல்நிலை மோசம் அடைந்தது. பிள்ளைகள் அவரைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. சில நாட்களில் முனுசாமியின் உடல்நிலை மிக மோசமானது. தான் உயிருடன் இருக்கமாட்டேன் என்று நினைத்த முனுசாமி, கடைசி காலத்திலாவது மகன்களைத் திருத்த விரும்பினார். நான்கு மகன்களையும் அருகில் அழைத்தார்.

தன்னிடம் பெரும் சொத்து இருப்பதாகவும், அதை அவர்களுக்கு கொடுக்க விரும்புவதாகவும் கூற, நான்கு மகன்களும் போட்டி போட்டுக்கொண்டு அப்பாவின் முன் கைகட்டி வாய் பொத்தி நின்றனர். இந்த உலகை நினைத்து முனுசாமி சிரித்துக் கொண்டார். அவர் மகன்களோ, "அப்பா ஏதோ நமக்குத் தெரியாமல் புதையல் வைத்திருக்கிறார்" என்றும், அது இருக்கும் இடம்கூறி பிரித்துக் கொடுக்கவே அழைக்கிறார் என்றும் நினைத்து மகிழ்ச்சியுடன் நின்றிருந்தனர்.

என் செல்ல மகன்களே! என் சொத்தை இப்போது உங்களுக்கு காட்டப்போகிறேன். அதன்படி நடந்தால் நீங்கள் வாழ்வில் எப்போதும் வெற்றி பெறலாம். இந்த சொத்து மற்ற சொத்துக்களைப் போல் செலவு செய்ய செய்ய கரையாது. கவலையே வேண்டாம். நான் கொடுக்க இருக்கும் சொத்தை வாழ்க்கையில் சரியாகப் பயன்படுத்துவீர்களா?" என்று கேட்கவும், நான்கு புதல்வர்களும் சரி என்பதாக வேகமாகத் தலை ஆட்டினர்.

இப்போது முனுசாமிக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க ஆரம்பித்தது. நான்கு மகன்களும் அப்பாவிடம் பிரியமாக வந்து ஒருவன் அவர் மார்பை நீவி விட, அடுத்தவன் தண்ணீர் கொடுக்க, இன்னொருவன் அவர் கால்களை மெல்ல அமுக்கிவிட, கடைசி மகனோ அப்பாவின் கட்டளைக்காக காத்து நின்றான். அப்போது நால்வரையும் பார்த்து, "இதுவே என் சொத்து" என்று கூறி இரு கைகளையும் உயரேத் தூக்கினார் முனுசாமி. ஒரு கை நன்கு மூடி இருந்தது. அடுத்த கை நன்கு திறந்திருந்தது.

"என்ன இதுவா சொத்து?" என்று மூத்த மகன்கள் கோபத்துடன் தந்தையைப் பார்க்க, நான்காவது மகன் மட்டும், "அப்பா, இப்படி நீங்கள் செய்ததின் பொருள் என்ன?" என்று கேட்டான்.

மகனே! "எப்போதும் வாயை மூடியே வைத்திரு" என்பதை என் மூடிய கை உணர்த்தியது. அதேபோல் "எப்போதும் இதயத்தை திறந்து வை" என்பதை என் திறந்த கை உணர்த்தியது" என்று முனுசாமி கூறவும், அவர் உயிர் பிரியவும் சரியாக இருந்தது. நான்காவது மகன் யோசித்தான்.

"கோபம் தலைக்கேற, அதனால் வாய் வார்த்தை முற்றிதானே சண்டை வருகிறது. வாயை மூடிக்கொண்டால் சச்சரவுக்கும், அதனால் விளைகிற பிரச்சினைகளுக்கும் வழியே இல்லாமல் போதும் அல்லவா? அதே போல் 'இதயத்தைத் திற' என்று கூறினார். நம் இதயத்தைத் திறந்திருந்தால் அனைவரையும் அன்புடன் அரவணைத்துச் செல்லும் பண்பு பிறக்கும். அதனால் அனைவரின் அன்பும், நேசமும் நமக்குக் கிடைக்கும்.

எதிரி என்று யாரும் இருக்கமாட்டார்கள். வாழ்வும் மகிழ்வாகவும், வளமுள்ளதாகவும் இருக்கும். போட்டியும், பொறாமையும், சண்டையும், சச்சரவும் இல்லாத நட்பும், அன்பும் கூடிய வாழ்க்கைதான் இனிக்கும். அந்த வாழ்க்கை தான் உண்மையில் விலை மதிக்க முடியாத சொத்தாகும். இதைத்தான் நமக்கு அப்பா கொடுத்துச் சென்றுள்ளார்" என்று கூறினான் கடைசி மகன். மற்ற மூவரும் அதை உணர்ந்து, நான்கு மகன்களும் அப்பா தந்த சொத்துபடி வாழ்ந்தனர். ■



## கிளியக்கா...


அக்கா அக்கா கிளியக்கா
அழகிய பச்சைக் கிளியக்கா
கொத்தும் மூக்கோ
சிவப்பக்கா
கொஞ்சும் 'கீ... கீ...'
குரலக்கா...

கொய்யாப் பழத்தைக்
கொத்துகிறாய்
குழந்தை போல தத்துகிறாய்
உச்சி மரத்தில் அமர்கின்றாய்
ஊரைச் சுற்றி பறக்கின்றாய்...

சோலைக்குள்ளே
சுதந்திரமாய்
சுற்றித் திரிவாய் கிளியக்கா
பாப்பா நானும் உன்போல
பறந்திட ஆசை கிளியக்கா...

## பொருத்துக

இங்குள்ள நான்கு படங்களில், பறவையின் தலைப்பகுதியை சரியாகக் கண்டுபிடித்துப் பொருத்துங்கள்.




## நிலாவினால் பூமிக்கு ஆபத்து




விண்வெளியில் பல்வேறு விந்தையான செயல்கள் அடிக்கடி நடந்துகொண்டே இருக்கும். விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும். விஞ்ஞானிகள் அவற்றைக் கண்டுபிடித்து சொல்வார்கள். அப்படித்தான் நிலவால் பூமிக்கு ஆபத்து வரும் என்று சில விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். உண்மையிலேயே நிலவால் பூமிக்கு எந்த ஆபத்தும் கிடையாதாம். ஆனால், நிலாவின் ஈர்ப்பு விசையால் பூமியின் சுழற்சி வேகம் குறையும் என்பது மட்டும் உண்மை. அதற்காக நாம் பயப்படத் தேவையில்லையாம். காரணம், நிலவின் ஈர்ப்பு விசையினால் பூமி சுழல்வது வேகம் நூறு வருடத்திற்கு இரண்டு மில்லியன் வினாடிகள்தான் குறையுதாம். இதில் சுவாரசியமான இன்னொரு விடயமும் இருக்கிறது. 900 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பூமி இதைவிட வேகமாக சுற்றியிருக்குமல்லவா? அப்போது ஒரு வருடத்திற்கு 481 நாட்கள் இருந்துச்சிதாம். அதேபோல ஒரு நாளைக்கு 18 மணி நேரம்தான். ரொம்ப ஆச்சரியமாக இருக்குதல்லவா?

மனித உடலில் எந்த இடத்திலும் கல் உருவாகலாம். சிறுநீர் பையில், சிறுநீரகத்தில், சிறுநீர் பாதையில் கல் உருவாவது சகஜம். 'கிட்னி ஸ்டோன்' என்பதால், அது சிறுநீரகத்தில் மட்டும் தான் ஏற்படும் என்று கருதக் கூடாது. சிறுநீரை வெளியேற்றக் கொண்டு செல்லும் பாதையில் ஏற்படலாம். சிறுநீரைத் தேக்கி வைக்கும் பையில் ஏற்படலாம். சிறுநீரை வெளியேற்றும் இறுதி உறுப்பில் ஏற்படலாம். மிகச்சிறிய கல்லாகவும் தோன்றலாம். ஒரு எலுமிச்சை அளவுக்கும் ஏற்படலாம். கல்லின் அளவைப் பொறுத்து, வலியின் தீவிரம்

அடிக்கடி வெகுநேரம் சிறுநீரை அடக்குபவர்களுக்கோ கூட, கரைப்பான்கள் சுரப்பதில் பிரச்சினை ஏற்படும். மூட்டு வீக்கத்தால் பாதிக்கப்படுபவர்களின் உடலில் உப்பு அதிகம் சுரப்பதாலும், சிறுநீரகத்தில் கல் உருவாகும்.

எந்த அறிகுறியும் தெரியாத சிறுநீரகக் கல்லை, அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் அல்லது எக்ஸ்-ரே எடுத்து பார்த்து அறிந்து கொள்ளலாம். வலி போன்ற பொதுவான அறிகுறிகளைச் சொன்னாலே, கல் இருக்கிறதா என்பதை பரிசோதிக்க, இது போன்ற பரிசோதனைகளை எடுக்குமாறு, டாக்டர் பரிந்துரைப்பார். சில நேரங்களில், ஐ.வி.பி.,

# சிறுநீரகக் கல் உருவாவது எப்படி?




இருக்கும் எனக் கருதுவது தவறு. பெரிய கல், வலியே இல்லாமல் வளரலாம். கண்ணுக்கே தெரியாத சிறிய கல், அதிக வலி கொடுக்கலாம். கல் உருவாவதால் ஏற்படும் வலியை, பிரசவ வலியோடு ஒப்பிடலாம். எவ்வளவு பெரிய பலசாலியையும் ஆட்டிப் போட்டு விடும் இந்த வலி.

சிறுநீர் செல்வதில் சிரமம் ஏற்படுவதில் தொடங்கி, இருபக்க இடுப்பின் பின் பக்கத்திலிருந்து அலைபோல வலி உருவாகி, பிறப்புறுப்பு வரை பரவும். சிரமப்பட்டு வெளியேற்றப்படும் சிறுநீர் அதிக மஞ்சள் நிறத்துடன் காணப்படும். சிலருக்கு சொட்டு சொட்டாகவும் வெளியேறும். இதனால் தொற்று ஏற்பட்டால், காய்ச்சல் உண்டாகும். வெப்பப் பகுதிக ளில் வசிப்போருக்கு, உடலில் நீர்ச்சத்து குறையும் போது, இதுபோன்று கற்கள் அடிக்கடி ஏற்படும். 40 - 60 வயதுள்ள ஆண்களிடையே இந்த உபாதை அதிகம் காணப்படுகிறது. பரம்பரையாகவும் இது ஏற்படலாம். கல் உருவாகி, சிகிச்சை எடுத்துக்கொண்டோரில் 50 சதவீதத்தினருக்கு, 10 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் கல் தோன்ற வாய்ப்பு உண்டு. உடலில் உள்ள மொத்த இரத்தமும், சிறுநீரகம் வழியே செல்கிறது. இரத்தத்திலிருந்து நீரையும், இரசாயனங்களையும், சிறுநீரகம் பிரிக்கிறது. இரசாயனங்கள் கல் ஆகாமல் இருக்க, சிறுநீரகமும் சில கரைப்பான்களை சுரக்கிறது. அதையும் மீறி தோன்றும் சிறு கல்கள், ஒன்றாகச் சேர்ந்து பெரிய கல்லாக உருவாகிவிடுகின்றன. சிறுநீரகத்தில் கரைப்பான்கள் சுரப்பதில், பரம்பரையாகத் தடை கொண்டவர்களுக்கு, கல் உருவாவது சகஜம். அடிக்கடி தொற்று ஏற்பட்டாலோ, சிறுநீர் அடர்த்தியாக இருந்தாலோ,

என்ற, நரம்பில் சாயம் ஏற்றி, கல் இருக்கும் இடத்தையும், அதன் அளவையும் கண்டறியும் பரிசோதனையும் செய்யப்படுகிறது. கற்களை நீக்க, பெரும்பாலான நேரங்களில் கடுமையான சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. நாள் ஒன்றுக்கு, நான்கைந்து லீற்றர் தண்ணீர் குடிப்பவருக்கு, சிறுநீரகத்தில் கல் இருந்தாலும், சிறுநீர் மூலம் வெளியேறிவிடும். வலி ஏற்பட்டால், வலி நிவாரணி மாத்திரைகள் சாப்பிடலாம். கல்லில் உள்ள இரசாயனங்கள் குறித்து அறிந்துகொண்டால், அதை வைத்து மருந்து, உணவுக் கட்டுப்பாடுகளை டாக்டர் பரிந்துரைப்பார். தொடர்ந்து கடும் வலி, மிகப்பெரிய கல் ஆகியவை இருந்தால், அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே அதை அகற்ற முடியும். கல் வளர்ந்து கொண்டே இருப்பது, தொடர் தொற்று ஆகியவை, சிறுநீரகத்தை பாதிக்கும் என்பதால், இதுபோன்ற நிலைகளில், அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. சிறுநீரகத்தை திறந்து, அறுவை சிகிச்சை மேற்கொள்வது இல்லை. கல் இருக்கும் இடத்தில், உடலின் மேற்புறம், மின் அலைகள் உருவாக்கப்படுகிறது. இந்த அதிர்வலைகள், கல்லைத் தாக்கி, அதை உடைக்கின்றன. பொடியான கற்கள், சிறுநீர் வழியே வெளியேறிவிடும். சிறுநீர் பாதையை கல் அடைத்து கொண்டால், செயற்கை குழாய் பொருத்தி கல்லை அகற்றலாம். வேறு சிகிச்சை முறைகளும் உள்ளன. இந்த உபாதை, 21ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருத வேண்டாம். 7,000 ஆண்டுக்கு முன்னால் இறந்த மனிதர்களிடமும் இது காணப்பட்டது. தற்போது சிறு வயதினர், குறிப்பாக குழந்தைகளிடமும் இந்த உபாதை காணப்படுகிறது.

# திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு




ல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

அம்மா அப்பாவைப் பார்த்தாள்.

"பூலான் நீ போய் ஒழிந்துகொள்!" என்று காதருகில் சொன்னார் அப்பா. மிகவும் பயந்திருந்தார். குரல் நடுங்கியது.

"வேண்டாம் அப்பா, உங்களை விடமாட்டார்கள். கதவைத் திறவுங்கள், நான் இங்கேயே நிற்கிறேன்"

"பூலான் அப்பா சொல்வதைக் கேளடி!"

"வேண்டாம் அம்மா"

"ஐயோ அப்பா சொன்னது மாதிரி கேளடி!"

கதவை இடிக்கத் தொடங்கிவிட்டார்கள். நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தன.

"திற கதவை, திற கதவை!" என்று கதவை இடிக்கும் நாய்களும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் வீட்டின் பின்புறமாக ஓடினேன். அங்கே விறகுக் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதன் பின்னால் மறைந்து கொண்டேன்.

கதவு திறக்கப்பட்டு கொள்ளைக்கோஷ்டி வீட்டுக்குள் புகுந்துவிட்டது என்பது புரிந்தது.

"பூலான் எங்கே' என்று யாரோ ஒரு நாய் கத்திக் கேட்கிறான்.

"இந்த கிழடுகள் இரண்டையும் கட்டிப்போடுங்கடா!" என்று யாரோ ஒரு மகன் கத்துகிறான்.

வீட்டுக்குள் ஏதோ உருண்டு விழும் சத்தம் "ஐயோ... அது என் தம்பி சிவநாராயணனின் குரல். அவனை இந்த வேசி மக்கள் என்ன செய்கிறார்கள்?

"அடியே பூலான், சிறுக்கி வேசி, இங்கேதான் எங்கேயோ நீ ஒளிந்திருக்கிறாய். நாங்கள் யாரும் உன்னை தேடமாட்டோம். உன் ஆத்தாளும், அப்பனும், உன் தம்பிப் பயலும் கொஞ்சம் கொஞ்சமாக சாகப்போகிறார்கள். இவனைத் தலைகீழாக தூக்கிக் கட்டடா. சிறுக்கி ஒளிந்து கிடக்கிறாளா, வெளியே வருகிறாளா பார்க்கலாம்."

கத்தியவன் வீட்டின் பின்புறம் தலையை நீட்டி சுற்றிலும் நோக்கினான்.



பரட்டைத் தலை. பெரிய தாடி. முகத்தைப் பார்க்கவே கொடூரமாக இருந்தது.

இவன்தான் பாபுசிங் குஜாராக இருக்க வேண்டும்.

"அ...அ... ஐய்யய்யோ..." உயிர்போவது போல தம்பி கத்திய சத்தத்தில் அந்தப் பிரதேசமே ஆடிப்போனது போல இருந்தது.

எனக்கா- என் ஒருத்திக்காக என் குடும்பமே அழிவதா?

கொள்ளையர்களை நான் சந்திக்க விரும்பினேன். ஆனால் இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

எலியும் பூனைகளும் போல சந்திக்க வேண்டி வரும் என்று நினைக்கவில்லை.

தலையை நீட்டியவன் உள்ளே போய்விட்டான்.

"ஐயோ... என் பிள்ளை!" அம்மாவின் கிரீச்சிட்ட குரல் காற்றைக் கிழித்துக்கொண்டு கேட்கிறது.

நான் மறைவில் இருந்து வெளியே வந்தேன்.

விடுவிடுவென்று நடந்து வீட்டுக்குள் போனேன்.

பரட்டைத் தலையன் பார்வை என் மீது படிந்தது. என்னால் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"நான்தானடா பூலான். விடுங்கடா அவர்களை!"

அத்தனைபேரும் என்னை நோக்கித் திரும்பினார்கள்.

அந்தப் பரட்டைத் தலையனும் அவனது ஆட்களும் என்னை நோக்கித் திரும்பினார்கள்.

என் தம்பியை வீட்டிற்குள் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டிருந் தார்கள்.

அம்மா அழுது மன்றாடிக்கொண்டிருந்தார். அப்பாவை இரண்டுபேர் பிடித்திருந்தார்கள்.

"வந்திட்டாயா, வா... வா.... வாடி!" என்று இளித்துக்கொண்டு என்னிடம் வந்தான் ஒரு பரட்டைத் தலையன். அவன் கையில் நீளமான துப்பாக்கி வைத்திருந்தான்.

"அக்கா, ஓடிப்போ... அக்கா, அக்கா..." என்றான் தலைகீழாகத் தொங்கிய தம்பி. அதற்காக முதுகில் உதைபட்டான்.

நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். என் அருகில் வந்த பரட்டைத் தலையனை நேராகப் பார்த்தேன்.

"உனக்கு நான்தானே வேண்டும்? இவர்களை ஏன் போட்டு வதைக்கிறாய்? நான்தான் வந்துவிட்டேனே!"

பரட்டைத் தலையன் தன் நாக்கை நீட்டி தன் உதடுகளை ஈரப்படுத்திக்கொண்டு, என்னை விழுங்குவது போல் பார்த்தான்.

"நீ... நீதான் வேண்டும். நான் யார் தெரியுமா? குஜார், பாபுசிங் குஜார்!"

தன் பெயரைச் சொல்லும் போதே பெருமையாகச் சொல்லிக்கொண்டான். தன் பெயரைக் கேட்டதும் நான் பயந்துவிடுவேன் என்று எதிர்பார்த்தான் போலும்.

"தெரியும்!" என்றேன் நிதானமாக.

"தெரியுமா? என்னைத் தெரியுமா? எப்படி? எப்படித் தெரியும்? எப்படி, எப்படி?"

"அதுதான் கடிதம் அனுப்பியிருந்தாயே?"

"ஓ...ஹோ. ஓ.... ஹோ. உனக்குப் பயமே இல்லையா?"

"இல்லை! நீ என்ன என்னைத் தின்னவா போகிறாய்?" என்று கேட்டதும் வீடே இடிந்து விழும்போலச் சிரித்தான். தன் ஆட்களை நோக்கித் திரும்பினான்.

"அந்தப் பயலை அவிழ்த்து விடுங்கடா" சொல்லிக்கொண்டே என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டை விட்டு முற்றத்துக்கு வந்தான். முற்றத்திலும் பாபுசிங் குஜாரின் ஆட்கள் நின்றிருந்தனர்.

"பேசாமல் வந்தாய் என்றால் இப்படியே உன்னைக் கொண்டுபோவேன். சத்தங்கித்தம் போட்டு தகராறு பண்ணினாய் என்றால், உடம்பில் பொட்டுத் துணி கூட இல்லாமல்தான் கூட்டிப்போவேன்.

(திருப்பங்கள் தொடரும்...)

# காவலன் ஒரு புதிய அனுபவம் - விஜய்.

என் படம் வெளியரக் கூடாது. எனது சினிமா வாழ்வை பாழ்படுத்த வேண்டும் என சில வேண்டாத சக்திகள் சதி செய்வது எனக்குத் தெரியும். அவர்களை என் ரசிகர்கள் துணையுடன் முறியடிப்பேன். என்று கூறியுள்ளார் நடிகர் விஜய்.
விஜய் நடித்த காவலன் படம் பெரும் சர்ச்சைகளுக்கு நடுவில்வெளியாகியுள்ளது. படம் பரவலான வரவேற்புடன் ஓடிக் கொண்டிருக்கிறது. சமீப காலத்தில் விஜய் நடித்த படங்களில் இது பரவாயில்லை என்று விமர்சனங்களில் கூறப்பட்டு வருகிறது. இந்த நிலையில், இந்தப் படம் குறித்து பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன. படத்தின் பாதாதைகள் அகற்றப்படுவதாக ரசிகர்கள் புகார்கள் பதிவு செய்து வருகின்றனர். இந்த நிலையில் தனக்கு எதிராக மிகப் பெரிய சதி நடந்து வருவதாக விஜய் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது.
எனது திரையுலக வாழ்க்கையில் இத்தனை பெரிய பிரச்சினைகளைச் சந்தித்த பிறகு ஒரு படம் வெளியாவது இதுவே முதல்தடவை.
பொதுவாக ஒரு படம் வெளியாகும் போது சில பிரச்சினைகள் வருவது சகஜம் தான். பின்னர் அவை தீர்க்கப்பட்டுவிடும். ஆனால் காவலன் விடயத்தில், பிரச்சினை தீரக்கூடாது என முடிவு செய்து பலர் வேலை செய்தனர். இந்த சதியில் பல விரும்பத்தகாத சக்திகளின் கை இருப்பது எனக்கும் தெரியும். அவர்கள் யார் என்பதும் தெரியும். ஆனால் இவர்களை எனது ரசிகர்களின் துணையுடன் நான் எதிர் கொள்வேன். அந்த வகையில் காவலன் எனக்கு ஒரு புதிய அனுபவம்தான். என்றார் விஜய்.



# சிம்புவை எச்சரித்த பிரபுதேவா!

நயன்தாரா பற்றிய ரகசியங்களை சிம்பு தனது நண்பரிடம் கூறி வருவதை அறிந்த பிரபுதேவா, சிம்புவைக் கூப்பிட்டு எச்சரித்துள்ளார். 'வல்லவன்' படத்தின் மூலம் சிம்பு-நயன்தாரா இடையே ஏற்பட்ட பழக்கம், பின்னாளில் காதலாக மாறியது. இருவரும் மிகநெருக்கமாக இருந்த காட்சிகள் வெளியானதால் இவர்கள் இடையே பிரச்சினை உருவானது.
பின்னர் இருவரும் பிரிந்தனர். அதன் பின்னர் பிரபுதேவாவுடன் காதல் வயப்பட்டார் நயன்தாரா. தற்போது இருவரும் திருமணம் செய்ய உள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பித்து விட்டன இந்நிலையில் இம்முறை புதிதாக மற்றொரு பிரச்சினை கிளம்பியுள்ளது நயன்தாராவுக்கு அதாவது நயனின் முன்னாள் காதலரான சிம்புவுக்கும் நனய்தாராவிற்கும் இடையேயான நெருக்கம் மற்றும் நயன்தாரா பற்றிய ரகசியங்களைத் தமது நண்பரிடம் கூறி வருகிறாராம் சிம்பு. இந்த செய்தி எப்படியோ பிரபுதேவாவின் காதுக்கு எட்ட மிகவும் கடுப்பாகிப்போன பிரபுதேவா, சிம்புவை பார்த்து முடிஞ்சது முடிஞ்சு போச்சு. நீ ஒண்ணும் வாயைத் திறக்க வேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

# 'இளைஞன்' படத்திற்கு சோதனை

கலைஞர் கருணாநிதியின் திரைக்கதை வசனத்தில் பல கோடி ரூபா செலவில் உருவான 'இளைஞன்' படத்தை திரையிடப்பட்ட இரண்டாம் நாளே சில தியேட்டர்களில் இருந்து தூக்கி விட்டார்களாம். இதனால் அதிர்ந்து போயிருக்கிறார் இளைஞன் படத்தின் நாயகனும் பாடலாசிரியருமான பா.விஜய்.
தனக்கு தெரிந்த சில தியேட்டர் காரர்களை அவர் தொலை பேசியில் விசாரித்தபோது படம் நன்றாகதான் இருக்கிறது. ஆனால் பெரிய நடிகர்களின் படங்கள் ரிலீஸ் ஆகிற நேரத்தில் இப்படத்தை வெளியிடாமல் தனியாக வெளியிட்டிருந்தால் பெரிய அளவுக்கு பெயரை சம்பாதித்திருக்கலாம் என்று கூறியிருக்கின்றார்கள் இதனால் குழப்பத்தில் இருக்கின்றார் இளைஞன் பா.விஜய்.



# பாவனாவின் வெற்றிப் பயணம்

ஒரு வாசல் அடைக்கப்பட்டால் கடவுள் பல வாசல்களை திறப்பார் என்று கூறுவார்கள் இது பாவனாவின் வாழ்வில் நியமாக நடந்திருக்கின்றது.தமிழ் திரையுலகில் தீபாவளி, சித்திரம் பேசுதடி, அசல்,ஆரியா, வாழ்த்தக்கள் போன்ற பல படங்களில் நடித்தாலும் தமிழ் திரையுலகு பாவனாவை கண்டுகொள்ளவில்லை.
இருந்தாலும் தற்போதைய நிலைவரப்படி மலையாளத்திலும், கன்னடத்திலும் இவர்தான் நம்பர் வன் நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கின்றார். மலையாளத்தில் பாவனா நடித்த 'ஹேப்பி ஹஸ்பண்ட்ஸ்' 'மேரிக்குண்டொரு' 'குஞ்ஞாடு பம்பர்' ஆகியவை மாபெரும் வெற்றி பெற்றுள்ளன.கன்னடத்தில் பாவனா நடித்த முகல் படமான 'ஜாக்கி' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது.
முதல் படத்தில் புனித் ராஜ்குமாருடன் ஜோடி சேர்ந்தவர் தற்போது உபேந்திரா ஜோடியாக நடிக்கிறார். வெற்றிகள் வெளி மாநிலத்தில் தொடர்ந்தாலும் தமிழும், தெலுங்கும் தான் பாவனாவின் இலக்கு. இடந்த இரண்டும் தான் பணம் காய்க்கும் மரங்கள் என்பதை பாவனா நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்.

# வம்சம் நாயகனின் உ

வம்சம் படத்தின் மூலம் திரையுலகில் அறிமுக கிய அருள்நிதி தற்போது வம்சம் படத்துக்கு ஏராளமான பலரிடம் கதைகளை கேட்டு வரு சாப்ளின் என்ற அறிமுக இயக்குனர் இயக்கு படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.
அருள்நிதியின் தந்தையான மு.க தமிழழரசு இந்தப்படத்தைத் தயாரிக்க இருக்கின்றார். நகரத் மையமாக வைத்து இந்தப் படம் உருவாகிறது. இந்தப் புதிய படத்துக்கு உதயன் என்று பெயர் வைத்துள்ளனர். விரைவில் படப்பிடிப்பு தொடங்கு இந்த படம் முடிந்த பிறகு அறிவழகன் இயக்கத்தி அருள்நிதி நடிப்பார் என தெரிகிறது.


## தங்கைக்காக அக்கா சிபாரிசு

பழனி படத்தின் மூலம் அறிமுகமாகிய காஜல் அகர்வால் பல வெற்றிப் படங்களில் நடித்திருக்கின்றார் குறிப்பாக 'மோதி விளையாடு', 'நான் மகான் அல்ல' படங்களில் நடித்துள்ள காஜல் அகர்வால் தற்போது தெலுங்கிலும் பந்தய குதிரை யாக ஓடிக் கொண்டிருக்கிறார்.

இவரது தங்கை நிஷா அகர்வால். மும்பையில் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார். பத்திரிகை ஒன்றில் அட்டை படமாக நிஷாவின் போட்டோ வந்ததும் தெலுங்கு படத்தில் கதாநாயகியாக அறிமுகப்படுத்தப்பட்டார்.

தற்போது தமிழ் பக்கம் அவர் தனது கவனத்தை திருப்பி இருக்கிறார். அதற்கு அக்கா காஜலின் ஆதரவும் முழுமையாக கிடைத்திருக்கிறது.

தன்னிடம் கால்ஷீட் கேட்டு வரும் தயாரிப்பாளரிடம் கால்ஷீட் இல்லை என்று கூறாமல் அருகில் இருக்கும் தங்கையை காட்டி, 'இவருக்கு இந்த கதை பொருத்தமாக இருக்கும். அவளிடம் கதை சொல்லுங்கள்' என்று வாய்ப்புகளை திருப்பி விடுகிறாராம் காஜல். கூடியவிரைவில் நிஷா அகர்வால் தமிழ் ரசிகர்களின் மனதை கொள்ளையடிக்க வருவார் என்கிறது சினிமா வட்டாரம்.





# புத்தாண்டுக்கு 'அவன் இவன்'

பாலா இயக்கத்தில் ஆர்யா, விஷால் நடிக்கும் 'அவன் இவன்' படத்தின் படப்பிடிப்பு படு வேகமாக நடந்து வருகிறது. தொடர்ந்து குற்றாலம், செங்கோட்டை பகுதிகளில் படப்பிடிப்பு நடக்கிறது.

படம் கிட்டதட்ட முடிந்த நிலையில் விரைவாக போஸ்ட் புரொடக்சன் வேலைகளை முடித்து தமிழ்ப் புத்தாண்டுக்கு படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளார் பாலா.

பொதுவாக பாலா படம் என்றால் வருடக்கணக்கில் படப்பிடிப்பு நடக்கும். இந்த தாமதத்தை பாலாவின் குரு பாலுமகேந்திரா உட்பட பலரும் சுட்டிக் காட்டியதன் விளைவு, தனது அவன் இவன் படத்தை ஆறு மாதத்தில் முடிப்பதாக பாலா அறிவித்தார்.

ஆனால் ஆறு மாதம் கடந்துவிட்டது. என்றாலும் மற்றப் படங்களுடன் ஒப்பிடுகையில் மிக விரைவாக அவன் இவன் படப்பிடிப்பு நடந்து வருகிறது. வரும் ஏப்ரலில் படத்தை வெளியிட முடியும் என்ற நம்பிக்கை தயாரிப்பாளருக்கு ஏற்பட்டுள்ளதால் பட வெளியீட்டுக்கான வேலைகளை இப்போதே தொடங்கியுள்ளனர்.

## கச்சேரியில் பாடுகிறார் சரண்யா


சினிமாவில் நடித்துக்கொண்டே, மேடை கச்சேரிகளில் பாடிவருகின்றார் சரண்யா மோகன். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்: தமிழில் நிறைய வாய்ப்புகள் வருகிறது.

அதிக படங்களில் நடிப்பதைவிட, அழுத்தமான பாத்திரங்களில் நடிக்க வேண்டும் என்பதே எனது ஆசை. 'அழகர்சாமியின் குதிரை', 'வேலாயுதம்' போன்ற படங்களில் எனது பாத்திரங்கள் வித்தியாசமாக இருக்கும்.

மலையாளத்தில் இயக்குனர். பாசில் என்னை குழந்தை நட்சத்திரமாக அறிமுகம் செய்தார். இப்போது அவரே என் சகோதரி சுகன்யாவை கதாநாயகியாக அறிமுகம் செய்கிறார். நானும், சுகன்யாவும் சங்கீதம் கற்றுள்ளோம். 'யுவ கலா பவன்' என்ற குழுவை தொடங்கி, கேரளாவில் மேடை கச்சேரிகளில் நானும், சுகன்யாவும் பாடி வருகிறோம். என்றார் சரண்யா மோகன்.



# 110 ஆண்டுகளாக எரியும் மின்விளக்கு



**குறைந்த** அதி சிறந்த பொதுவாக நமது வீடுக-ளிலும் மின் விளக்குகளை பயன்படுத்துகிறோம். அவற்றை நாம் அதிக மாக இரவுகளில் மட்டுமே பயன்படுத்துவது வழக்கம். அந்த இரவு நேரங்களிலும் சில மணிநேரங்களை பயன்படுத்துகிறோம். ஆனால் ஒரு மின்விளக்கு நூறு ஆண்டுகளையும் கடந்து இன்னும் அணையா மல் எரிந்துகொண்டிருக்கிறது என்றால் நம்புவீர்களா?!!!

இந்த பழமை வாய்ந்த அதிசய மின் விளக்கு அமெரிக்காவில் வடக்கு கலிபோர்னியாவில் உள்ள லிவர்மோர் தீயணைப்பு நிலைய வண்டியில் பொருத்தப்பட்டு உள்ளதாம். இந்த அதிசய மின் விளக்கை அடோல்ப் சைலெட் என்ற கண்டுபிடிப்பாளர்தான் உருவாக்கி இருக்கிறார். இந்த விளக்கில் என்ன சிறப்பு என்றால் இந்த விளக்கை உருவாக்க இருபத்தி எட்டு மாதங்கள் (2.4 வருடங்கள்) ஆகியதாம். அது மட்டும் இல்லாது இந்த விளக்கைப் போன்று மற்றொரு விளக்கை எப்பொழுதும் யாரும் உருவாக்கவே இயலாத வகை யில் இந்த விளக்கைத் தயாரிக்க உதவும் குறிப்புகளை இந்த அடோல்ப் சைலெட் எரித்துவிட்டாராம்.

அதுமட்டும் இல்லாது இதே போன்ற விளக்கை இனி வரப்போகும் எந்த மனிதராலும் உருவாக்க இயலாது என்றும் அவரின் குறிப்பில் எழுதி இருந்தாராம். இதை ஒரு மிகப்பெரிய சவாலாக எண்ணி அமெரிக்காவில் ஒரு குழு பல வருடங்களாக இந்த விளக்கை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இதுவரை வெற்றிபெற இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக அந்த குழுக்கள் கொடுத்த அறிக்கையில் இப்போதைய நிலையில் இந்த விளக்கை உருவாக்குவது என்பது சாத்தியமற்றது என்று கூறி இருக்கிறார்கள் என்றால் பார்த்துகொள்ளுங்கள். இந்த விளக்கில் எவ்வளவு மர்மங்கள் மறைந்திருக்கும் என்று. அடோல்ப் சைலெட் என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த மின்விளக்கு முதன் முதலில் 1901ஆம் ஆண்டு எரியத் தொடங்கி இப்போது நூற்றிப் பத்து வருடங் களையும் தாண்டி இன்னும் எந்தவித தடங்கலும் இன்றி எரிந்துகொண்டே இருக்கிறதாம். இந்த அதிசயத்தை பார்க்கவரும் மக்களின் எண்ணிக்கை மட்டும் நாள் ஒன்றிற்கு பல ஆயிரங்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

# நிசப்த இரவுகள்

முற்றுகைக்குள்
விழித்திருந்தும்
தூங்கமறுத்து
இமை மூடாத
அந்த இரவுகளை
மனம் இன்னும்
அசைபோடுகின்றது...

முடங்கிப்போன
முப்பொழுதுகளும்
அச்சத்தின்
ஆக்கிரமிப்பில்
ஆடை
மாற்றிக்கொள்கின்றன.

தூக்கமும்
ஏக்கமும் தஞ்சமின்றி
துஞ்சமறுக்கின்றன

அச்சத்தின்
சுவடுகளில்
அடுத்த வேளைகள்
அகலக்கால் பதிக்கின்றன.

அந்த இருண்ட
இரவின்
நகர்வுகள்
இம்சைகளையே...
பிரசவிக்கின்றன.

க.நாகேஸ்வரா–சண்டிலிப்பாய்

# நீயும் நானுமாய்!

உன்னை நினைக்கையில்,
என்னுள் அழுகிறேன்!
நீயும் நானுமாய்
நீரும், மீனுமாய்...
தேனும் பாலுமாய்...
தெவிட்டாக் கரும்புமாய்...
கமழும் மலர்களில்
தவழும் காற்றுமாய்.
வெயிலிலும் மழையிலும்
குடை கரம் போன்றுமாய்...
மரமும் நிழலுமாய்...
மலையும் முகிலுமாய்
நாசித் துளைகளாய்..
நயனப் பார்வையாய்..
வேம்பிலும் ருசியேற்றி,
இருளிலும் ஒளிகாட்டி,
முட் புதரிடையிலும்
முனைந்து வழிகாட்டி....
நடந்தவை, நனைந்தவை
நனவிலே கிடந்தவை...
நினைவுகளாகி என்
கனவுகள் தொடுகையில்...
என் நெஞ்சப் பஞ்சறை
கொஞ்சம் கொஞ்சமாய்
பிய்வதை உணர்கிறேன்!
ஏக்கப் பெருமூச்சில்
என்னை நான் மறக்கிறேன்!
சலிப்பு நீர்ப் பொய்கையில்
சதாவும் குளிக்கிறேன்!
நீயும், நானுமாய்
நாமாய் வரும்வரை!

ஏறாவூர் தாஹிர்

# பேதையவள் போதை

பெண்ணென்ற படைப்பை
கண்கொண்டு பார்த்ததில்
பேதையவள் போதை
தந்தாள்...

மலராயிருந்து மௌன
புயலடித்தாள்...
புன்னகையிழையிலே... – என்
புவியை பூகம்பமாக்கிவிட்டாள்...
கன்னக்குழி அழகே...– என்
கண் கண்டு
ரசித்ததாலோ... – என்
கல்வியில் குழி
தோண்டிவிட்டாய்..
பெண்ணே...

யாழ்.அஞ்சனா
காரணவாய் மேற்கு

# பிரிவு

மழை குடையை
நனைத்தது.
என் உதடுகள் – உன்
கன்னத்தை நனைத்தன.
மழையும் நின்றது நீயும்
சென்றாய் – இதுவரை
மழையும் வரவில்லை...
நீயும் வரவில்லை...
பழைய நினைவுகளோடு – நான்
மட்டும் குடையோடு காத்திருக்கிறேன்
உனக்காகவும்...
மழைக்காகவும்...

நெடுந்தீவு–முகிலன்

# தேன் கிண்ணம்

## புரட்சியாளனின் காதல்

ஒரு புரட்சியாளனின்
இதயத்துள் காதலை விதைத்த
கடவுளே...
ஏன் கண்ணீர் பூக்களை வளர்த்தாய்?

சில நிமிடங்களுக்காவது
ஆறுதல் சொல்ல யாருமில்லை
வெறும் போலி வேஷத்துள்
வாழ்வு உருள்கிறது.

ஆனாலும்
என் சமூக சிந்தனையில்
இன்றும்
சலனமற்றவனாக வாழ்ந்து விடுகிறேன்

கடைசியாகச்
காதலின் வரைவிலக்கனம்
தேடி
இன்னுமொரு
சேகுவேராவாக வாழ்கிறேன்
இந்த சமூகப் புரட்சியாளன்!

எஸ்.பி.பாலமுருகன்

# காதல்

கையில்
துப்பாக்கிகள் இல்லை
இதன் அதிகாரத்துக்கு
நாங்கள் கட்டுப்படுகிறோம்

கையில்
செங்கோல் இல்லை
இதன் யாப்புக்குள்
நாங்கள் ஆட்சி செய்கிறோம்

கையில்
சட்டப் புத்தகம் இல்லை
இதன் நீதிமன்றத்தில்
நாங்கள் குற்றவாளிகளாகிறோம்.

கையில்
வரலாறுகள் இல்லை
இதன் பாதையில்
நாங்கள் சரித்திரமாகின்றோம்.

அன்பொன்றைத் தவிர
இதன் கையில் ஒன்றுமில்லை
இதற்கு நாங்கள்
முகவரிகளாகின்றோம்.

தி.பவித்திரன்,
திருகோணமலை.

ஸ்டைல் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...



**பெண்கள் உரிமைகள் சமவாயம் - உறுப்புரிமை 14:02:05**

**தொழிலின் அல்லது சுயதொழில் ஊடாக பொருளாதார வாய்ப்புக்களை சமநிலையில் பெற்றுக்கொள்வதற்காக சுய உதவிக் குழுமங்களையும் கூட்டுறவு அமைப்புக்களையும் ஒழுங்கமைப்புச் செய்தல்.**




# குடும்பமும் பெண்களும்

**கால ஓட்டத்தின்** மாற்றத்திற்கேற்ப மாறும் நிலையில் நாமும் மாறித்தான் ஆகவேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. அந்த மாற்றத்தில் பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அந்தவகையில் பெண்களது வாழ்க்கை முறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்தியது. பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண் வேலைக்குப் போவதால்தான் குடும்ப உறவு சீரழிகிறது. பிள்ளைகள் சீரழிந்து போகின்றனர். தீயபழக்க வழக்கங்களால் அழிந்து போகின்றனர். சமுதாயம் நலிந்து போகிறது என்ற பரவலான கருத்துக்கள் நிலவுகிறது. இவர்கள் பெண்களுக்கு முன் வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்திற்கு அப்பால் உள்ள உலகத்திலுள்ளும் தனது பங்களிப்பை செய்யவிளையும் போது குடும்பம் பல பிரச்சினைகள் எதிர்நோக்கும். காலங்காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும் போது அவ்வேலைகளில் குறைபாடும், நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது பிரச்சினைகளும் மறைந்து போகும்.

இப்பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையாக கருத முடியாது. குடும்ப அமைப்புகளை பேணுவதற்கு பெண்களை மீண்டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது. அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பது தான் வழி என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

குடும்பம் இன்றைய ஜனநாயக சமூக அமைப்பினுள் உள்ள ஒரு வடிவம் என்பதால் குடும்பத்தில் கணவன், மனைவி குழந்தைகளுக்கிடையிலான உறவினையும் ஒரு ஜன நாயகப் பிரச்சினையாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று மாக்ஸியப் பெண்ணிலைவாதிகள் ஒரு பிரிவினர் கருதுகின்றனர். 'புதிய ஜனநாயகத்தை' சீனாவில் அறிமுகப்படுத்துகையில் குடும்ப வேலைப் பிரிவினை மற்றும் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையிலான உறவில் சமத்துவம் என்பவற்றைப் பேணுவது பற்றிக் குறிப்பிட்டார். ஜனநாயக பூர்வமான அடிப்படையில் குடும்பம் அமைதி காணமுடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.



எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே தான் இருக்கின்றது.

ஏனெனில் எந்த தாயும் தன் குழந்தை நல்லவனாய் இருப்பதைத்தான் விரும்புவாளே தவிர தீயவனாய் அவனை வளர்க்க விரும்புவதில்லை. எந்தக் குழந்தையும் பிறக்கும் போதே நீதிமானா கவோ, கல்விமானாகவோ பிறப்பதில்லையே. அவர்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தானே அவர்களின் செயற்பாடுகளும் வெளிப்படுகின்றது. அவ்வாறு எந்த ஒரு சூழ்நிலையையும் ஒரு தாய் நினைத்தால் அதைச் குழந்தைகளுக்கேற்ற சிறந்த சூழ்நிலையாக அதை மாற்றி அமைக்க முடியும் என்று கூறலாம். குழந்தை தன் தாயிடமிருந்து கற்றுக் கொள்ளும்



# அன்னை வளர்ப்பினிலே.....

வாழ்க்கைப் பாடம் தான் கடைசிவரை கூடவே வரும் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வாறு ஒரு தாயிடமிருந்து பெறப்படும் அன்பு, பெருமை, சகிப்புதன்மை, விருந்தோம்பல், முன்னெச்சரிக்கை, சேமிக்கும் திறன், போன்ற அரிய பல பழக்கவழக்கங்களும், நல்லொழுக்கமும் ஒருங்கே அமைந்த ஒரு மனிதனால் தான் வாழ்க்கையில் சிறப்படையை முடிகின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

என்னதான் வேலைக்கு போகும் தாய்மார்களாகட்டும் ஒரு குழந்தையானது தந்தையிடமும் இன்னும் மற்ற உறவினரிடமும் செலவிடும் நேரத்தைவிட தாயிடமே அதிக நேரம் செலவிடுவதால் அக்குழந்தையின் வளர்ச்சியில் அதிகம் அந்த தாயே பொறுப்பேற்கின்றாள். பொதுவாக ஒரு குழந்தையின் வளர்ச்சியில் தாயின் பங்கைப்பற்றி எவ்வளவு கூறினாலும் மிகையாகாது.

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி: த.பெ.இல : 167,யாழ்ப்பாணம்.

# அழகுக் குறிப்புகள்

*பற்கள் பளபளப்பாக இருப்பதற்கு எலுமிச்சை சாற்றுடன் உப்பு கலந்து பிரஷ் செய்யவும் பற்கள் பளபளப்பாக இருக்கும்.

*கசகசாவை ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவி, காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.

*தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

*பப்பாளிப் பழச்சாற்றை முகத்தில் தடவினால், வியற்குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்

*தோடம்பழச் சாற்றை முகத்தில் தடவி 20 நிமி டம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாக பொலிவுடன் தோன்றும்.

*பயித்தம் மாவுடன் சிறிது பிரஷ் கிரீம், சிறிது எலுமிச்சை சாறு, சிறிது கிளிசரினை கலந்து முகத்தில் பூசி தினமும் பத்து நிமிடம் ஊறவைத்து கழுவி-னால் நீண்ட நாளாயிருக்கும் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கும்.

*பயத்தம் மாவுடன் தயிரைக் கலந்து முகத்தில் பூசி அரை-மணி நேரம் ஊறவைத்து கழுவி வந்தாலும் கரும்புள்ளிகள் மறையும்.



**பெண்களுக்கு** எல்லா பருவத்திலும் அவர்கள் வாழும் சூழ்நிலையப் பொறுத்து மன அழுத்தப் பிரச்சினைகள் தொடந்த வண்ணம் தான் இருக்கின்றது. அதில் திருமணமான பெண்கள் என்றால் அவர்களுக்கு பொதுவாக கணவன் மனைவிக்குள் எழும் கருத்து வேறுபாடு, குழந்தை வளர்ப்பு, எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை, என்று ஏதாவதொரு விடயத்தில் தொடந்து இந்த மன அழுத்தத்திற்குள் ஆட்படுத்தப்பட்டுத் தான் வாழுகின்றாள். அதோடு மட்டுமல்லாமல் அதனால் பல்வேறு உடல் உபாதைகளுக்கும் ஆளாகின்றார்கள்.

திருமணமாகாத பெண்கள் என்றால் அவர்களுக்கு இச்சமுதாயம் தரும் பிரச்சினையிலிருந்து, மேலும் அவள் தன்னை காத்துக் கொள்ள அவள் எடுக்கும் எல்லா முயற்சியிலும் அவளும் மன அழுத்தத்துடனே வாழும் கட்டாயத்தில் தள்ளப்படுகின்றாள். மன அழுத்தம் இல்லாத பெண்களே இருக்க முடியாதுதான். என்றாலும் எல்லாவற்றிற்கும் தீர்வு

# பெண்களுக்கேற்படும் மன அழுத்தம்

ஒன்று உண்டு என்பதை நம்பினால் கட்டாயம் அப்பிரச்சினையிலிருந்து விடுபடலாம். பொதுவாக மனஅழுத்தம் உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, ஞாபக மறதி, இரத்தஅழுத்தம், அஜீரணம் போன்ற வயிற்று உபாதைகள், இருதய நோய், போன்ற பல்வேறு நோய்கள் தாக்கப்படுவதுடன், சிலர் தீவிர மனச்சிதைவிற்கும் ஆளாகிவிடுவார்கள். அவைகள் யாவும் ஏற்படுவதற்கு மூல காரணமே அவர்களுக்கிருக்கும் மன அழுத்தம் தான் என்பதை அறிந்து செயற்பட்டால் அதற்கு பிறகு வரும் பல இன்னல்களை தவிர்த்து விடலாம் மேலும் இவ்வாறு ஏற்படும் மன அழுத்தத்தின் விளைவுகள் யாவும் உடலில் ஏற்படும் பல்வேறு ஹோர்மோன்களின் மாற்றங்களும் ஒரு காரணம் என்பதையும் அறிந்துகொண்டால் பிறகு அதிலிருந்து தங்களை முழுவதுமாக காத்துக் கொள்ள முடியும்.



# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 255**

கேள்வி : முகத்தில் சுருக்கம் இல்லாமல் இருக்க என்ன செய்யவேண்டியது என்ன?


பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 255**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **09.02.2011**
சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 253 இற்கான விடை:-போலிக் அமிலம்
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி -செ. கஜேந்தினி, இறம்பைக்குளம், வவுனியா.

255
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................

# யார் தவறு? உண்மை என்ன?



CHAMINDA VASS
'ஒதுக்கலா'

இவ்வருடம் நடைபெற இருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்ளும் ஒவ்வொரு அணியிலும் இடம்பிடிக்கப் போகும் இறுதிப் பதினைந்து பேர் யார்? என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வமே இப்போது மேலோங்கியுள்ளது. இந்த வகையில் சில அணிகள் அந்த மர்ம முடிச்சை அவிழ்த்துள்ளன. அதில் இலங்கை அணியும் ஒன்று. பொதுவாக ஒரு அணித்தெரிவென்று வரும்போது எல்லோரையும் திருப்திப்படுத்துவதாக அணியைத் தெரிவு செய்வது என்பது தேர்வாளர்களால் சாத்தியமாகாதவிடயம் தான். இலங்கை அணியிலும் இந்த நிலை இல்லாமற் போகவில்லை. அணித்தெரிவின் முன்னரே இளமையா அனுபவமா என்றொரு சர்ச்சை உருவாகி யது. 30 பேர் கொண்ட குழுவில் சனத்ஜெயசூரியாவும், சமிந்தவாசும் இணைக்கப்பட்டபோது இந்த ஆர்வம் பெரிதும் அதிகரித்தது. ஆனால் இறுதி அணித்தெரிவு வெளியிடப்பட்டபோது சனத், மற்றும் வாஸ் இருவரும் நீக்கப்பட்டிருந் தார்கள். இங்கு இப்போது பரவலாக எழுந்துள்ள விவாதம் சமிந்தவாஸ் நீக்கப்பட்டது சரிதானா? என்பதுதான். இங்கு பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. "இரண்டு அனுபவம் நிறைந்த வீரர்களை நீக்கும்போது தெரிவுக்குழு மிக உணர்வுமயமானதாக இருந்தது. எனினும் ஒட்டுமொத்த அணி என்றுவரும்போது இது தவிர்க்க முடியாததாக இருந்தது" என்கிறார் அரவிந்த டீ சில்வா. ஆனால் பெரும்பாலானோர் சமிந்தவாஸ் நீக்கவிடயத்தில் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. லசித் மாலிங்க, நுவன் குலசேகர உள்ளிட்ட ஏனைய பந்துவீச்சாளர்கள் பற்றிய சர்ச்சை இல்லை. ஆனால் உள்ளடக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் அனைவரிலும் பார்க்க சமிந்த எவ்வாறு கடை நிலைக்கு உள்ளானர் என்பதில் தான் விடைதெரியாத வினாக்கள் எழுகின்றன.தேர்வாளர்கள் கருத்துக் கூறும் போது, மலிங்கவுடன் இணைந்து பந்து வீச நுவன் குலசேகர அல்லது சமிந்த வாஸ் என்ற கணக்கில் நுவன் குலசேகர தெரிவாகியது சரியே என்றாலும் இன்னொருவருடைய உள்வாங்கல் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கிவிட்டது. அவர்தான் டில்ஹரா பெர்னாண்டோ. பொதுவா - கவே டில்ஹரா கட்டுக்கோப்பான பந்துவீச்சாளர் அல்ல என்றும் தொடர்ச்சியாக அணியில் இடம்பிடித்துக் களமிறங்கும் வீரரும் அல்ல என்பது வாதம். இதில் நிறையவே உண்மைகள் உண்டு. அப்படியிருக்க வாஸ் எப்படி டில்கராவை விட தகுதி குறைந்துவிட்டார் என்பதற்கு யாரும் இலகுவில் பதில் அளித்துவிட முடியாதுதான். இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் நல்ல திறமைசாலிகள் அவர்கள் எல்லாவற்றையும் துல்லியமாகக் கண்டுபிடிப்பார்கள். எனவே சமிந்தவாசுவுக்கு நடந்தது என்னவென்று எல்லோருக்கும் புரியும். சிலவேளை உலகக் கிண்ணப்போட்டிகள் நிறைவடைந்த பின் சமிந்தவாஸ் உள்வாங்கப்படாதது எவ்வளவு பிழையானது என்பது பல்வேறு தரப்பாருக்கும் புரியக் கூடும். அப்போது லயத்தில் இருந்து குதிரை வெளியே ஓடியிருக்கும்.

# தாயகம் நோக்கி

சிரித்துக்கொண்டே கோல் போடும் ஒரு சர்வதேச உதைபந்தாட்ட வீரரென்றால் அவர் பிரேசில் நாட்டின், மற்றும் பார்சலோனா கழகத்தின் முன்வரிசை வீரர் றொடினால்டின்னோ தான். கடந்த பத்து வருடங்களாக ஐரோப்பியக் கழகங்களில் தூள் கிளப்பிய இவர் தற்போது தன் தாயகமான பிரேசில் திரும்பி அங்குள்ள முன்னணிக் கழகமான பிளமிங்கோ அணியில் ஆடப்போகிறார். அதாவது 2014 உலகக் கிண்ண அணியில் இடம்பிடிக்கும் உத்வேகத்துடன் இம்முடிவை அவர் எடுத்துள்ளார்.

றொனால்டினோ 2004, மற்றும் 2005 **FIFA** இன் அதிசிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதைத் தட்டிச் சென்றவர். 2002 ஆம் ஆண்டில் யப்பான் மற்றும் தென்கொரியாவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றபோது பிரேசில் கிண்ணம் வெல்லக் காரணமாக அமைந்தவர் இவர். ஆனால் 2006இல் ஜேர்மனியில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் போது இவரும் சோபிக்கத் தவறினார். பிரேசிலும் கால் இறுதிப் போட்டியுடன் வெளியேறியது. அதன்பின் ஏதோ காரணங்களால் தேசிய அணியில் இவரது நெருக்கம் குறைவாகவே காணப்பட்டது. இதன் காரணமாக 2010 உலகக் கிண்ண பிரேசில் அணியில் இவர் இடம்பிடிக்கவில்லை. (இது தவறொன்று பின்னர் உணரப்பட்டது) அதெல்லாம் பழைய கதையாகிப் போக, புதிய சுறுசுறுப்புடன் தன் இலக்கு நோக்கி அடி எடுத்து வைக்கிறார். றொனால்டினோ. இவரது ஆரம்பகால உதைபந்தாட்ட வாழ்க்கை பிரேசிலின் கிரிமியோ கழகத்துடன் ஆரம்பமாயிற்று. பின்னர் பிரான்சிய கழகமொன்றில் 2001 இல் இணைந்த இவர் அங்கிருந்து பார்சலோனா அணியில் இணைந்து கொண்டார். இந்தக் காலகட்டமோ இவரின் உதைபந்தாட்ட வாழ்வின் பொற்காலமாக அமைந்தது. 2006 இல் பார்சலோனா சாம்பியன் லீக் வெற்றிக் கிண்ணம் பெறவும் இவரே முன்னணி வீராகவும் இருந்தார். இதன் பின் அண்மைக் காலத்தில் ஏ.சி. மிலான் அணியில் இணைந்து றொனால்டினோ தற்போது சரியான நடைமுறைகளின் ஊடாகத் தாயகக் கழகமொன்றில் விளையாடவிருக்கிறார். புகழ்பெற்ற அட்கியானோ எவ்வாறு நீண்டகாலம் ஐரோப்பாவில் விளையாடி, பின்னர் தாயகம் திரும்பித் தேசிய அணியில் இடம் பிடித்தாரோ அதனையே நானும் செய்யப் போகிறேன் என்கிறார்.



RONALDINHO
'மீளவும் வருவான்'

றொனால்டினோ இலகுவில் புறந்தள்ளக் கூடிய ஒரு வீரர் அல்ல என்பதைச் சர்வதேச உதைபந்தாட்ட உலகம் நன்கறியும். 2010இல் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஒரு பதில் நியாயம் தன்னிடத்தே இருக்கிறது என்பதை நிரூபிக்க இவர் புறப்பட்டிருக்கிறார். 2014 இல் பிரேசில் தேடிய அணியில் றொனால்டினோ இருக்க வேண்டும் என்பதே எல்லோரது அவாவாகும்.

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# இணைப்புப் பாலம்

மக்காயா என்ரினி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். இருவாரங்களுக்கு முன் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான இருபதுக்கு இருபது போட்டியே இவரது இறுதி ஆட்டமாக அமைந்தது. அன்றைய தினம் டர்பன் மைதானத்தில் கூடியிருந்த ஐம்பதாயிரம் ரசிகர்களிடம் இவர் விடைபெற்றுக்கொண்டார். ஒற்றுமையின் ஒரு குறியீடாகவே பார்க்கப்படுகிறார் என்பது ஒரு விஷேடம். இனவெறி நாடென சுட்டப்பட்ட தென் ஆபிரிக்காவின் அரசியல் மாற்றங்கள் எல்லோரும் சமம் என்ற வழியை ஏற்றுக்கொண்ட காலகட்டத்தில் தன் இனத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தி நின்றவர் என்ரினி. மிகத் திறமை வாய்ந்த கறுப்பின வீரர்கள் முன்னெப்போதோ நிறையவே கிரிக்கெட் வீரர்கள் அச்சப்படும் அளவிற்கு திறமையான வேகப்பந்து வீச்சாளராகியமை இவரது தனித்திறமை.

முப்பத்திமூன்று வயதில் ஓய்வு பெறும் இவர் தனது பன்னிரண்டு வருட கிரிக்கெட் வாழ்வில் நூற்றியொரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 390 விக்கெட்டுக்கள் சரித்தவர்.

இவரது கிரிக்கெட் வாழ்வு விளையாட்டுடன் மட்டுமல்ல தென்னாபிரிக்க சமூக மாற்றத்துடனும் தொடர்புபட்டது. தென்னாபிரிக்க அணியில் இடம்பிடித்த இரண்டாவது கறுப்பின வீரர் என்ற பெருமை இவருக்குண்டு. (முதலாவது கறுப்பின வீரர் என்கின்ற பெருமை போல் அடம்ஸ் என்கின்ற சுழல் பந்துவிச்சாளனையே சாரும். 95 ஆண்டு அளிமுகமாகி 45 டெஸ்ட், 24 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய இவரால் என்ரினி போல் பிரகாசிக்க முடியவில்லை மக்காயா தென் ஆபிரிக்கா இன பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்தக் கசப்பான வரலாறு மாறும் போது அதில் பங்கு கொண்டவர் என்ற பெருமை இவருக்குண்டு. இவரது சிறப்பே எவ்வித தாழ்வுச் சிக்கலுக்கும் உள்ளாகாமல் எல்லா இன ரசிகர்களையும் தன் வசப்படுத்திக் கொண்டமையாகும். மைதானத்தில் இவரின் கலகலப்பையும், ஏனை - யோரை மகிழ்விப்பதையும் ரசிகர்கள் நேரடியாகக் கண்டு ரசித்திருப்பார்கள். மிகவும் பின் தங்கிய சூழ்நிலையில் இருந்து வந்த என்ரின் சர்வதேச 172 ஒரு நாள் போட்டிகளில் இவரின் அறுவடை 266 விக்கெட்டுக்கள் மேலும் நான்கு தடவைகள் ஒரு டெஸ்டில் பத்து விக்கெட் சரித்தவர் என்ற பெருமை யும் இவருக்குண்டு. அதில் மிகச் சிறப்பான பந்து வீச்சு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக போட் ஒவ் ஸ்பெயி - னில் 2005 இல் 13 விக்கெட் சரித்தமை குறிப்பிடத்தக்கது, ஆனால் விமர்சகர்கள் மாற்றியோசிக்கிறார்கள். என்ரினியின் கிரிக்கெட் சார்ந்த பங்களிப்பு, வெறும் விக்கெட்டுக்கள், பிடிகள், ரண்கள் மட்டும் பொறுத்ததல்ல. அதற்கும் அப்பால் தென் ஆபிரிக்க இன சௌஜன்யத்துடன் இவர் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியர் என்கிறார்கள். அத்தோடு பின் தங்கிய சமூகங்களுக்கு இவரின் எழுச்சி மிகப்பெரிய முன்மாதிரி என்கிறார்கள். இனச் சிக்கல்கள் நிறைந்து போயிருந்த ஒரு நாட்டில் அவை நீக்கப்படடு இன, நிற, நல்லிணக்கம் ஏற்பட்டுள்ள தருணத்தில் அதன் மிகச் சிறந்த குறியீடாக மக்காயா என்ரின் காணப்படுவதும், அதற்குத் தான் தகுதியானவன் என்பதை மைதானத்திலும், வெளியிலும் நிரூபித்தமையும் இவரின் விஷேடித்த பெருமைக்குக் காரணங்கள் என்று துணிந்து கூறலாம்.



MAKHAYA NTINI
'சமாதானப்புறா'

# வெள்ளமும் விதவைகளும்

**இயற்கை** செயற்கை இடர்கள் என்று எது நடந்தாலும் அவற்றால் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய ஒரு சமூகமாக பெண்களும் சிறுவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது அனைத்துலக நிறுவனங்களின் ஆய்வுகள் புலப்படுத்தும் விடயம். அதிலும் குறிப்பாக விதவைகள் அல்லது பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இத்தகைய பாதிப்புகளுக்கு முகம் கொடுப்பவர்கள் எந்த சமூகத்தினராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

சமீபத்தில் கிழக்கில் ஏற்பட்ட பெருவெள்ளம் மிக இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக அடையாளம் காணப்பட்ட பெண்கள் சமூகத்தினரை குறிப்பாக விதவைகளை மேலும் நலிவடையச் செய்திருக்கிறது.

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளினால் மிக அதிகமாகவும் அதேவேளை மிக மோசமாகவும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களாவர். கணக்கெடுப்பின்படி 89ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளதாக கூறுகிறார் மகளிர் விவகார மற்றும் சிறுவர் நல பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா.

''சுட்ட இடத்திலே சுடும்'' என்பது போல ஆயுத வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களை இயற்கை இடர்களும் விட்டபாடில்லை. தமது குழந்தை குட்டிகளை வளர்ப்பதற்கு

**கடந்த ஒரு மாத காலமாகப் பெய்து வந்த தொடர் மழை வாழ்வாதாரத்தின் மீது மண்ணை வாரிப் போட்டது. ஒரு பக்கம் வயிற்றுப்பசியால் துடிக்கும் பிள்ளைகளின் துயரம். மறுபுறம் அடைமழை வெள்ளத்தினால் அமிழ்ந்து போன தமது குடிசைகளில் கால்நீட்டித் தூங்க முடியாத அவஸ்தை என்று இவர்களது வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருந்தது. ஆண் துணை உள்ளவர்களுக்கு இருந்த வசதி வாய்ப்புகள், சலுகைகள், செல்வாக்குகள் இந்த விதவை சமூகத்துக்கு இல்லாமல் போனதால் அவர்கள் மேலும் நொந்து போக வேண்டி ஏற்பட்டது.**

**கிருபா-ஜனோ]**

நாளாந்த சீவியத்துக்காக இந்தப் பெண்கள் படாதபாடு படுகிறார்கள்.

கடந்தகால கசப்பான பாதிப்புக்களில் இருந்து 'அவர்கள் இன்னும் மீண்டெளவில்லை. தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மனவடுக்களாகச் சுமந்து கொண்டு மறுகையிலே தமது குழந்தைகளுக்கும் இந்த துயரமான வாழ்க்கையின் அனுபவங்களை கற்றுக்கொடுத்துக் கொண்டும் நடமாடுகிறார்கள்.

நாளாந்த ஜீவனோபாயத்தில் இருந்து உண்ணல், உடுத்தல், உறங்குதல், கல்வி, எதிர்காலம் என்று எல்லாமே நம்பிக்கையற்றதாகவும் கேள்விக்குரியதாகவும் இவர்களது வாழ்க்கை அமைந்துவிட்டது.

இத்தகைய விதவைகளைத்தான் இந்தப் பெருவெள்ளம் உருட்டி வாட்டி வதைத்திருக்கிறது.

அடைமழையும் பெருவெள்ளமும் விதவைப் பெண்களின் நாளாந்த ஜீவனோபாயத்தை கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்கி விட்டுச் சென்றிருக்கிறது.

தங்களால் முடிந்தவரையில் தமது பராமரிப்பில் உள்ள பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்த விதவைகள் படாத பாடுபட்டு தமது வாழ்வாதாரத்துக்கான வழிகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஒரு மாத காலமாகப் பெய்து வந்த தொடர் மழை வாழ்வாதாரத்தின் மீது மண்ணை வாரிப் போட்டது. ஒரு பக்கம் வயிற்றுப்பசியால் துடிக்கும் பிள்ளைகளின் துயரம். மறுபுறம் அடை மழை வெள்ளத்தினால் அமிழ்ந்து போன தமது குடிசைகளில் கால்நீட்டித் தூங்க முடியாத அவஸ்தை என்று இவர்களது வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருந்தது.

ஆண் துணை உள்ளவர்களுக்கு இருந்த வசதி வாய்ப்புகள், சலுகை கள், செல்வாக்குகள் இந்த விதவை சமூகத்துக்கு இல்லாமல் போனதால் அவர்கள் மேலும் நொந்து போக வேண்டி ஏற்பட்டது.

மழை வெள்ளத்தோடும் பசி-யோடும் சமூகத்தின் தரக்குறைவான அந்தஸ்துக்கு முன்னாலும் அவர்கள் நலிவுற்றுப் போய் நிற்கிறார்கள்.

இதுவரை அவர்களது வாழ்வாதாரத்துக்காக எஞ்சியிருந்த குடிசைக் கைத்தொழில்கள், வீட்டுத் தோட்டம், கால்நடைகள், கோழி வளர்ப்பு இன்னும் பல வகையான வாழ்வாதாரத் தொழில்கள் எல்லாமே நாசமாகி விட்டன.

இப்பொழுது வெள்ளம் வடிந்து விட்டது. வெயிலும் எறிக்கிறது. நிலைமை சுமுகமாகிவிட்டது என்று பொதுப்படையாகக் கூறினாலும் விதவைகளுக்கான வாழ்வாதாரம் என்பது பெருஞ்சுமையான ஒன்றாகவே இருந்து வருகிறது. விதவைகளில் பலர் கூலி வேலைக்குச் செல்லுதல், விறகு வெட்டுதல், விவசாய உற்பத்திகளுக்கு உதவுதல், மீனவத் தொழில்கள் என்பனவற்றின் மூலமும் தமது காலத்தை கடத்துகிறார்கள்.

விவசாயம் விடுபட்டுப் போன-தால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கூலித்தொழிலும் நெற்கதிர்களைப் பொறுக்கி எடுத்து அதன் மூலம் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாகரைப் பிரதேசமும் உள்ளடங்கும். அங்கு மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு நகர்கிறது என்பதற்கு அங்கு வசிக்கும் நூற்றுக்கணக்கான விதவைகளில் 26 வயதான லெட்சுமியின் வாழ்க்கையும் ஒரு சாட்சி.தனது குடும்பத்திலுள்ள 4 பெண்களில் கடைசியான இவரும் கணவனால் கைவிடப்பட்டவர்.

சகோதரிகளின் மூன்று கணவன் மாரும் ஆயுத வன்முறைகளில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 4 வயதான கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு நிவாரணத்தை எதிர்பார்த்து கிராம சேவகரிடம் வந்தவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. நிவாரணம் இல்லை என்று கிராம சேவகர் திருப்பி. அனுப்பிவிட்டார். எவ்வாறு ஜீவனோபாயம் கழிக-றது என்று பேச்சுக் கொடுத்த போது அடைமழையின் நீண்ட நாள் பட்டினியின் பின்னர் ஒரு நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட 1000 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிக்குள் இருந்த அரிசியைக் கொண்டுதான் உணவு உண்டதாக சொன்னார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பாரம்பரிய கலைவடிவங்கள் தூக்கிநிறுத்தப்பட வேண்டும்

**யாழ்ப்பாணத்தில் குருநகர் மண்ணில் விளைந்த நடிக முத்துகளில் ஒருவர் கலைஞர் உடையார் கி.யேசுராசா. வெளித்தோற்றத்தில் இவரை கலைஞர் ஒருவரென அடையாளம் காணமுடியாது. ஆயினும் எந்தவிதப் பாத்திரங்களையும் இவரைப் போல் இன்னொருவர் செய்துவிட மாட்டார்கள். நாமொரு பாத்திரத்தை அவருக்கு வழங்கினால் எதிர்பார்ப்பதை விடவும் சிறப்பாக அந்தப் பாத்திரத்தை எம்கண்முன் அந்தப் பாத்திரமாகவே மாறி நடித்துக் காட்டும் கற்பனை வளம் கொண்ட கலைஞர் கி.யேசுராசாவை 'தினமுரசு' வாசகர்களுக்காக அணுகிப் பெற்றுக்கொண்ட செவ்வி இது.**

செவ்வி கண்டவர்
**தேவி பரமலிங்கம்**



**கேள்வி:-** கலையார்வம் எவ்விதம் ஆரம்பித்தது?

**பதில்:-** எனக்கு அப்பொழுது பத்துவயது இருக்கும். எங்களூரில் பிரபல நடிகர்களாக விளங்கிய ஜக்டர் ஜேம்ஸ், கட்டப்பொம்மன் யோசெப், பிப்பிசான் பொன்னுத்துரை, விக்டர் போன்றவர்கள் நடித்த நாடகங்களைப் பார்க்க நேர்ந்தது. அவர்களைப் போல நானும் நடிக்க வேண்டுமென்ற இளமைக் கால ஆர்வமே பிற்பாடு நாடகங்களில் நடிக்கும் சூழலை ஏற்படுத்தி அதன் வாயிலாக எமது கிராமமென்று இல்லாமல் குடாநாடு தழுவியமட்டில் பெயர் கூறுத்தக்க கலைஞனாக என்னால் பரிணமிக்க முடிந்ததெனக் கூறலாம்.

**கேள்வி:-** உங்களது குடும்ப உறுப்பினர்கள் எவராவது இத்துறையில் ஈடுபட்டிருந்தனரா?

**பதில்:-** குடும்ப உறுப்பினர்கள் என்று யாரும் ஈடுபட வில்லை. ஆனால் அண்ணா விமார்களா பக்கிரி சின்னத்துரை, கிறிஸ்தோத்திரம் எனது தாய்வழி உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

**கேள்வி:-** இதுவரை எத்தனை நாடகங்கள் மற்றும் நாட்டுக் கூத்துகளில் தோன்றியுள்ளீர்கள்?

**பதில்:-** 58 நாடகங்களுக்கு அதிகமாக நடித்துள்ளேன். பிற்காலத்தில் அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்பாக இருந்துதான் நாட்டுக் கூத்துக்களில் நடிக்கத் தொடங்கினேன். அவ்வகையில் ஒன்பது நாட்டுக் கூத்துக்களில் நடித்துள்ளேன்.

கேள்வி:- இந்நாடகங்கள் மற்றும் நாட்டுக் கூத்துக்களில் உங்களுக்கு பெயர், புகழ் மற்றும் பரிசில்களைப் பெற்றுத்தந்தவையென?

**பதில்:-** 'கண்திறந்தது' 'யேசு நாதர் பேசினார்', 'குமணன்','காணாத தூரம்', 'உயர்ந்த உள்ளம்' போன்ற நாடகங் களும் 'புரட்சித் துறவி', 'போர்க்களம்', 'சங்கிலியன்', தேவசகாயம்பிள்ளை', 'பண்டாரவன்னியன்' போன்ற நாட்டுக் கூத்துக்களும் எனக்குப் பெயர் பெற்றுத் தந்தன. 1968- ஆம் ஆண்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண ரீதியில் நடைபெற்ற நாடகப் போட்டியில் 'கண்திறந்தது' என்னும் நாடகத்தில் நடித்ததற்காக முதலாம் இடம்பெற்றேன். 1966 ஆம் ஆண்டு குருநகர், இளைஞர் கலைக்கழகம் நடததிய நாடகப் போட்டியில் யேசு நாதர் பேசி னார்' மற்றும் 1967 ஆம் ஆண்டு 'குறிஞ்சிமலர்' ஆகிய நாடகங்களில் நடித்தமைக்காக முதலாம் இடங்களைப் பெற்றேன். அதே வருடம் மேற்படி கழகத்தில் நடத்திய நவரச தனி நடிப்புப் போட்டியிலும் முதலாம் பரிசினைப் பெற்றுள்ளேன்.

**கேள்வி:-** இவை தவிர...

**பதில்:-** வெவ்வேறு நாடகப் போட்டிகளிலும் 'முடிவு எங்கே?' 'குமணன்' ஆகிய நாடகங்களில் நடித்தமைக்காக இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளேன். மேலும் 2008 ஆம் ஆண்டு குரு நகர், நாட்டுக்கூத்து மன்றம் பொன்விழா நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அவர்களால் பொன்னாடை போர்த்தி யும், பதக்கம் சூட்டியும் கௌரவிக்கப்பட்டுள்ளேன்.

(தொடர்ச்சி அடுத்தவாரம்...)




"நான் நகைக்கடைக்காரனாக வேடம் போடப் போகிறேன். எனவே, அவன் என்னையும் சேர்த்தே தொலைத்துக் கட்டலாம். முதலில் அதற்கு ஒரு மாற்றுவழி கண்டுபிடிக்க வேண்டும்." புஷ்பராஜ் கூறினார்.

"உண்மைதான். அதற்குச் சரியான மாற்றுவழி இல்லையென்றால் மொத்தத் திட்டமும் பாழாகிவிடும் அதே நேரம் அவன் தன் திட்டப்படி முன்னேறவும் செய்வான்!" தோமஸ், என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார்.

எனவே, தலையைப் பிய்த்துக்கொண்டு அது தொடர்பாக யோசித்தனர்.

காலை நேரம். எட்டு மணி. புஷ்பராஜ் பொலிஸ் கிளப்பிலேயே நேரம் கடத்தினார்.

மறு நாள் அரங்கேறவிருக்கும் விபத்தை எப்படித் தடுப்பது என்பது குறித்து புஷ்பராஜும், தாமஸ் ஜேக்கப்பும் யோசித்தனர்.

காலையில் நகைக்கடை அதிபராக வீட்டுக்கு அருகில் செல்ல வேண்டும். அதற்கு கங்காபிரசாத்தின் காரைத்தான் பயன்படுத்த வேண்டும். அந்தக் காரின் கட்டுப்பாடு கங்கா பிரசாத்தின் ஆட்களிடம் இருக்கும்.

கங்காபிரசாத் வஞ்சகன். அவன் சொன்னபடி நடந்து கொள்வான் என்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமுமில்லை. பிளாக்டைகர் என்று நினைத்திருக்கும் தன்னை அத்துடன் தொலைத்துக் கட்டவும் அவன் ஒரு வேளை திட்டமிட்டிருக்கலாம்.

அப்படி எதுவும் நடக்கக் கூடாது!

மாலை நேரமாவதற்குள் நகைக்கடை முதலாளி தொடர்பான எல்லாத் தகவல்களும் புஷ்பராஜுக்குக் கிடைத்தன.

மணி பன்னிரண்டு பத்து.

துப்பறிவாளர் புஷ்பராஜ், கங்காபிரசாத்தின் யோசனைப்படி பார்க்குக்கு முன்னால் காரை ரிப்போர் செய்யும் பாவனையில் பானெட்டை உயர்த்தி வைத்துக் குனிந்து எதையோ கவனித்துக் கொண்டிருந்தார்.

புஷ்பராஜ் அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை. விரைவிலேயே மோட்டார் பைக் ஒன்று அவருக்கு அருகே வந்து நின்றது.

"உங்கள் கார் ரிப்போராகி விட்டதா?"

"ஆமாம்!"

"அப்படியானால் வாருங்கள்..."

சரியான அந்த நேரம் கார் ஒன்று வந்து நின்றது. பின்புறக் கதவை யாரே திறந்தனர்.

"ம்... ஏறிக்கொள்ளுங்கள்!" பைக்குக்காரர் விண்ணப்பித்தார்.

புஷ்பராஜ் ஏறிக்கொண்டார்.

கார் புறப்பட்டது.

காரின் பின்புற இருக்கையில் ஏற்கெனவே இரண்டு பேர் அமர்ந்திருந்தனர்.முன்புறம் அமர்ந்திருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை. முன்புறம் கனமான திரையால் மறைக்கப் பட்டிருந்தது. காருக்குள் இருட்டு நிரம்பியிருந்தது.

அரை மணி நேரப் பயணத்துக்கப் பிறகு கார் நின்றது. புஷ்பராஜின் கண்களைக் கட்டியபடிதான் காரிலிருந்து அவரை இறக்கி அழைத்துச் சென்றனர். கட்டை அவிழ்த்தபோது கங்காபிரசாத் எதிரில் நின்றுகொண்டிருந்தார்.

"இனி நீங்கள் ஓய்வெடுக்கலாம். நாளைக்கு நீங்கள் நகைக்கடை முதலாளியாகப் பயணப்பட வேண்டுமே. என் நம்பிக்கைக்கு உகந்தவர் உங்கள் டிரைவர்" கங்காபிரசாத் கூறினார்.

புஷ்பராஜ் ஓர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

காலையில் நடைபெறவிருப்பது குறித்து எந்தவிதமான சிந்தனையுமின்றி புஷ்பராஜ் சுகமாகத் தூங்கினார்.

அவரைத் தட்டி எழுப்பியவள் ஒரு பெண்மணி.

அவளை அப்போதுதான் முதல் தடவையாக அவர் பார்த்தார். அழகி. வயது இருபதுக்கு மேல் மதிப்பிட முடியாது.

அவள் கொடுத்த தேநீரை பருகிவிட்டு, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு புஷ்பராஜ் பாத்ரூமை நோக்கி விரைந்தார்.

குளித்துவிட்டு வரும்போது காலைச் சிற்றுண்டி தயாராக இருந்தது. அதைப் பரிமாறியவளும் அவளேதான்.

"உன்பெயர்?" புஷ்பராஜ் கேட்டார்.

"இங்கு என் பெயர் சாந்தினி!" அவள் சிரித்தாள்.

"அப்படியானால் நீயும். என்னைப் போல்தான் இல்லையா?" புஷ்பராஜ் அவளைத் தலையிலிருந்து கால்வரை பார்த்தார்.

சிவந்த நிறம். மெலிந்த உடல். அழகி.

ஏதோ ஒரு சோப்பு விளம்பரத்தில் அவளைப் பார்த்திருப்பதாகப் புஷ்பராஜுக்குத் தோன்றியது.

"இங்கு எப்படி?" புஷ்பராஜ் வார்த்தையை முடிக்கவில்லை.

அவள் சற்றுமுற்றும் பார்த்தாள். நெருங்கி வந்தவள், "வேலை கேட்டு வந்துதான்!" அவள் மென்மையான குரலில் பேசினாள்.

"படித்திருக்கிறாயா?"

"எம்.எஸ்.ஸி.கெமிஸ்ட்ரி"

"உன்னைப் பார்த்தால் அவ்வளவு படித்திருப்பதாகச் சொல்ல முடியாது!"

"இதைவிட அதிகச் சம்பளம் கிடைத்தால்...?"

"வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை"

"கிடைத்தால்..."

"இதுதான் உடை" அவள் மேஜை டிராயரிலிருந்து பிரீ:. ப்கேஸ் ஒன்றை எடுத்தாள்.

புஷ்பராஜ் அதைத் திறந்து பார்த்தார். ஜிப்பா ஒன்று, சரிகை வைத்த எட்டு முழ வேட்டி. வோட்ச். மோதிரம் ஒன்று, சுமார் ஐந்து பவுண் மதிப்புள்ள செயின் ஒன்று.

(தொடரும்....)

## மேய்ச்சல் வெளி 84

சுல்தான்

# வாழ்க்கையே சூதாட்டம் போன்றதே..!

**இணைய** வலைப் பக்கமொன்றில் வாசிக்க கிடைத்த ஒரு குட்டிக்கதை:

பிரபஞ்சத்தைப் படைத்துக் கொண்டிருந்தான் கடவுள். வேலை இன்னும் இழுத்துக் கொண்டே கிடந்தது. கோடிக்கணக்கான நட்சத்திரங்களையும் கிரகங்களையும் உருவாக்க வேண்டுமென்றால் சும்மாவா? நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைவிரல்களால் வழித்து விட்டுக் கொண்டான். சூரிய மண்டலம் சம்பந்தமான வேலைகளும் முடிந்து விட்டன. ஒரு நட்சத்திர மண்டலமும் இன்னொரு நட்சத்திர மண்டலமும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாதவாறு, யாராலுமே புரிந்து கொள்ள முடியாத கணித சூத்திரங்களை உருவாக்கி எல்லாவற்றையும் இணைக்க வேண்டும். அதற்குத் தேவை, காலம். காலமும் உருவாக்கப்பட்டு அந்த வேலையும் முடிந்தது. பூமிக்குத் தண்ணீரும் காற்றும் புவியீர்ப்பு விசையும் அளிக்கப்பட்டது. இவ்வளவுக்குப் பிறகும் ஒரு வேலை எஞ்சியிருந்தது. இருப்பதிலேயே ஆகக் கடினமான வேலை அதுதான் என்று தோன்றியதால் ஒரு தேவதையைத் துணைக்கு அழைத்தான் கடவுள்.

"சிருஷ்டி முடிந்து விட்டது. ஆனால் "இந்த சிருஷ்டியின் காரணம் என்ன? இதன் அர்த்தம் என்ன?" என்பதன் பதில் மட்டும்தான் எஞ்சியிருக்கிறது. அந்த பதில் ஒரு பொக்கிஷம். விலைமதிக்க முடியாத அந்த பொக்கி'த்தை நீதான் இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். செய்வாயா?" என்று கேட்டான் கடவுள்.

"ஓ நிச்சயமாக. அந்தப் பொக்கிஷத்தை யாராலும் ஏறி வர முடியாத ஒரு மலை உச்சியிலே கொண்டு போய் வைத்து விடுகிறேன், பிரபு."

"மனிதர்களுக்கு அதெல்லாம் ரொம்ப சுலபம்."

"அப்படியானால் அதை ஒரு பாலைவனத்தின் மத்தியிலே வைத்து விடுகிறேன். யாராலும் நெருங்க முடியாது."

"ம்ஹூம். ஒட்டகம் என்ற பிராணியைப் படைத்திருக்கிறேன். அதில் ஏறி அங்கேயும் வந்து விடுவார்கள் மனிதர்கள்."

"அப்படியானால் நிலவில் வைத்து விடுகிறேன். அல்லது, இந்தப் பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு மூலையில் உள்ள நட்சத்திரம் ஒன்றில் வைத்து விடுகிறேன். அங்கே அவர்களால் நிச்சயமாக வர முடியாது."

"இல்லை. அங்கே வருவதற்கும் அவர்கள் வாகனத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களுக்கு அப்படி ஒரு சக்தி வாய்ந்த திறனை அளித்திருக்கிறேன். மனிதர்கள் மற்ற பிராணிகளைப் போன்றவர்கள் அல்ல."

சொல்லிவிட்டு சிறிது நேரம் யோசித்தான் இறைவன். 'ம்'. அந்த இரகசியமான இடம் என்னவென்று தெரிந்துவிட்டது. வாழ்வின் சூட்சுமத்தை மனிதனுக்குள்ளேயே வைத்து விடு. அதுதான் ரொம்பவும் பத்திரமான இடம். சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாத இடம். அங்கே வைத்தால்தான் அதன் அருமை மனிதனுக்குத் தெரியும்"

நாம் எளிதில் தேடிக் கண்டுகொள்ள முடியாத இடங்களும் புதையல்களும் நமக்குள்ளேயே இருப்பதை யார் மறுக்க முடியும்? ஒவ்வொரு கணப் பொழுதுகளிலும், எதிர்பார்த்திராத எதையெதை யோ வெளிப்படுத்தி நம்மை எப்போதும் வியப்பிலாழ்த்தும் இந்த மனதை புரிந்து கொள்வது சுலபமாக இல்லை.

"வெயில் நுழைபறியா குயில் நுழை பொதும்பர்" என்கிற ரகசிய இருட்டாகத்தான் அது இருக்கிறது. மனசையறிய மார்க்கமுண்டா என்றுதான் தத்துவ ஞானிகளும் யோகிகளும் கவிஞர்களும் விஞ்ஞானிகளும் கூட தேடித் தேடிச் சலிக்கிறார்கள். "என் மனசுள் குமுறிக் கொண்டிருக்கிறது எரிமலைகள். குறுக்கும் நெடுக்கும் ஓடுகிறது காட்டாறுகள்" என்று விக்ரமாதித்யன் சொல்வது போல களேபரங்களுடனும் கரைகாணா எண்ண ஓட்டங்களுடனும்தான் அது இருக்கிறது. எங்கோ இண்டு இடுக்குகளில் ஒளிந்திருந்து திடீர் திடீரென்று வெளிப்பட்டு,

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி

# வெற்றிபெறுவதற்கு போராட்டம் வேண்டாம்

**“வெற்றிபெறுவதற்கு போராடியே தீரவேண்டும் என்று போராடுகிறவர்கள் தங்களுடைய இலக்கை எட்டுகிறவரை உயிரோடு இருப்பதில்லை”** என்று இதய ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதைப்பற்றிச் சந்தேகமே படவேண்டாம். மன அழுத்தமும் மனப்போராட்டங்களும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உயிருக்கே ஆபத்தானவை. வெற்றிபெறுவது என்பது போரட்டமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வெற்றிக்கான வழிமுறைகளைக் கற்றறிந்து திட்டமிட்டு நிதான மாக வலுக்கட்டாயமாகப் பயன்படுத்தினாலே வெற்றி பெற்றுவிடலாம். எப்படி என்று தெரிந்துகொள்வதே வெற்றியைச் சுலபமாக்கும். எப்படி என்று தெரிந்து கொள்ளாமல் வெற்றிக்கு முயற்சி செய்தால் அப்போதுதான் போராட்டம் அவசியமாகிறது.

எப்படி என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் அதனால் தெளிவான முடிவு எடுக்கமுடிவவில்லை. தெளிவான முடிவு எடுக்கமுடியவில்லை என்றால் சந்தேகமே ஏற்படுவதில்லை. சந்தேகத்தில் பதற்றம், பதற்றத்தில் பயம், பயத்தால் பீதி, பீதியால் மனத்தில் நோய் போன்ற உணர்ச்சி ஏற்படும்.

இவற்றின் காரணமாக “உடல், மனம், உணர்வு” எல்லாவற்றுக்கும் கேடு ஏற்படுகிறது.



இதனால் உங்கள் வாழக்கையே பாழாகி விடுகிறது. இதெல்லாம் ஏற்படுவது ஏன்? வெற்றி பெறுவது எப்படி என்று தெரிந்துகொள்ளாத காரணத்தினால்தான் அல்லவா?

எப்போதும் போராட்டம் என்று சிந்தித்துக்கொள்ளும் மனபாவத்துக்கு மற்றுமொரு காரணம் மற்றவர்களுடைய அனுதாபத்தைச் சம்பாதிப்பது. எக்காரணம் கொண்டும் மற்றவர்களுடைய அனுதாபத்தைத் தேடாதீர்கள். எவ்வளவு நல்ல நோக்கம் கொண்டவர்களாக இருந்தாலும் சரி. மற்றவர்களின் அனுதாபம் வேண்டாம்.

மற்றவர்களுடைய அனுதாபத்தை நீங்கள் பெறத் தொடங்கினால் பிறகு நீங்கள் அத்தகைய அனுதாபம் நமக்கு வேண்டியதுதான் என்று நினைக்கத் தொடங்கிவிடுவீர்கள். பிறகு இந்த உணர்ச்சி வளர்ந்தால் ஏமாற்றம், அவநம்பிக்கை ஏற்படும். அவநம்பிக்கை என்பது நாளடைவில் உங்களிடம் போராட்ட உணர்ச்சியை வளர்த்துவிடும்.

போராட்ட உணர்ச்சிக்கு மற்றுமொரு காரணம் சலிப்பு, சோர்வு,மனத்திலும் உணர்ச்சியிலும், சோர்வும் சலிப்பும் ஏற்படுவதால் நீங்கள் முயற்சி செய்வதை விடுத்துத் தப்பிக்க நினைப்பீர்கள். பிறகு மன அளவிலும் உணர்வளவிலும் ஒரு போராட்ட மனப்பான்மை உங்களைச் சூழ்ந்துகொள்ளும். போராட்டத்திற்கு “இழப்புக்களும், நட்டங்களும் ஒரு காரணம்” என்று மன இயல் நிபுணர்கள் சொல்கிறார்கள். இழப்பு வந்துவிடுமே என்று நினைப்பதும் ஒரு காரணம். மிகவும் பிரியமானவரை இழப்பது, வேலையை இழப்பது, பாதுகாப்பை,அல்லது உடல் நலத்தை இழப்பது. இவை கூட போராட்ட உணர்ச்சியை எழுப்பக் கூடும் என்று மன இயல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இது உண்மையான காரணமாக இருக்கலாம் என்றாலும் வில்லியம் சி மென்னின்கர் எனும் நிபுணர் “மனநோய் என்பது குணப்படுத்த முடியாதது என்று ஒரு மூட நம்பிக்கை நிலவுகிறது, மற்ற நோய்களை விட மனநோய்தான் அதிகளவு வாய்ப்புக் கொண்டது. சரியான நேரத்தில் சரியான சிகிச்சை கொடுக்க வேண்டும்” இவ்வாறு கூறியுள்ளார். இதில் இரண்டு வழிகள் உள்ளன.

மன அள்விலும் உணர்ச்சி அளவிலும் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பது. அதன் வாயிலாக போராட்ட உணர்ச்சி ஏற்படாமலும், தீவிரமான மனவியாதி ஏற்படாமலும் முன்கூட்டியே தடுப்பது வழி.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.402 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சி.சதீஸ், மொல்லிகொட லேன், கம்பளை

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

| | |
|---|---|
| 01. | சு.அருணோதயன்,பொக்குண வீதி,கவுடான,தெஹிவளை. |
| 02. | தி.மாதங்கி,132,குறுந்துவத்தை றோட், சிலாபம். |
| 03. | கு.பாலசுப்பிரமணியம்.வாழைச்சேனை, மட்டக்களப்பு. |
| 04. | ஆர்.சிவநேசன், கடற்கரைவீதி, திருகோணமலை. |
| 05. | எம்.அனுஷா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |
| 06. | ம. பிருந்தா, ஜெயந்திநகர், கிளிநொச்சி. |
| 07. | எம்.பர்ஹானா. மருதானை கொழும்பு-10. |
| 08. | எஸ்.வரதராஜா், மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| 09. | சி.தாரகா,பூவரசங்குளம், வவுனியா. |
| 10. | ம.தீபன்,நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை. |

### குறுக்கெழுத்துப் போட்டி - 404



**இடமிருந்து வலம்**

01.இரண்டு மலைகளுக்கிடைப் பட்ட பிரதேசம் அல்லது பாதை.
07.மரங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
11.குளம் அல்லது கிணறு என்றும் சொல்லலாம். (திரும்பியுள்ளது)
13.வீடு என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
21.சுத்தம் என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
25.படை என்றும் கூறலாம்.
28.வட இந்திய மொழிகளில் ஒன்று. (குழம்பியுள்ளது).
31.வெற்றிச் சின்னம் என்றும் கூறலாம்.

**மேலிருந்து கீழ்**

01.கிருஷ்ணரின் அவதாரங்களில் ஒன்று.
02.பெண்களுக்கு இருக்கும் நற்குணங்களில் ஒன்று.
03.வருமானம் என்று கூறலாம். (குழம்பியுள்ளது)
06.நட்சத்திரங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
16.நிறங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
23.செய்தி என்றும் கூறுவர்.
25.விக்ரம் நடித்து வெளியான படங்களில் ஒன்று
26.செயல் அல்லது ஏவல் (திரும்பியுள்ளது)
30.பவனி வருதல் என்று கூறலாம்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 09.02.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-404
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 402- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 ப | 3 வ | 4 ம் | 5 ச | 6 ம் |
| 7 ட் | | 9 ல | | 11 ரு | |
| 13 சை | | 15 க | | 17 கு | |
| | 20 க | 21 ம் | 22 பா | | 24 பா |
| 25 டு | 26 ண் | 27 பா | | 29 டை | 30 ச |
| | 32 டி | | 34 மா | | 36 ம் |

## உடல் எடையை குறைக்க பால் போதும்

காலைச் சிற்றுண்டியுடன் பழச்சாறு குடிப்பதற்கு பதிலாக, கொழுப்பு நீக்கப்பட்ட பால் குடித்து வந்தால் உடல் எடை குறையும். காலைச் சிற்றுண்டியுடன் பழச்சாறு குடித்தால், அதிகமாக பசி ஏற்படும். பசி சீக்கிரமாக வருவதால், உணவு அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை வரும். இதனால், கலோரியின் அளவும் கூடும்.

ஆனால், கொழுப்பு நீக்கப்பட்ட பால் எடுத்துக் கொள்ளும் போது, உணவின் அளவு குறைவதோடு கலோரியின் அளவும் குறையும். இதனால், உடல் எடையை மிக எளிதாக குறைக்க முடியும் என்கின்றனர் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள்.

கொழுப்பு நீக்கப்பட்ட பாலில், குறைந்த அளவே புரதம் மற்றும் லாக்டோஸ் சத்துகள் உள்ளன. இவை அதிகப்படியான கொழுப்பு உடலில் சேர்வதை தடைசெய்கிறது. மேலும், போதும் என்ற மனநிறைவை இது மூளைக்கு கொடுப்பதால், பசி உணர்வு தள்ளிப் போகிறது. இதனால், உணவும் குறைவாக எடுத்துக் கொள்ளும் நிலை வந்துவிடும். அதனால், கொழுப்பு நீக்கப்பட்ட பாலானது, உடல் எடையை குறைக்க வழி செய்கிறது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.




**தேவ அருள்ஞான சித்த சக்தி**
கடமையும் உண்மையும் இரு கண்களாகக் கொண்ட
என்னிடம் அபூர்வ சக்தி இருக்கின்றது என்பது யாவரும் தெரிந்த விடயமே!



**சாதிக்க முடியாததைச் சாதிக்க வாருங்கள்**

சித்தர்களின் அனுக்கிரக வாக்கின்படியே அவரவர்களின் பிரச்சினைகளுக்குத் தக்கவாறு கிரக கோட்பாட்டின்படி பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படுகின்றது. சித்த ஞானம்பெற்ற என்னிடம் எல்லா மதத்தினருக்கும் பொருந்தக் கூடிய அனைத்து மாந்திரீக பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படும். வெளிநாட்டவர்களுக்கென கடல் கடந்து செயற்படக் கூடிய வண்ணம் அதிவிசேட அச்சரக்கூடு தயாரில் உள்ளது. 46 வருட காலம் மங்கா மங்கள ஒளிவீசக் காரணம் உண்மையும், நேர்மையுமான சேவையே? இனி என்ன உங்கள் குறைகூறுங்கள்? சித்து, முத்து, வித்து, மருந்தீட்டலா?திருமணத் தங்கு தடைகளா? செம்மையாகச் செவ்வாய்த்தோசம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமா? தாம்பத்திய வாழ்வில் சுபபோகக்குறைவா? மனக்கிலேசமா? நித்திரையின்மையா? காதலில் தோல்வியா? வாழ்வா? சாவா? என்ற நிந்திப்பா? தொழிற் தடங்கலா? செய்தொழில் பெருத்த இலாபம் அடைய வேண்டுமா? குடிபோதையில் இருந்து விடுபட வேண்டாமா? அருள்வாக்குப் பெறமாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக மாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக பூஜையில் கலந்து அருட்கடாட்சம் பெறவும். இத்துறையில் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட என்னை நாடிவரக் காரணம் எனது உண்மைச் சேவையும் நேர்மையுமே. கால தாமதத்தை தவிர்த்துக்கொள்ள முன்பதிவு அவசியமே.

**உங்கள் கதையைக் கூறும் உங்கள் யாதகம்:-**

காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனன ஜாதகத்தை வாழ்க்கைச் சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, முன் அனுமதியுடன் என்னைச் சந்திக்கவும்.

**உலகப்புகழ் கௌரவ பேராசிரியர் தேசபந்து பீ.கே. சாமி ஜே.பீ ஐயா**
**ஸ்ரீ அருள் ஞான சக்தி இல்லம் இல: 23, மேபீல்ட் ரோட், கொழும்பு-13.**
தொலைபேசி - 0112342463, 0112342464, 0112470615 தொலைநகல் -2344831
நுவரேலியாவில் மட்டுமே எமது கிளை
ஸ்ரீ துர்க்கா தேவீ ஆலயம் இல: 33 தின சந்தை கட்டடம், நுவரெலியா
0522222506/0522223093




ப்ரமோத் விடுதி வாசலில் காத்திருந்தான். அருகில் வோச்மேன் காதைச் சொறிந்து கொண்டு, "ஒரு மணித்தியாலத்தில வந்திடுங்க. மேடத்துக்குத் தெரிஞ்சா என் வேலை போயிடும்."

"சரி பகதூர், தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை என்கிறதாலதான் அழைச்சிட்டுப்போறன்" என-றான் ப்ரமோத்.

அகல்யா மோட்டார் சைக்கிளின் பின் சீற்றில் உட்கார்ந்துகொண்டாள். அவன் தோள்களைப் பிடித்துக்கொண்டாள்.

"யார் தாத்தா!"

"பொய்யில்லை என்றால் வாழ முடியாது" என்றான்.

"எங்க போறம்?"

"வீட்டுக்குத்தான்.... அங்க என்னோட சிஸ்டர் இருக்கிறாள்.... கவலைப்படாதே. ரொம்ப சைவமான பார்ட்டி..."

தொடர்மாடியின் முன்னால் நான்கு மோட்டார் சைக்கிள்கள் நின்றுகொண்டிருந்தன. லிப்டில் இருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள் அகல்யா.

"ஏன் இவ்வளவு பதற்றமாகத் தோன்றுகிறேன்... தலையெல்லாம் அலங்கோலம். பவுடர்போட நேரம் இல்லாமல் அவன் சொன்னான் என்று பின்னால் ஏறி வந்துவிட்டேனோ.... தன்னுள்ளே நினைத்துக் கொண்டாள்.

**அகில இந்திய இசை விழாவில் சரஸ்வதி ஆர்ட்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அகல்யா, ப்ரமோத் ஆகியோர் வெற்றிபெற்றிருந்தனர். அந்த வெற்றி இவர்கள் இருவருக்கிடையேயும் ஒரு இனம் புரியாத உணர்வை ஏற்படுத்தியிருந்தது. நித்திரையில்லாமல் புரண்டார்கள். நடு இரவில் அகல்யாவுக்கு போன் செய்து ப்ரமோத் அவளைப் பார்ட்டிருக்கு வரும்படி அழைத்தான்.**

ப்ரமோத்தின் தங்கை ரேணுவும் மற்றொரு பெண்ணும் இருந்தார்கள்.

சி.டி.பிளேயரில் பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. மேசை மேல் இருந்த பல விதமான திரவங்களில் எது மது என்பது என்பது தெரியவில்லை. அகல்யாவுக்குப் பரீட்சயமில்லாத சில பையன்களும் இருந்தார்கள். முதற் பரிசு வாங்கிய திருச்சி ஸ்ரீதரும் இருந்தான். நதிராவும் இருந்ததை அப்போதுதான் கவனித்தாள்.

"நதி நீ எப்ப வந்தாய்?"

"ஹாய் அகல்! வாழ்த்துக்கள்! நீ நல்லாப் பாடேல்லை எண்டாலும் ப்ரமோத் கீபோட்டில சமாளிச்சிட்டான்"

"நல்லாத்தான் பாடினாய், இவள் சும்மா சொல்லுறாள்" என்றான் ப்ரமோத்.

"ஏதாவது சாப்பிடுறியா"

"குளிர்பானம் ஏதாவது இருந்தால் குடிக்கிறேன்"

"நீங்க நிஜமாகவே நன்றாய்ப் பாடுறீங்க" என்றான் ஸ்ரீதர்.

"குரல் நல்லாவே இருக்கு. கர்நாடகம் சங்கீதம் படிக்கலாமே? அந்தப் பாட்டில சாருகேஷி ராக சாயல் இருந்தது."

அகல்யா "தாங்ஸ்" என்று சிரித்தாள்.

ப்ரமோத் தனது மற்ற நண்பர்களுக்கு அகல்யாவையும், நதிராவையும் அறிமுகப்படுத்தினான்.

"அப்பா அம்மா வைச்சதே நதிராதானா"

"குண்டூர் விஜயலட்சுமி!"

" அகல்யாவுக்குப் பாட்டு பொழுதுபோக்கு.... உண்மையாகவே அவள்... என்ன படிக்கப்போறாய் அகல்யா?"

"ஐ.ஏ.எஸ்"

"அண்டைக்கு டோபிள் எழுதி அமெரிக்கா போகப்போறன் எண்டு சொன்னாயே?"

"தினத்துக்குத் தினம் குறிக்கோள் மாறும். கடைசியில தயிர்வடை ஒண்டைக் கட்டிக்கொண்டு பிள்ளை பெத்துக்குவா" என்றாள் நதி.

"நதி,சில சமயம் ரொம்ப இயல்பாகவே பேசுற"

"பரவாயில்லை" என்றாள் அகல்யா.

நதிரா ப்ரமோத்தின் மேல் வழிந்துகொண்டிருந்தாள். அவனிடம் அருகருகே போய் அடிக்கடி இரகசியம் பேசினாள். ப்ரமோத் அதை விரும்பவில்லைப்போல் தெரிந்தது. திடும் திடும் உரத்த சங்கீதம் ஒலிக்க கலர் வெளிச்சத்தில் நடனம் ஆடத் தொடங்க, அகல்யாவைத் தனியாக பெல்கனிக்கு அழைத்து வந்தான்.

"ஒரு வழியா உன்னை தனியாக் கொண்டுவர முடிஞ்சுது. உனக்காகத்தான் இந்தப் பார்ட்டி" என்றான்.

"தாங்ஸ்"

"நல்லாவே பாடினாய்... நதி சொன்னது தவறு"

"தாங்ஸ்"

"மாடிக்குப் போவமா?"

"எதுக்கு?"

" நீ என்னுடைய வீட்டைப் பார்க்க வேண்டாமா?"

அவன் வரைந்திருந்த சித்திரங்கள் திறமையாகவே இருந்தன.

"உன்னால் வேற என்னவெல்லாம் முடியும் ப்ரமோத்? படம் வரைகிறாய், கீ போர்ட் வாசிப்பாய், நல்லாய்ப் படிக்கிறாய், சினிமா ஹீரோ மாதிரி" என்றாள்.

"எல்லாமே அரைகுறை"

கீழே சிரிப்பும், பாட்டும் கேட்டது.

"உங்க அப்பா, அம்மபா இதுக்கெல்லாம் பேசமாட்டாங்களா?"

"அவர்கள் வேற பார்ட்டிக்குப் போயிருக்கிறாங்கள். வீட்டிலை இருந்தாலும் தே டோன் மைண்ட் ஏசி ரூமில கேட்காது."

ப்ரமோத் அவளருகே சோபாவில் உட்கார அவள் நகர்ந்துகொண்டாள்.

"என்ன பயம் கடிச்சுச் சாப்பிட்டு விடுவேனா?"

"இல்லை"

"தொட்டாத் தப்பில்லை"

"அதுக்கில்லை...."

ப்ரமோத், அவளறியாமல் விளக்கின் வெளிச்சத்தைக் குறைத்திருந்தான். அவனது விரல்களால் விசமம் பண்ண ஆரம்பித்ததை அகல்யா உணர்ந்துகொண்டாள்.

**இன்பம் தொடரும்**

---

**இவ்வாரச் சிறுகதை**




**வனிதாவுக்கு** கணவன் மீது கோபமாக இருந்தது. திரும்பிப் படுத்துக்கொண்டாள். வனிதாவின் கோபத்துக்கு என்ன காரணம் என்று சிவாவுக்குப் புரியவில்லை.

கொழும்பிலிருந்து பஸ்ஸில் வந்தது அலுப்பாக இருந்தது. இன்று நல்ல நித்திரை கொண்டால்தான் நல்லது என்று சிவா நினைத்துக்கொண்டான்.

என்றாலும் வனிதா ஏன் கோபப்படுகிறாள் என்பது தெரியாமல் தூங்கவும் முடியாமல் சிவா குழம்பிப் போனான். பொறுமை இழந்தவனாக திரும்பிப் படுக்கும் வனிதாவைத் தன்பக்கம் இழுத்தான்.

"வனிதா... வனிதா... என்ன பிரச்சினை சொல்லுமன்... நீர் ஒண்டும் சொல்லாட்டில் எனக்கு... ஒண்டும் தெரியாதெல்லோ... நான் என்ன பிழை செய்தனான். நீர் கூப்பிட்டதும் வந்திட்டன் எல்லோ.

இஞ்ச வனிதா... திரும்புமன்."

வனிதா திரும்பாமலே

"உங்கள் மேல் ஒரு பிழை-யும் இல்லை எல்லாம் என்ர பிழைதான்..."

"ஏன் என்ன பிழை செய்தனீர்" சிவா பதற்றமாகக் கேட்டான்.

"என்ன பிழையோ, கல்யாணத்துக்குப் பிறகும் இந்த வீட்டில இருக்கிறதுதான் பெரிய பிழை. அப்பாவுக்கு என்னைக் கண்டாலே பிடிக்குதில்லை. எப்பவும் ஏதாவது சொல்லித் திட்டிக்கொண்டே இருக்கிறார்.

"ஏன் என்ன சொன்னவர்"

"நான் தெண்டச் சோறாம், வீட்டு வேலைகள் ஒண்டையும் செய்யிறன் இல்லையாம். ஒழுங்காப் படிக்காமல் என்ர இஷ்டத்துக்குக் கல்யாணம் கட்டிப் போட்டனாம். எத்தின நாளைக்கு உதே கதையைக் கேட்டுக்கொண்டிருப்பது" என்று சொல்லும்போதே...

"இஞ்ச வனிதா சத்தமாகக் கதைக்காதையும், அங்காலை கேட்கப்போகுது" என்றதும் கோபம் தணியாதவளாக வனிதா,

"கேட்கட்டுமே நான் பொய் சொல்லவில்லை. நான் இந்த வீட்டில இருக்கிறது அவருக்குப் பிடிக்கயில்லை. என்னைக் கூட்டிக்கொண்டு போங்கோ. பிளீஸ்" என்று சிவாவின் முகத்தோடு முகம் நெருங்கி அழுதாள்.

அவளை இறுக அணைத்துக்கொண்ட சிவா

"வனிதா என்ன சொன்னாலும் அவர் உங்கட அப்பா... அவருக்கும் ஆயிரம் எதிர்பார்ப்பு இருந்திருக்கும். பிளீஸ்... உதுகளைப் பெரிசு பண்ணாதையும். நான் கொழும்பில பெடியளோட தங்கியிருக்கிறன். உம்மையும் கூட்டிக்கொண்டு போய் இருக்க முடியாது. யாழ்ப்பாணத்திலையும் தனியான வீடு எடுத்து உம்மை இருத்த முடியாது. நீர் தனிய இருக்கமாட்டீர். நீர் கொஞ்சம் பொறுமையாக இருந்துகொள்ளும், எனக்கு யாழ்ப்பாணத்திலை ஒரு வேலை கிடைச்சுதெண்டால் நாங்கள் தனிக்குடித்தனம் போகலாம். ஜனவரியில எப்படியும் வேலை கிடைச்சிடும்"

"இல்லை சிவா, உங்களை கஷ்டப்படுத்த வேணுமெண்டதுக்காகச் சொல்லயில்லை. என்னைப் பார்த்துத் தங்கச்சிமாரும் கெட்டுப்போயிடுவினமாம் எண்டெல்லாம் ஒவ்வொரு நாளும் திட்டுறார்.

சரி வனிதா, இப்போதைக்கு இங்க இருக்கிறது தான் உமக்குப் பாதுகாப்பு. பிளீஸ்டா எனக்காக இன்னும் மூண்டு மாதம் பொறுத்துக்கொள்ளும்" என்று வனிதாவின் நெற்றியில் முத்தமிட்டான்.

தேம்பிக்கொண்டே அவனது பிடிக்குள் சுருண்டு கொண்டாள் வனிதா.

பக்கத்து அறைக்குள் வனிதாவின் அப்பாவும் அம்மாவும் கதைத்துக்கொண்டிருந்தனர்.

அம்மா கண்மணி காலையில் நடந்த சம்பவத்தைத் தாங்க முடியாமல் கேட்டே விட்டாள்.

"என்னங்க ஏன் வனிதாவை அப்படிப் பேசிப்போட்டீங்கள். அவள் நல்லா படிச்சவள் டொக்டராக்கிப் பார்க்கலாம் எண்டு கனவு கண்டனாங்கள் உண்மைதான். அதுக்காக என்னசெய்யலாம். அவளின்ர தலையெழுத்து லவ் கல்யாணம் எண்டு, நடந்து முடிஞ்சிட்டுது. அடுத்து ஆகவேண்டியதை யோசிக்காமல் அவ-ளைக் காணுற நேரமெல்லாம் திட்டித் தீர்க்கிறதே. நமக்கு விருப்பம் இல்லாமல் அவள் செய்தாலும், அந்தப் பெடியன் அவளை நல்லாத்தானே பார்க்குது. அவள் மேல கோபப்படாதேங்கோ அவளின்ர தலையெழுத்து நடந்திருக்குது. நான் என்ன சொல்லுறது விளங்குதே" என்று கண்மணி கேட்டபோதும், நடராஜா சத்தம் இல்லாமல் கிடந்தார்.

கண்மணிக்கு கோபம் அதிகமானது. என்ன கல்லு மாதிரிக் கிடக்கிறியள். அவள் வீட்டை விட்டுப்போனால் உங்களுக்குச் சந்தோசமே.

அந்தப் பெடியன் கொழும்பில் இவளைக் கொண்டு போய் என்ன செய்யும். அவள் இந்த வீட்டில இருக்கிறது யாருக்கும் பாரமில்லையே. அவளுக்கு இவ்வளவு நாளும் சோறு போட்டனாங்கள்தானே. இப்ப ஏன் வீட்டை விட்டுக் கலைக்கப்பாக்கிறியள் எனக்கெண்டால் உங்கடபிரச்சினை என்னவெண்டு விளங்கமாட்டேங்குது" என்று கண்மணி கூறிக்கொண்டிருக்கும் போது மூக்கைச் சீறுவது போல் நடராசா சீறினார்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்மொழி

"இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை"

சுவாமி விவேகானந்தர்



## சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! சிறைச்சாலைகளில் தமிழ் கைதிகளுக்குப் பாதுகாப்பு கேள்விக்குறியானதாக இருக்கின்றமை பற்றி உமது கருத்து...?

**கு. பிரதாபன், மன்னார்.**

● 'சமூகத்துக்கு ஒவ்வாத தவறுகள் செய்வோரைத் திருத்தி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதே சிறைச்சாலைகளின் நோக்கம். இந்த இலக்கு எட்டப்படுகிறதோ இல்லையோ, இங்கு தங்க வைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதோவொரு வகையில் சமூகத்திற்கு அச்சுறுத்தல் மிக்கவர்களாகவே இருப்பர். சிறைகளிலும் அட்டகாசம் தொடரவே செய்யும்.

இவ்வாறானவர்களுடன் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் போன்றவற்றின் சந்தேகப் பார்வையில் சிக்குண்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களும் அடைத்து வைக்கப்பட்டுள்ளமையால் அவர்களின் குணாம்ச வெளிப்பாடுகளில் இவர்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் யதார்த்தத்தினை உரிய தரப்புக்கள் உணரவேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✉ சிந்தியா! இலங்கைக்கு இந்திய, பாகிஸ்தான் தளபதிகள் விஜயம் செய்தனரே. நோக்கம் என்னவாக இருக்கும்?

**ம. சிந்துஜன், யாழ்ப்பாணம்.**

● எல்லாம் பூகோள நலன் சார்ந்த விடயங்கள்தான். மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்ற நாடான இந்தியாவிற்குத் தனது பிராந்திய நாடுகளிலும் தனக்கு எதிரான சக்திகள் பலம் அடைந்துவிடக் கூடாது என்பதில் அதீத அக்கறை. தனக்குச் சவாலான நாடுகள் இலங்கையில் கால் பதித்தாலோ தளம் அமைத்துவிடுவார்களோ என இந்தியா உஷாராகிவிடும். இந்நிலையில் எதிரி நாடான பாகிஸ்தான் தளபதி இலங்கை வருகிறார் என்றால் இந்தியப் பேரரசு பார்த்துக்கொண்டு இருந்துவிடுமா என்ன?

✉ சிந்தியா! அரசியல்வாதிகளின் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பது எந்தளவு மக்களுக்குப் பொருந்துமென நினைக்கின்றீர்?

**செ. பத்மரூபன், திருகோணமலை.**

● அரசியல்வாதிகள் இவ்வாறு கூறுகின்றார்கள் என உமக்கு யார் சொன்னது? பெரும்பாலானவர்கள் 'தங்களின் தேவை மக்களின் வாக்கு' என்றுதானே கூறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

மகேசனுக்குச் சேவை செய்ய விரும்புபவர்களுக்கு இதைக் கூறினால் பொருத்தமாக இருக்கும். ஆனால் நீர் குறிப்பிட்ட தரப்பினரில் பெரும்பாலானவர்கள் இதில் எந்தவகையிலும் அடங்கவில்லை.

✉ சிந்தியா! மதம்விட்டு மதம் தாவுவதா? கட்சிவிட்டுக் கட்சி தாவுவதா? தாக்கம் மிக்கது?

**எஸ். சைந்தவி, கொழும்பு.**


● என்னைப் பொறுத்தவரையில் இரண்டும் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட சுதந்திரம். ஒவ்வொருவரும் தங்களின் எதிர்பார்ப்புக்களுக்கும், தேவைகளை நிறைவேற்றும் வகையிலும் மதத்தினையும், கட்சிகளையும் தேர்ந்தெடுப்பதில் தவறில்லை.

✉ சிந்தியா! இந்திய அணி, தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை இழந்துவிட்டதே... இது உலகக் கோப்பையில் தாக்கம் செலுத்துமா?

**எஸ். ராகவன், மட்டக்களப்பு.**

● இல்லை. ஒரு சில போட்டிகளில் தோற்றவுடன் ஒரு அணியின் திறமை மங்கிவிட்டதாகவோ, வலு குறைந்துவிட்டதாகவோ தீர்மானித்துவிட முடியாது.

அதுவும் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில், ஆடுகளம், காலநிலை போன்ற புறக் காரணிகளும், வெற்றி, தோல்வியில் தாக்கம் செலுத்துகின்றன.




அப்படிப் பார்க்கையில், தென்னாபிரிக்காவை விட முற்றுமுழுதாக வேறுபட்ட புறக்காரணிகளை (இந்தியாவிற்குச் சாதகமான கொண்ட நாடுகளிலேயே உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறப் போகின்றன. எனவே உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணிக்கே அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக ஆருடங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஆரம்பம் அமோகமாக இருந்தால் அனைவரும் முழங்குவார்கள். ஆரம்பம் சறுக்கினால் அனைவரும் சுருண்டு விடுவார்கள் என்ற விமர்சனம் இந்திய அணி மீது இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு இந்தியர்கள் செயற்பட்டால் வெற்றிக்கனியைச் சுவைக்கலாம்.

இலக்கிய நயம் 15

# 'தனக்கின்னா இன்னா பிறர்க்கு'

**கே.வி. குணசேகரம்**

தமிழுக்கு இந்துக்கள் தொண்டாற்றியதை விடச் சமணர்கள் கூடுதலாகத் தொண்டாற்றியுள்ளனர். வாழ்க்கையின் உண்மைத் தத்துவங்களாகவும், காவியங்களாகவும் படைத்ததில் சமணர்களின் பங்கை அளவிட்டுக் கூறமுடியாது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களின் சிறப்பைப் பாராட்டாத தமிழ்ப் புலவர்கள் இல்லையென்றே கூறலாம். அவை கதை வடிவிலான காப்பியங்கள். பழமொழி நானூறு, நாலடியார் போன்றவை வாழ்க்கையைத் தத்துவமாகக் கூறும் காவியங்கள்.

பழமொழி நானூறு என்னும் அரிய நூலைத் தந்தவர் முன்றுறை அரையனார் என்னும் பெரும் புலவர். ஒவ்வொரு பழமொழியையும் சொல்லி, அதன் அடிப்படையில் ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையும் விளக்கும் ஒவ்வொரு செய்யுளாக, மொத்தம் நானூறு செய்யுட்களால் அமைந்தது பழமொழி நானூறு எனும் நூல். பழமொழி என்றால் பழம்மொழி என்றும் கொள்ளலாம். பழத்தைப் போன்ற சுவையான மொழியென்றும், பழம்பெரும் அனுபவத்தவர்களின் அனுபவ வார்த்தைகள் என்றும் அதற்குப் பொருள் கொள்ளலாம்.

முன்பு வாழ்ந்த அறிஞர்களின் வாழ்வில் உண்டான அனுபவ வாக்குகளே பழமொழிகள். அதனால் அவற்றைக் கற்போரது வாழ்க்கை பயனுள்ளதாக அமையும் ஒவ்வொரு பழமொழியும் கவிதை வடிவில் தரப்பட்டமையால் நானூறு பழமொழிகளும் பல்வேறு சுவையுள்ள கனிகளைப் போலச் சுவைக்கின்றன. கவிதைக்குரிய பண்புகள் அனைத்தும் அவற்றில் பொதிந்து காணப்படுவதோடு வாழ்க்கைத் தத்துவங்கள் வாசிப்போரை வியப்படைய வைக்கின்றன. சங்ககாலத்தில் கதைகள் கவிதைகளூடாகச் சொல்லப்பட்டன. அதுபோல அக்காலத்தில் வாழ்க்கைத் தத்துவங்கள் கவிதைகளினூடாகச் சொல்லப்பட்டன. ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை பழமொழிகளைக் கவிதைகளாகக் கூறியவர் அரையனார் என்ற அறிஞர் மட்டுமே. சமணர்கள் பெண்களை இழிந்தவர்களாகவே கருதி வந்தனர். உலகத்தில் உள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணம் பெண்கள் கொடுக்கும் இன்பம் என்று சொன்னார். ஆனால் அரையனார் பெண்களைப் பெரியவர்களாக்கிப் பெண்களுக்கே உபதேசம் செய்கிறார். அவர் தனது பழமொழிக் கவிதைகளில் பெண்களை விழித்தும், அரசர்களை விழித்துமே சொல்கிறார். நாட்டை ஆள்பவன் அரசன் அரசனை ஆள்பவள் அரசி. பெண்கள்தான் சமுதாயத்தின் வித்துக்கள். அவர்களுக்குக் கூறப்படும் ஆலோசனைகள் எப்படியும் எல்லோரையும் சென்றடையும் என்று அரையனார் நினைத்திருக்கிறார். அதனால்தான் அவர் தனது வர்ணனையால் பெண்களைக் குளிரப்பண்ணி மிகவும் கடுமையான வாழ்க்கைத் தத்துவங்களை இனிய கவிதை மூலம் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

பழமொழியை முதுமொழி என்றும் சொல்வார்கள். தமிழ் இலக்கணத்தை எமக்குத் தந்த தொல்காப்பியர் பழமொழிக்குக் கூறிய வரைவிலக்கணம் பழமொழி நானூறில் நிறைந்து காணப்படுகிறது. "நுண்மையும், சுருக்கமும், தெளிவும், இனிமையும், பொருளும் விளக்கமாக இருப்பதோடு குறித்த பொருளைச் சரியாக விளக்கிச் சொல்வது பழமொழி" என்கிறார் தொல்காப்பியர்.


அரையனாரின் பழமொழி நானூற்றில் ஒரு கவிதையைப் பார்ப்போம்,

"வினைப் பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பணிப்பச் செய்யாமை வேண்டும்
புனப்பொன் அவிர்கணங்கின் பூங்கொம்பர் அன்னாய்
தனக்கின்னா இன்னா பிறர்க்கு"

வனப்பான காடுகளில் பூத்துக் குலுங்கும் மலர்களிலே உள்ள பொன்னிறமான மகரந்தங்களைப் போன்ற பொன்நிறமான அழகிய தேமல்களை உடலெங்கும் கொண்டுள்ள வசீகரமான பெண்ணே, உனக்குத் துன்பம் தரும்செயல்கள் பிறர்க்கும் துன்பம் தரும் என்று தெரிந்துகொள். அதனால் உனக்குத் துன்பம் தரும் என்று நீ நினைக்கும் எதையும் மற்றவர்களுக்குச் செய்ய விரும்பாதே என்று அரையனார் மிகவும் அழகாகத் தேமல்களை உடைய பெண்ணிற்கு அறிவுரை கூறுகிறார்.

தனக்குத் துன்பமாயிருக்கும் ஒன்று பிறருக்கும் துன்பத்தையே கொடுக்கும் என்பதைப் பெண்கள் உணர வேண்டும். உணர்ந்ததைத் தமது கணவர்க்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். அன்பான அழகிய மனைவி சொன்னால் இரும்பு மனம் கொண்ட கணவனும் கேட்பான் என்ற நம்பிக்கை அரையனாருக்கு இருந்ததன் காரணமாகத்தான் அரையனார் அவ்வாறு சொன்னார். தேமல்கள் பலவகை. பெண்ணுக்குப் பொன்னிறமான தேமல்கள் உடலில் இருந்தால் அவை அவளை அழகுபடுத்தும். அத்துடன் கணவரின் காமத்தைத் தூண்டி அவனை நிலைகுலையச் செய்யும். நிலைகுலைந்த ஆடவன் தன் அறிவிக்கெட்டியபடி நடக்காது, அறிவிப்பவரின் சொல்லுக்கேற்பவே நடப்பான் என்ற உண்மையை அரையனார் தெரிந்து வைத்திருந்தமையால்தான் பெண்ணிடம் அந்தப் பெரும் பணியை ஒப்படைத்தார். பகையால் பாதிக்கப்படுவது பெண்கள்தான். ஒருவனுடன் பகைகொள்ளும் ஆடவன் அவனோடு சண்டையிட்டுக் காயமடைந்தால் அவனையும் தன் குடும்பத்தையும் பராமரிக்கும் பொறுப்புப் பெண்களுக்கே வந்துவிடும். அதனால் அழகான தேமல்களையுடைய பெண்ணே, உனது கணவனை மற்றவர்களுடன் முரண்படாத வகையில் வைத்திரு. உன் கணவனால் செய்யப்பட்ட துன்பம் உன் குடும்பத்திற்கு வந்தால் நீதான் கஷ்டப்படுவாய் என்று கூறுகிறார்.

பார்வதி என்ற பெண்ணுக்கு மூன்று பிள்ளைகள். கணவன் விபத்தில் இறந்துவிட்டான். அவள் கூலிவேலை செய்து தன் பிள்ளைகளைக் கற்பிக்கிறாள். க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் தனது மூத்த மகளுக்கு அவள் ஒரு தங்கச் சங்கிலி வாங்கிக் கொடுக்கிறாள். அதை அணிந்து சென்றபோது திருடன் ஒருவன் அறுத்து விடுகிறான். பார்வதியால் அந்தத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் சாப்பிடாமல் இருக்கிறாள். அதை அறிந்து அவளது இனத்தவளான சிவகாமி என்ற பெண் வந்து; "நீ சாப்பிடாமல் இருந்தால் சங்கிலி கிடைத்துவிடுமா? கஷ்டப்பட்டுத் தேடிய பொருளானாலும் பொசிப்பு இருந்தால்தான் கையில் தங்கும். வீணாகக் கவலைப்படாது எழுந்து சாப்பிடு என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டுச் சென்றாள். பொருளானாலும் பொசிப்பு இருந்தால்தான் கையில் தங்கும். வீணாகக் கவலைப்படாது சிவகாமியின் கணவன் குடிகாரன். அவன் வீட்டைக் கவனிப்பதில்லை. அதனால் அவள் ஒரு பசுவை வளர்த்து அதிலிருந்து பால் கறந்து விற்றுச் சீவித்து வந்தாள். அந்தப் பசு திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டது. அதைச் சிவகாமியால் தாங்க முடியவில்லை. சாப்பிடாது அழுது கொண்டிருந்தாள். அப்போதுதான் பார்வதியின் நிலை புரிந்தது. தான் முன்பு பார்வதிக்குச் சாதாரணமாகச் சொன்னதை நினைத்துக் கவலைப்பட்டாள். "தனக்கின்னா பிறர்க்கு" என்பது பழமொழி. □



# செய்திகளும் சின்னாச்சியும்

**இனங்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்துமாறு கௌதம புத்தர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வலியுறுத்தவில்லை.**
*-பிரதமர் டி.எம்.ஜெயரட்ன.*

"ஒரு சிங்கள அரசியல்வாதியின்ர வாய்க்குள்ளால இப்பிடியான செய்தி வெளிவாறது எண்டது அபூர்வமான விசயம் கண்டியளே! கசவருத்தக்காரன் இருமி இருமி ரத்தம் கக்குற மாதிரி, இந்த நாட்டில இனவாதப் பேச்சைக் கக்குறதெண்டால் இஞ்ச சில சிங்கள அரசியல்வாதிகளுக்கு இனிப்புத் திண்டமாதிரி இருக்கிற நேரத்தில, உவர் உப்புடிக் கதைச்சது உச்சந்தலைப் புண்ணுக்கு புளி கரைச்சு ஊத்தின மாதிரியல்லோ கிடக்கப்போகுது. இனங்களுக்கிடையில்; சனங்களுக்கிடையில பிளவினை ஏற்படுத்துமாறு கௌதமபுத்தர் சொல்லாட்டி ஏனாம் இந்த நாட்டில இனப்பிரச்சினை ஒண்டு வந்ததாம்? கௌதம புத்தருடைய காவி உடுப்பைப் போட்டுக்கொண்டு திரியுற உந்த உறுமல் கொட்டையளோ...? ஊமல் கொட்டையளோ...? என்னடி ஆத்தை அது? ஆ...? ஹெல உறுமய எண்ட ஆட்கள் உதை ஏற்பினமோ? ஏற்றுக் கொண்டால் என்னெண்டு அதுகள் அரசியல் நடத்துறதாம்... ?

**சீனாவுடன் ஆரோக்கியமான போட்டியை எதிர்கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது.**
*-அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.*

"ஹி... ஹி... ஹி... முகமனுக்காய்ச் சிரிச்சுக் கொண்டு, பிறத்தியாருடைய முதுகில குத்துற உவேன்ர முதலாளித்துவ விளையாட்டுக்களைப் பற்றி எங்களுக்குத் தெரியாதே. அணு குண்டுப் போட்டி... எண்டு சொல்லவந்த வாய், சொல்லுப் பிசகி ஆரோக்கியமான போட்டி எண்டு உளறிப்போட்டுது போலக்கிடக்குது. உந்த ஆரோக்கியமான போட்டியெண்டதை சீனாக்காரனோடை மட்டும் வைச்சுக் கொண்டாடாமல், உலகத்தில சிறுமைப்பட்டுப் போயிருக்கிற சின்ன நாடுகளோட வைச்சுக் கொண்டாடினால் நல்லாயிருக்குமல்லோ பராக்கு. ஏதோ பாத்துச் செய்!

**தேர்தல் வந்தவுடன், வருபவர்கள் குறித்துக் கவனமாக இருங்கள்.**
*- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.*

"ஆடிக்கொருக்கா, அமாவாசைக்கொருக்கா வீடுதேடி வாறபிச்சைக்காரன் மாதிரி ஏதோ அதுகளும் பிச்சைக்கெண்டு வருகுதுகள் ஐயா. அதையேன் நீங்கள் கெடுக்கிறியள்? உங்களைப்போல அலட்டாமல் கொள்ளாமல் காரியத்தை ஒப்பேற்றத் தெரியாமல்தானே அதுகள் தேர்தல் திருவிழா அதுவுடன தெருவுக்கள்... ரோட்டுகளில... கடுதாசியளை நீட்டிப்பிடிச்சுக்கொண்டு கடைவாய் பல்லுகள் தெரியப் பிச்சை எடுக்குதுகள். அதுகள் உருப்படுகிறதும் உருவழியிறதும் சனங்கள் போடுற பிச்சையில தானய்யா இருக்குது. எண்டாலும் சனங்களை உசார்ப்படுத்தினதுக்கு உங்களுக்கு ஏன் நன்றியள். உங்களைப் போல சனத்தில அக்கறை உள்ளதுகளா எல்லாம் இருந்தால் எங்களுக்கு தேர்தல் என்னத்துக்கு...? திருவிழா என்னத்துக்கு...?"

**இலக்கியத்துக்குள் நின்றுசெயற்படுவது வலிகள் நிறைந்த சுகமான அனுபவமாகும்.**
*-திருமறைக்கலாமன்ற செயலாளர் எஸ். சதீஸ்குமார்.*

"தம்பிக்கு நல்ல 'அனுபவங்கள்' கிடைச்சிருக்குப்போல தெரியுது. அதுதான் "வலிகள் நிறைந்த சுகமான அனுபவம்..." எண்டு சொல்லியிருக்குது. வலியள நிறைஞ்ச எழுத்தாளன்ர வலிவாழ்க்கையை அவன்ர எழுத்தில இருந்து பயச்சுப் பாக்கலாம். ஒரு எழுத்தாளன் தன்ர வலியளை எழுத்துக்கள எழுதிக்கொட்டுறதும் சரி... ஒரு புயலடிச்சு ஓய்ஞ்ச போறதும் சரி... இரண்டுக்கும் எனக்கென்னவோ பெரிசா வித்தியாசம் தெரியேல்ல. வலியளைச் சுமந்து வெளிக்கிட்ட உந்த வன்னி எழுத்தாளர்கள் எல்லாம் எங்க போட்டினம்? தம்பி சொல்லுறது மாதிரி வலியல் நிறைஞ்ச சுகமான அனுபவம் தான் இலக்கியம், உதை உந்த வன்னிச் சண்டைக்கை அம்பிட்ட ஆக்கள் எழுதுவினமோ?"

**இராணுவச் சீருடையில் போதைப்பொருள் விற்பனை.**
*-பத்திரிகைச் செய்தி.*

"போர்படுத்தாப்போல நம்மட நாடுபோற போக்கைப் பாக்க பல்லைத்தான் காட்ட வேண்டிக்கிடக்குது. ஹி... ஹி... ஹி... ஒரு பக்கத்தில மரக்கறி வியாபாரம். ஓஹோ எண்டு நடக்குது! இன்னொரு பக்கத்தில உந்தக் கூத்துகளும் நடக்குதே! நாட்டில சண்டை நடக்கேக்கை அதுகளுக்கு வேறசிந்தனை இல்லாமல் அடிபட வேணுமெண்டு இருந்ததுகள். இப்ப எல்லாம் அடங்கிப் போனதால போதை வியாபாரமும் பொயிலைக்காம்பு வியாபாரமும் செய்ய வெளிக்கிட்டிருக்குதுகள். ஒண்டிரண்டு உப்பிடி ஊத்தை வேலையள் செய்தாலும், சிலதுகள் பொதுச்சனங்களோட சேர்ந்து உருப்படியான வேலையளும் செய்யுதுகள் தான் பாருங்கோ..."

**வற்றாப்பளை கண்ணகை அம்மனுக்கு ஐந்தடுக்கு இராஜகோபுரம் அமைப்பு.**
*-பத்திரிகைச் செய்தி.*

உந்தச்செய்தியை பேப்பரில பாத்த நேரம் தொடக்கம் சிரிக்கிறதோ அழுகிறதோ எண்டது ஒண்டுமாத் தெரியாமல் கிடக்குது. உந்த வற்றாப்பளைக்குப் பக்கத்தில கிடக்கிற புதுக்குடியிருப்புச் சனங்கள் இன்னும் செட்டுகளும் முகாமை விட்டு ஊருக்கு வந்து சேரேல்லை. அயலூருக்குகளுக்கை வந்து சேர்ந்த சனங்களுக்கும் இன்னும் அடிப்படைத் தேவையள் சரியாக் கிடைக்கேல்லை. முகாமிலையிருந்து வந்தவருக்கு முன்னம் கோடிக்கணக்கில காசைக்கொட்டி அம்மனுக்குக் கோபுரம் கட்டுறதே இப்பத் தேவைப்படுகுது? இப்ப கோபுரம் முக்கியமோ? போருக்குள்ள கொதிச்சப் போய் வந்திருக்கிற சனங்கள் முக்கியமோ? அம்பாளுக்கு கோபுரம் கட்ட வேணாமெண்டு நான் சொல்லவரேல்லை. கோபுரத்துக்கெண்டு கொட்டிச் செலவழிக்கிற கோடிப்பணத்தை பாதிக்கப்பட்ட சனத்துக்குப் பகிர்ந்து குடுங்கோவன். அம்பாளுக்கும் சந்தோசமாயிருக்கும்; அயல் அட்டைச்சனங்களுக்கும் அம்பாளில பக்தியும் வரும். பயமும் வரும். அதை விட்டிட்டு, ஊருக்குள்ள சனம் பசியட்டுனி இருக்கை இடமில்லாமல் பெருமூச்செறிய... உண்மையான அம்பாள் உங்கட கோடிப் பணத்துக்கு கோபுரத்தில குந்தியிருப்பாளோ?

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அரசின் சாதக...

எனவே தம்மை நோக்கி வருகின்ற சவால்களை எதிர்கொண்டு அவற்றைச் சாதகமாக மாற்றுவதற்கு, மக்கள் எதிர்கொண்டு வருகின்ற வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்கு ஆரோக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற அதே வேளை, நீறுபூத்த நெருப்பாக இருக்கும் பிரச்சினைக்கு நீதியான ஓர் அரசியல் தீர்வையும் முன்வைத்து நாட்டில் சுமூகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். இது அச்சுறுத்திக்கொண்டிருக்கும் வெளிச் சக்திகளுக்கும் தலையை நுழைக்கும் வாய்ப்புக்களைக் கட்டுப்படுத்தும் என்பது உணர்ந்து செயலாற்றப்படுவது அவசரமும் அவசியமாகும்.

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கப்பலில் புலிகள்...

நீண்டகால பயணத்துக்கு உதவாத படகுகளும், கடலின் சீற்றத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத படகுகளும் இவர்களின் கடற் பயணத்தை மிகவும் ஆபத்தானதாக்கி விடுகின்றன.

உணவு, குடிதண்ணீர், மருத்துவ வசதிகள் இல்லாமல் கடலிலேயே பெரும்பாடுபடுகின்றனர். பலர் இறந்தும்போயிருக்கின்றனர்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் தலைமறைவாகி இருக்கும் ஆசிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் பெரிய தூர இடை வெளி இல்லை என்றபோதும், மீண்டும் இலங்கைக்கு வர அஞ்சுகின்றனர். இவர்களில் சில முக்கிய புலி உறுப்பினர்களும், அவர்கள் சார்ந்த உறுப்பினர்களும் இருப்பதால் அவர்கள் இலங்கை திரும்ப விரும்பவில்லை.

கடலில் இறந்தாலும் பரவாயில்லை. உயிர் மட்டும் மிகுதியாக வாழ்ந்தால் அது இலங்கை தவிர்ந்த ஒரு நாடாக இருக்க வேண்டும் என்று இருந்தவர்கள், இப்போது அது ஐரோப்பிய அல்லது வசதியான நாடாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

இவர்களை ஏமாற்றும் ஒரு கும்பலும் உண்டு. படகு கொள்வனவு செய்வது, தலைமறைவு வாழ்வுக்கு உதவுவது என்று பலர் பணம் பறிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக கப்பல் அகதி ஒருவர் கூறுகின்றார்.

கப்பலில் போகின்றவர்களை எல்லாம் புலிகளாக சித்தரிக்கும் தேவை இலங்கை அரசுக்கும் உண்டு. "கரணம் தப்பானால் மரணம்" என்ற நிலையில் கடலில் உயிருடன் போராடியபடி எமது உறவுகளும், இந்த நிலைக்கு வித்திட்ட புலி உறுப்பினர்களும் தவிக்கின்றனர்.

தமிழ்பேசும் இனத்துக்கு மண்ணிலும் கடலின் வாழ்வுக்கான போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது.

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அப்பா...

"என்ன மூக்கை இழுக்கிறீங்கள். மழைக்குள்ள நனைஞ்சனீங்களே தடிமனே எண்டு அவரை உற்றுப் பார்த்தாள் கண்மணி.

விளக்கு வெளிச்சத்தில் நடராஜாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

என்னப்பா ஏன் அழகுறீங்கள் என்று கண்மணி பதற்றத்தோடு கேட்டுக்கொண்டு முந்தானையை எடுத்து அவரின் முகத்தைத துடைத்துவிட்டாள்.

உதடு நடுங்க நடராஜா பேசினார். "என்னோடு நாப்பது வருசமா குடும்பம் நடத்துறீர் இன்னும் என்னைப் புரிஞ்சுகொள்ளவில்லையே.

"என்ர செல்லப்பிள்ளையை நான் வீட்டை விட்டு விரட்டுவனே.

அவள் வீட்டில இருந்தால் அவளுக்கு வாழ்க்கையின்ர நன்மை தீமைகளைப் புரிஞ்சுகொண்டு வாழவேணுமெல்லோ.

பிள்ளை இங்கதானே இருக்கிறாள் எண்டு பெடியும் எத்தனை நாளைக்கு அங்கையும் இங்கையுமா திரியப்போகுது. அதுகள் இங்க சந்தோசமாக இருந்தாலும் தனிக்குடித்தனம் போய் சந்தோசமாக இருக்கிறதை பார்த்தாத்தானே என்னால நிம்மதியாகச் சாகக்கூட முடியும்.

அவள் என்னைக் கோபிச்சுக் கொண்டாலும் பரவாயில்லை. நல்லா வாழ்ந்தால் போதும் எண்டுதான் நான் நினைக்கிறேன்.

நாளைக்கு எனக்கு ஒண்டு ஆயிட்டுது எண்டால் அவள்தானே தங்கச்சிமாரைப் பார்க்கவேணும். இந்த வீட்டிலையே இருந்திட்டால் அவளும் தனிச்செல்லே போயிடுவாள். அவள் ரோசக்காரி எனக்கு வாழ்ந்துகாட்டுறதுக்காகத்தன்னும் அவள் நல்லா இருப்பால் புரியுதோ என்று நடராசா சொல்லி முடிக்கும்போது கண்மணியின் கண்களிலும் நீர் நிரம்பியிருந்தது.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வாழ்க்கையே...

ஏன்? எதற்கு? இப்படி நடக்கிறது " நடந்து கொள்கிறோம்? என்று புரிந்து கொள்ளவே முடியாமல் எப்போதும் மனம் ஆடும் கூத்துகள் பலப்பல.

இந்த வாழ்க்கையே சூதாட்டம் போலத்தான் இருக்கிறது. நாமெல்லாம் ஜெயிக்க விரும்பித் தோற்றுக் கொண்டிருக்கும் சூதாடிகளாகத்தான் இருக்கிறோம். இந்த மனம் நம்மை எங்கெல்லாம் இழுத்துச் செல்லும் என்பதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. மனதை அடக்கக் கற்றுக் கொள்ளாமல் வெற்றியில்லை என்பதே தாயுமானவரதும் செய்தி. அறிய முடியாததாய் இருப்பதை அறிதலும், பிறகு அதை அடக்குதலும் என்கிற பெரியதொரு சவாலை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. வாழ்க்கையின் இரகசியம் நமக்குள்ளேதான் இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டு வெற்றி பெறுவதா அல்லது கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைப்பதா என்பதும் நம் கையில்தான் இருக்கிறது.

இங்கு மாற்றங்கள் உருவாக வேண்டும் என்றால், அதற்கு நம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. பழைய வெறுப்பிலும் பகையிலும் தொங்கிக் கொண்டிராமல், எதிர்காலத்தை யோசித்து நம்மைப் புதியவர்களாக்கிக் கொள்ளவும், புதுப்பாதை காணவும் வேண்டியிருக்கிறது. நம்மை வாழவிடாமலடிக்கும் வரட்டுப் பிடிவாதங்களையும், எத்தனையோ ஆண்டுகளாய் மனதில் ஏறி இறுகியிருக்கும் வீம்புகளையும் விட வேண்டும். மற்றவர்களை உணர்தல், மக்கள் வேதனைகளை அறிதல், ரோசங்கள் பெருமைகளுக்கு மேலாக அழிவோலமில்லா வாழ்வை முன்வைத்தல், பகைமறத்தல், சகித்தல், பன்மைத்துவ வாழ்வமைத்தல், நாண்டு கொண்டு நில்லாமல் நலம் நாடி முன்னகர்தல் என நம்பிக்கையின் திசையில் நம் மனங்களைத் திருப்ப வேண்டியிருக்கிறது.

மனிதர்களை விலக்கி வீம்பு காட்டும் மனதை எல்லோரது நன்மைக்காகவும் இணக்கம் கொள்ளப் பழக்குவோம். எளிமையானதும், எல்லோரும் இன்புற்றிருப்பதுமான ஒரு வாழ்வுக்காக நாம் இறங்கிச் செல்வதில் எந்த இழிவுமில்லை. இணங்கியும் இணங்க வைத்தும், இந்த வாழ்வை வெல்லும் திண்ணிய மனங்களைப் பெற, சித்தர்கள் போலவே நாமும் ஏங்குவோம். "மனதை ஒரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி என-தறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?"

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வெள்ளமும்...

அதற்கு முன்னர் தானும் தாய் இறால் கூனி வடிக்கப் போவதாகவும் அதன் மூலம் நாளாந்தம் கிடைக்கும் நூறு நூற்றைம்பது ரூபாயைக் கொண்டு அரிசி அல்லது பாண் வாங்கி உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காகக் கூறும் லெட்சுமி இறால் கூனி பிடிபடாத போது காட்டிற்குச் சென்று ஒரு வகைக் கிழங்கு பிடுங்கி எடுத்து அதை அவித்து உண்பதாகவும் இப்போது காட்டில் வெள்ளம் ஏற்பட்டதால் அந்த கிழங்கை கூட பிடுங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கண்ணீர் மல்க கூறுகிறார். உள்ளத்தை உருக்கும் இத்தகைய அனுபவங்கள் ஒன்றிரண்டு பேரி டம் மட்டுமல்ல. ஏராளமானவர்களிடம் இருக்கிறது. வாழ்வாதாரத்துக்காக ஏதாவது ஒன்றை கொடுப்பதும் உலருணவுப் பொதி ஒன்றை விநியோகிப்பதன் மூலமும் பாதிக்கப்பட்ட பெண்களை மீட்டெடுத்து விட்டதாக கருத முடியாது. இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சமூகமாகப் பெண்கள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் நிவாரண விநியோகம் மீளமைப்பு, வாழ்வாதாரம் என்பனவற்றில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதும் அவர்களை மனத்தைரியம் ஊட்டுவதும் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று கூறும் ஆசிரியையும் சமூக விவகாரங்களில் அக்கறை உடையவருமான ரி.சிறிசித்திராவின் கருத்தை சீர்தூக்கிப் பார்ப்பதும் இங்கு அவசியமாகும்.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வெள்ளம் தந்தது...

அரசின் அடிமட்ட அதிகாரிகளான கிராமசேவகர்கள் வழங்கும் தகவல்களைக் கொண்டே அரசாங்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, அரசாங்க அதிகாரிகளான கிராமசேவகர்கள், இடர்கள் இடம்பெறும்போது அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இக்கட்டான வேளையில் கூட மனிதாபிமானமற்று நடந்து கொள்ளும் இத்தகைய அரச அதிகாரிகளால் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது. தங்களுக்கு எதுவித நன்மையும் கிட்டப்போவதில்லை, வீணான வேலைப்பளு ஏற்படும் என்பதால் வெள்ள அகதிகள் தங்கியிருந்த சில நலன்புரி நிலையங்களைக் கூட அகற்றவேண்டும் என்று சில கிராமசேவகர்கள் ஆலோசனை கூறிய விடயங்களும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வெள்ள அனர்த்த காலப்பகுதியில் ஆடம்பரமான அரசியல் பிரபலங்களுக்காக செலவிட்ட அநாவசிய செலவுகளை அகதிகளின் நலன்களுக்காக பிரயோசனப்படுத்தியிருந்தால் அதிக நன்மை கிட்டியிருக்கும்.

இதேவேளை வெள்ளம் இடம்பெற்ற காலத்தில் தமிழ் முஸ்லிம் என்ற பேதமில்லாது படையினரும் பொலிசாரும் அர்ப்பணிப்போடு ஆற்றிய சேவைகளை அனைவரும் மெச்சுகிறார்கள். திருகோணமலை ஈச்சிலம்பற்று பகுதியைச் சேர்ந்த தமிழ் குடும்பங்களை கடற்படைப் படகில் அவசர அவசரமாகச் சென்று மீட்டெடுத்த படையினர், அவர்கள் அணிந்திருந்த ரீசேட்டுக்களைக் கூட கொடுத்து குளிரிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றியதாக மீட்கப்பட்ட அகதிகள் தெரிவிக்கிறார்கள். இத்தகைய உணர்வூட்டும் உதவிக்கரம் நீட்டிய சம்பவங்கள் ஏனைய இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. இனியும் இடர்கள் வராது என்பதற்கில்லை. எதிர்காலத்திலும் ஏமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ள பொதுமக்கள் ஆக்கபூர்வமான வழிகளில் தங்களைத் தயார்படுத்திக்கொள்வது அவசியம்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(27.01.2011 தொடக்கம் 02.02.2011 வரை

ஆதினி

**மேடம்:** தொழில் செய்யுமிடத்தில் பாராட்டும் பரிசுகளும் கிடைக்கும். மேலதிகாரிகள் மனங்கோணாமல் உதவி கள் பலவும் செய்வார்கள். இலாபம் உண்டாகும். எதிர்பார்த்த விடயங்கள் எதிர்பார்த்தது போல நடந்து மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். குடும்ப உறுப்பினர்கள் முரண்படாது உதவிகள் செய்வார்கள். பணத்தட்டுப்பாடு உண்டாகமாட்டாது. தேகநலன் விருத்தியாகும். மருத்துவச் செலவுகள் குறையும். வியாழக்கிழமையை அவதானமாகக் கழிக்கவும். அரசியலில் உள்ளோர் மதிக்கப்படுவர். விவசாயி களும், வியாபாரி களும் பெரும் இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள்: புதன்.

**இடபம்:** இனிய வார்த்தைகள் பேசிக் காரியகளைச் சாதிப்பீர்கள். தொழிலில் இருந்து வந்த சிக்கல்கள் மறைந்து மன- தில் உற்சாகம் பிறக்கும். நண்பர்கள் இனசனபந்துக்கள் உதவி செய்வார்கள். பணத்திற்குத் தட்டுப்பாடு ஏற்படமாட்டாது. குடும்பத்தின் சுபநிகழ்வு ஒன்றிற்காக அதிக பணம் செலவா- கும். புதிய முயற்சியில் அதிக பணம் செலவாகும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வெள்ளிக்கிழமையை அவதானமாகக் ககழிக்கவும். தேகநலன்பாதிக்கப்படமாட்டாது. மாணவர்கள் கல்வி யில் முன்னேற்றமடைவர். அரசியலில் நன்மை அடைவர். விவசாயிகளும், வியாபாரிகளும் புதன் கிழமையைத் தவிர்க்கவும். மற்றைய நாட்களில் இலாபம் உண்டு. அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**மிதுனம்:** தொழிலில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். மேலாளர் உதவுவர். போட்டிகளில் கலந்து கொள்வோர் பரிசு பெறுவார்கள். பணத்திற்குத் தட்டுப்பாடு ஏற்படாது. வெளியூரில் உள்ள நண்பர் ஒருவரின் தொடர்பில் பணம் சேரும். தொழிலுக்காகப் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டி வரும். விவேகத்துடன் நடந்து காரியங்களை வெற்றி கொள்வீர்கள். பகைவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டி முன்னேற்றமடைவர். அரசியலில் உள்ளோர் அதிக பிரயாசையின் பின் வெற்றியடைவர். வியாபாரிகளும், விவசாயிகளும் புதிய முதலீடுகளைச் செய்வதன் மூலமும் இலாபம் பெறுவர். அதிர்ஷ்டநாள்: செவ்வாய்

**கடகம்:** தொழிலில் சில சிக்கல்கள் தோன்றி மனவேதனையைக் கொடுக்குமே தவிர பாதிப்பை உண்டாக்காது. செய்யும் காரியங்கள் யாவும் தடங்கலின் பின்பே நிறைவேறும். வார இறுதியில் எதிர்பார்த்த காரியம் ஒன்று ஒய்வை விரும்புவீர்கள். அதனால் சில தீமைகள் உண்டாகலாம். பணத்திற்குத் தட்டுப்பாடு உண்டாகாது. நண்பர்களும் தாராளமாக இரத்த வழிச்சொந்தக்காரர்களும் தாராளமாக உதவமுன்வருவார்கள். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். அவர்களை இன்சொல்பேசி வசியப்படுத்தலாம். அரசியலில் உள்ளோர் ஏற்றம் காண்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் இலாப- மடைவர். அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

**சிங்கம்:** தொழிலில் அடிக்கடி சிக்கலும் குழப்பமும் தோன்றி நிம்மதியைக் குலைக்கும். விதண்டாவாதத்தை விட்டுப் பொறுமையுடன் நடக்காவிட்டால் சிக்கல் கள் பலவும் உருவாகும். நினைத்த காரியங்கள் நடை பெறாது. வரவுக்கு அதிகமான செலவு உண்டாகும். பணத்தட்டுப்பாடேற்பட்டுக் கடன்பட வேண்டிய நிலை உருவாகும். உடல் நலத்தில் அக்கறை செலுத்தவும். குடும்பத்தாருடன் முரண்படாது நடந்து கொள்ளவும். மாணவரைப் பெற்றோர் ஊக்குவித்தல் வேண்டும். அரசியலில் உள்ளவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். விவசாயிகளும், வியாபாரி களும் அவசரப்படாது நிதானமாகச் சிந்தித்து முதலீடு செய்யவும். அதிர்ஷ்டநாள்: ஞாயிறு.

**கன்னி:** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு இலாபம் அடைவீர்கள். நினைத்த காரியங்களைச் செயற்படுத்தும் போது தடைகளும் தாமதங்களும் உண்டாகி மனவருத்தத்தைக் கொடுக்கும். ஆனால் பயப்படத் தேவையில்லை. வார இறுதியில் தடைப்பட்ட காரியங் கள் நல்ல முறையில் முடிவடைந்து மனமகிழ்ச்சியைத் தரும். மற்றவர்களுக்கு உதவுவீர்கள். புதிய முயற்சி களில் ஈடுபட்டால் வெற்றியும் இலாபமும் கிடைக்கும். மாணவர்கள் மனம் குழம்புவார்கள். உற்சாகப்படுத்தல் வேண்டும். அரசியலில் உள்ளோரின் செயல்கள் தடைப் படும். விவசாயிகளும், வியாபாரிகளும் புதிய கொள்வனவு களைச் செய்யலாம். இலாபம் உண்டாகும். அதிர்ஷ்டநாள்: புதன்.

**துலாம்:** தொழிலில் நட்டம் ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டு. முயற்சிக்கேற்ற இலாபம் பெறுவது கஷ்டமாக இருக்கும். எதிர்பார்த்த பணவரவில் தாமதமேற்படும். நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடக்கும். ஆனால் தடைகள் உண்டாகும். வெளியிடச் செய்தி ஒன்று மகிழ்ச்சியைத் தரும். உறவினர்களும் நண்பர்களும், வார இறுதியில் உதவி செய்வர். வீட்டில் சிறுசிறு சச்சரவுகள் உண்டாகித் தீரும். மனைவி வழியால் உதவிகள் வந்துசேரும். உடல்நலம் நன்றாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் ஆர்வங்காட்டுவர். பரீட்சையில் நல்ல பெறுபேற்றை எதிர்பார்க்கலாம். அரசியலில் உள்ளோர் ஆதாயமடைவர். விவசாயிகளும், வியாபாரிகளுக்கும் இலாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட நாள்: சனி.

**விருச்சிகம்:** தொழிலில் பகைவரால் சிலசில குழப்பங்கள் உண்டாகும். நம்பியிருந்தவர்கள் ஏமாற்றுவர். பொறுமை யுடனும் நிதானத்துடனும், நடந்து வெற்றி காணல் வேண்டும். இனசனபந்துக்களின் உதவ- ிகள் வாரப்பிற்பகுதியில் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் உதவிசெய்வார்கள். நீண்ட தூரப் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை உருவாகும். தேகநலன் விருத்தியடையும். மாணவர்கள் விளையாட்டில் ஈடுபாடு காட்டுவார்கள். அரசியலில் உள்ளவர்கள் மதிக்கப்படுவார்கள். விவசாயிகளும், வியாபாரிகளும் புதிய முயற்சிகளை ஆரம்பிப்பதாயின் இவ்வார இறுதியில் ஆரம்பிக்கவும். அதிர்ஷ்டநாள்: சனி.

**தனுசு:** எதிரிகளால் தொழிலில் குழப்பமுண்டாகும். அதனால் மனக்குழப் பமும் நிம்மதியின்மையும் உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாரத்தின் நடுப்பகுதியில் நிலைமை சீராகும். எதிரிகள் சமாதான மடைவர். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். தேகநலன் விருத்தியாகும். குடும்பத்தில் விண்பிரச்சினைகளால் குழப்பமும் வேதனையும் உண்டாகும். தாய் வழியால் உதவி உண்டு. எதிர்பாலாருடன் அவதானமாகப் பழக வும். மாணவர்களின் கல்வி முன்னேற்றமடையும். அரசிய லில் உள்ளோர் விமர்சிக்கப்படுவர். வியாபாரிகளும், விவசாயிகளும் இலாபம் அடைவர். புதிய முதலீடு களை இவ்வாரம் தவிர்க்கவும். அதிர்ஷ்டநாள்: வியாழன்.

**மகரம்:** தொழிலில் வார ஆரம்பத்தில் உற்சாகம் மேலிட்டு இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். சுப நிகழ்வொன்று நடைபெறும். வார நடுப்பகுதியில் சோம்பலும் மறதியும் உண்டாகிக் காரியங்களைக் கெடுக்கும். இதனால் தொழிலாளர்களும் மேலதிகாரிகளும் வெறுப்பர். வார இறுதியில் இவை நிவர்த்தியாகும். நினைத்த காரியங்கள் நினைத்தவாறு இறுதியில் நடை பெறும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். தேர்வுகளில் சிறப்பாகச் சித்தியடைவர். அரசியலில் உள்ளோர் புகழ் பெறுவர். வியாபாரிகளும், விவசாயிகளும் எதிர்பார்த்த இலாபத்தைப் பெறுவர். அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

**கும்பம்:** தொழிலில் எதிர்பார்த்தவை யாவும் நடைபெற்று மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். எதிர்பார்த்த பணம் எதிர்பார்த்தபடி வந்தசேரும். பொறுமை யுடன் செயல்களைச்செய்து வெற்றி காண்பீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் உதவியும் வாரம் முழுவதும் இருக்கும். கவலையைத் தரும் நிகழ்வு அல்லது செய்தி ஒன்று வார இறுதியில் கிடைக்கும். அதனால் கவலை உண்டாகும். தேகநலன் விருத்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி உருவாகும். தந்தை வழியால் பொருள் வந்துசேரும். மாணவர்கள் உற்சாகமாகக் கற்பர். அரசியலில் உள்ளோர் அவதானமாகச் செயற்படவும். விவசாயிகளும், வியாபாரிகளும் எதிர்பார்த்த இலாபத் தை அடைவர். அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

**மீனம்:** தொழிலில் இலாபமும் முன்னேற்றமும் உண்டாகும். பெரியவர்கள் மதிப்பளிப்பார்கள். கௌரவம் நன்றாக இருக்கும். நினைத்த காரியங்கள் தாமதித்தே வெற்றியளிக்கும். எதிர்பார்த்த பண- வரவில் தடைகள் ஏற்படும். ஆனால் வார இறுதியில் யாவும் நல்லபடி வந்து சேரும். தேகநலனில் அக்கறை செலுத்தவும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றினாலும் அதனால் பாதிப்புக்கள் ஏற்படாது. உறவினர்கள் உதவிசெய்வர்கள். மாணவர்கள் கல்வியில் அக்கறை கொள்வர். அரசியலில் உள்ளோர் எதிர்பார்த்தவற்றைச் செய்து முடிப்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் முதலீடு செய்யலாம். இலாபம் கிடைக்கும். அதிர்ஷ்டநாள்: வியாழன்.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ எலக்ஷன் நடக்கப்போகுது எண்டதும் ஆக்களைப்பிடிக்கிறது எண்டாலும் விட்டனே, கிழக்கில வெள்ளத்தைப் பார்க்கப்போன இடத்தில அரியமான வரையும் ஒருக்கால் பார்த்துப் போட்டுத்தானுங்கோ வந்தனான். சும்மா சொல்லக் கூடாது ஆள் கதைக்க வெளிக்கிட்டால் சரவெடிதானுங்கோ. எப்படி வெடிச்சதெண்டு கீழ படியுங்கோவன்**

**கா:பூ–** என்ன அரியத்தார் வெள்ளத்தில உங்கட வாகனமும் அடிபட்டுப் போச்சுதாமே. பிறகு என்ன நடந்தது?

**அரி:–** என்ன கந்தசாமி அண்ண. பொதுவாகவே விடுப்புத்தான் கேட்பியல், இப்ப புதுசா குசலம் எல்லாம் விசாரிக்கிறீயள். உங்கட அரசியலும் மாறுதுபோலை. அதொண்டு மில்லை. வெள்ளத்தாலை பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கப்போயிருந்தன். றோட்டை குறுக்கறுத்து தண்ணி போச்சுது. நிண்டால் நிலைமை போசமாகிடும் எண்டிட்டு வாகனத்தை எடுக்கச் சொன்னன். அதிலதான் றோட்டில கொஞ்சத்தூரம் இழுபட்டது.

**கா:பூ–** வாகனம் இழுபட்டதைச் சொன்னமாதிரி அரசியலில இருக்கிற இழுபாட்டையும் சொல்லுங்கோவன்.

**அரி:–** நல்லகாலம் கேட்டியள். உந்த எலக்ஷனில கூட்டமைப்போட யாரும் வந்து கூட்டு வைக்கப் போயினம் எண்டால் அதுக்கு கிழக்கு மாகாண எம்.பி.மார் எதிர்ப்பு எண்டு சொல்லினம். நான் கேக்கிறன் கிழக்கானுக்குத்தான் சூடு சொறணை இருக்குது. மற்றவைக்கு இல்லை எண்டு சொல்ல வருகினமோ. இல்லாட்டில் கிழக்கான்தான் குழப்புறான் எண்டு சொல்லப் பாக்கினமோ. எனக்கொண்டால் ஒண்டுமா விளங்குதில்லை. இதிலை சூடு சொறணை எண்டதுக்கோ குழப்பம் எண்டதுக்கோ நீங்கள் சொல்லுமாப்போலை இழுபாடு எண்டதுக்கோ இடமில்லை எண்டுதான் நினைக்கிறன்.
கூட்டமைப்போடை யாரும் கூட்டுக்கு வரலாம் எண்டதிலையே யார் வருகினம் எண்டதையிட்டு சிந்திக்கத்தானே வேணும். சில பேர் தங்கடை நிலைப்பாட்டை வெளிப்படையா சொல்லுவினம். சிலபேர் சொல்லமாட்டினம்.

**கா:பூ–** நீங்கள் சொல்லுறது சரியெண்டாலும் அரியத்தார், கூட்டு எண்டால் கட்சியைக் கலைச்சுப்போட்டு வாங்கோ எண்டால் அது சாத்தியமே.

**அரி:–** சாத்தியமில்லைத்தான். என்னைப் பொறுத்தவரை கட்சிகள் எண்டு சும்மா சொன்னால் சரியோ. நினைச்சவரெல்லாம் ஒரு கட்சியெண்டு சொல்லிக்கொண்டு வாரதுக்கு கூட்டமைப்பு என்ன சத்திரமே.

**கா:பூ–** அப்படியெண்டால் இப்ப கூட்டமைப்பில இருக்கிற கட்சிகள் தங்கட தனிப்பட்ட கட்சிகளை கலைச்சுப்போட்டா கூட்டமைப்பாகின வை எண்டு ஒரு கேள்வியும் எழுவதற்கு இடமுண்டுதானே.

**அரி:–** உண்டுதான். அதை நான் மறுக்கயில்லை. இண்டைக்கு அது நடக்காட்டிலும், எதிர்காலம் அதை நோக்கித்தான் போகுது. அதை நடைமுறையிலையே காணமுடியும். அதேநேரத்தில இன்னொண்டையும் சொல்லுறன். ஆரம்ப நிலைமையை யும், தற்போதைய நிலைமையையும் சமப்படுத்திப் பார்க்க முடியாதுதானே.

**கா:பூ–** சரி உங்கட நிலைப்பாட்டைச் சொல்லுங்கோ.

**அரி:–** என்ட நிலைப்பாடு எண்டு ஒண்டுமில்லை. கூட்டுக்கு வாரவையள் பற்றியும் அதின்ர பின்னணிகள் பற்றியும் நிறைய சிந்திக்க வேணும். நேற்றுவரை கூட்டமைப்பை கிழிகிழியெண்டு கிழிச்சவையை நினைத்த மாத்திரத்தில் உள்வாங்க முடியாது. கூட்டமைப்புக்கு யாரையும் கூட்டுச் சேர்க்க வேணும் எண்டு அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

**கா:பூ–** அப்படி எண்டால் யாரும் வரவேண்டாம் எண்டதை சுத்தி வளைச்சுச் சொல்லுறியல் அப்படித்தானே.

**அரி:–** உதில சுத்திவளைச்சோ நிமித்தியடிச்சோ எண்டெல்லாம் ஒண்டுமில்லை. கூட்டமைப்புக்குள்ளேயே இரண்டு விதமான நிலைப்பாடுகள் இருப்பதாக செய்திகள் உண்டு எண்டதை நான் மறுக்கயில்லை. அதுக்காக மேலமேல பிரச்சினைகளை உள்வாங்க முடியாது எண்டதுதான் கூட்டமைப்பை நேசிக்கும் ஒருவரின்ர நிலைப்பாடாக இருக்க முடியும். நான் கூட்டமைப்பை நேசிக்கிறன் புரியுமெண்டு நினைக்கிறன்

**கா:பூ–** புரியுது புரியுது. யாரும் அழையா விருந்தாளியாக வந்தால் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கத்தானே செய்யும்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# ஆகாயத்தில் பறந்த முதல்வர்

உலகை வியக்க வைத்தவர்கள்

இன்று மனிதன் வேறு கிரகங் களுக்குச் செல்லும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான். ஒரு காலத்தில் பூமியில் நின்றபடி ஆகாயத்திலே மிதந்து செல்லும் மேகங்களையும், பறந்த போகும் பறவைகளையும் வியப்போடு பார்த்து ஏங்கினான் மனிதன். நம்மாலும் இம்மாதிரி வானத்திலே மிதந்தும் பறந்தும் போக முடியுமானால் எவ்வளவு குதூகலமாக இருக்கும் என்று கற்பனையில் மூழ்கிய அவன், தன் கனவை நினைவாக்கிக் கொண்டான். ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தான். பறவைகளைப் போல



என்னாலும் பறக்க முடியும் என்று வெற்றிக் கொடி பிடித்தான். அவன் ஆர்வம், ஆசை அத்தோடு நின்றதா? இல்லை நிற்கக் கூடாத கனவுகள், ஆசைகளாயிற்றே! விண்வெளியை வெற்றி கொண்டு, இன்று சந்திரனிலே வேறு கிரங்களிலேயே வீடு அமைத்து முற்பட்டிருக்கிறான். மனிதனின் இந்த வெற்றிக்கு பூமியை விட்டுக் கிளம்பி ஆகாயத்திலே மனித னாலும் மிதந்து செல்ல முடியும் என்ற செயலுக்கு மூல காரணமாக இருந்தது யார்? விண்ணை வெற்றி கொண்ட அந்த மகத்தான முன்னேற்றத்தின் முன்னோடிகள் யார்?



[வியப்புக்கள் தொடரும்...]


Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010)



# காலிக்கு பெருமை சேர்க்கும் டச்சுக் கோட்டை

இலங்கை போர்த்துக்கேயரின் ஆளுகையின் கீழ் இருந்த காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கரையோரங்களை அண்டிய வகையில் கோட்டைகள் அமைக்கப்பட்டன. இவற்றுள் காலி கோட்டை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 17 நூற்றாண்டில் அமைக்கப்பட்ட இக்கோட்டையானது ஒல்லாந்தர் ஆட்சியின் போது மாற்றியமைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டு இன்றும் எழில் கொஞ்சும் உலக அதிசயங்களுள் ஒன்று எனக்குறிப்பிடப்படுகின்ற வகையில் மிளிருகின்றது.

காலி நகரையே புரட்டிப் போட்டிருந்த சுனாமி ஆழிப்பேரலையினால் இந்தக் கோட்டையின் சிறுபகுதியைக் கூட புரட்ட முடியவில்லை. இதிலிருந்து இக்கோட்டையின் வலு தெரி-கிறது. இன்றும் இக்கோட்டைப் பகுதியில் ஆங்கிலேயர்களுக்கும், இலங்கையருக்கும் சொந்தமான பல சொத்துகள் உரிமை கொண்டாடப்படுவதுடன் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களின் ஆகிய வழித்தோன்றல்களான பறங்கி இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கோட்டைப் பிரதேசத்தை சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றும் கோரிக்கை முன்வைத்திருக்கின்றனர். சர்வதேச விமான நிலையம் சர்வதேச துறைமுகம் சர்வதேச கிரிகெட் மைதானம் என அனைத்து அபிவிருத்திப் பணிகளும் நடத்தப் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் எதிர்காலத்தில் சர்வதேச சுற்றுலா பயணிகள், முதலீட்டாளர்களின் பயணம் காலியைச்சுற்றியே வட்டமிடும் காலம் உருவாகும். எனவே இந்த மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியங்கள் நிறைவேறும் பட்சத்தில் இக்கோட்டை மீதான



சர்வதேச பார்வை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



# வாயில்லா ஜீவன்

உலகில் வாழ்கின்ற உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு உணவு முக்கியமானதாக அமைகின்றது. இந்த உணவினை நாம் வாய் வழியாக மட்டுமே உட்கொள்ள முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் வாய் இல்லாத குழந்தைகள் உலகின் பல பாகங்களிலும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்த வகையில் உலகில் 25 குழந்தைகள் வாய் இல்லாத ஜீவன்களாக அறியப்பட்டு உள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கம்போடியாவில் உள்ள கிராமம் ஒன்றில் பிறந்த வாய் இல்லாத ஆண் குழந்தைதான் செங் சோபியா. 2005 ஆம் ஆண்டு பிறந்தது. இக்குழந்தை பிறந்த நாள் முதல் வாயை திறக்க முடியாத நிலையில் இருந்தது. ஆனாலும் பிரசவம் பார்த்த மருத்துவ ஊழியர்கள் ஒரு நல்ல காரியம் செய்து இருக்கின்றனர். இக்குழந்தை பிறந்து சில நாட்களிலேயே கத்தி ஒன்றை பயன்படுத்தி உதட்டின் வலப் பக்கத்தில் சிறிய துவாரம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றனர். மூக்கால் தண்ணீரை குடித்தது. உதட்டில் ஏற்படுத்தப்பட்ட துவாரம் மூலம் உணவு வழங்கப்பட்டது. இக்குழந்தைக்கு உடல் முழுவதும் ஊனமாக காணப்பட்டாலும், வாயில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் துவாரம் மூலம் எப்படி உணவு உண்ணலாம்? என்பதை சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் இக்குழந்தை கற்றுக் கொண்டது. இக்குழந்தைக்கு 2011 ஆம் ஆண்டு மிகவும் முக்கியமான ஆண்டாகும். இவ் வருடம் ஆரம்பத்தில் நடைபெற்ற சிகிச்சை மூலம் இந்தக் குழந்தையின் வாய் திறக்கப்பட்டுள்ளது. அதாவது ஆறு வருடங்களின் பின் குழந்தை வாயை திறந்துள்ளது.


யாழ் - கொழும்பு பயணிகள் சேவைக்கு...

**SDR Travels**

ஆசனப் பதிவுகளுக்கு

கொழும்பு: 0778278089
யாழ் : 0772622638




தொடர்புகளுக்கு :-

40 ஸ்ரேசன் வீதி, கல்கிசை.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

SINCERITY ✵ DECENCY ✵ RESPONSIBLE ✵ அதுதான் SDR


# சாதிக்கக் காத்திருக்கும் நம்மவர்கள்!







எதிர்வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகிவுள்ளன. தென்னாசிய நாடுகளில் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்ற இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து நடாத்தவுள்ள இப்போட்டிகள் இலங்கை இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுக-ளில் நடைபெறவுள்ளது. பாதுகாப்புக் காரணங்களினால் பாகிஸ்தான் மைதானங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

பொதுவாக தென்னாசிய மைதானங்களில் சுழற்பந்துவீச்சாளர்களே ஆதிக்கம் செலுத்தி வருவதால் அனைத்து அணிகளுமே தமது அணிகளில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளன.

இந்நிலையில் இலங்கை அணி சார்பாக முத்தையா முரளிதரன், இந்திய அணி சார்பாக தமிழக வீரர் ரவீந்திர அஸ்வின் ஆகிய இருவரும் களமிறங்கத் தயாராகி வருகின்றனர். இது தமிழ் பேசும் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

கடந்த வருடம் யூன் மாதம் இலங்கைக்கு எதிராக களமிறங்கிய அஸ்வின் இதுவரை எழு சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 14 விக்கெட்டுக்களை விழுத்தியிருக்கிறார். ஐ.பி.எல். போட்டிகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக விளையாடிவரும் இவர் கடந்த வருடம் ஐ.பி.எல்., சம்பியன் லீக் ஆகியவற்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் கிண்ணத்தை வெல்வதற்கு பெரும் பங்கை அளித்திருந்தார். முத்தையா முரளிதனுக்கு ஒத்தாசையாக மறுமுனையில் பந்துவீசிய அஸ்வின் ஏற்படுத்திய நெருக்கடியே சென்னை சுப்பர் கிங்ஸ் ஓட்ட வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பேருதவியாக இருந்துள்ளது. அதேபோன்று ஹர்பஜன் சிங்கிற்கு ஒத்துழைப்பு வழங்கி எதிரணிக்கு நெருக்குதலைக் கொடுக்கும் பட்சத்தில் உலகக்கிண்ணப் போட்டிகளில் பேசப்படும் வீரராக அஸ்வின் விளங்குவார்.

அதேபோன்று தன்னுடைய இறுதித்தொடரில் களமிறங்கும் முரளிதரன் தனது அனைத்து அஸ்திரங்களையும் காண்பிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. இவர்கள் இருவரும் உலக அரங்கில் கலக்க இருப்பதனை அனைத்து தமிழ் பேசும் கிரிக்கெட் ஆர்வலர்களும் உரிமை யுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

C/348

Spicejet

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 13 | வியாழக்கிழமை | (27.01.2011) | பக்கங்கள் IV | ஓசை – 119

## பிரதான அரசியல் கட்சிகள் இன்று வேட்புமனு தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தாக்கல் செய்து வருகின்றன.

இந்த நிலையில் முக்கிய கட்சிகள் ஏற்கனவே தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள போதிலும் நாட்டின் பிரதான கட்சிகளான ஆளும், எதிர்க்கட்சிகள் தமது வேட்பு மனுக்களை இறுதி நாளான இன்றைய தினம் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட முன்னணி கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி. தனது வேட்பு மனுக்களை நேற்றைய தினம் தாக்கல் (IV ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் துப்பாக்கிச்சூடு; சட்டத்தரணி ஒருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு கல்கிசை நீதிமன்றத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சட்டத்தரணியொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் கல்கிசை நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட குற்றவாளியொருவர் பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்து தப்பியோட முயற்சித்த போது அவரைப் கைது செய்வதற்காக பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதனால் குறித்த சட்டத்தரணி காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (IV ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் நீதியான முறையில் வன்முறைகளின்றி நடைபெறவேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள்



**(யாழ்ப்பாணம்)**

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நீதியான முறையிலும் வன்முறையற்ற விதத்திலும் நடைபெற வேண்டும். இதற்காக அரச அதிகாரிகள் நல்வழியைக் காட்டும் அதேவேளை வழிகாட்டிகளாகவும் இருக்க வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.**

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளராக சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் நவசமாஜ கட்சியுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளும் எண்ணம் கைவிடப்பட்டுள்ளதாகவும் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி சார்பில் வல்வெட்டித்துறை நகரசபைக்கான தலைமை வேட்பாளராக தான் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கடந்த (III ஆம் பக்கம் பார்க்க)

## பொதுஜன ஐக்கிய முன்னணி இன்று நியமனப் பத்திரம் தாக்கல்செய்யும்

(வவுனியா)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளுக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை பொதுஜன ஐக்கிய முன்னணி இன்று தாக்கல் செய்யவுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வவுனியா மாவட்டத்திலுள்ள 4 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை நான்கு அரசியல் கட்சிகள் நேற்று தாக்கல் செய்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய நான்கு அரசியல் கட்சிகளுமே தாக்கல் செய்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுள பிரதேச சபை, வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை, வவுனியா தெற்கு (III ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிப்பது குறித்து சந்திரிகா பரிசீலனை

(கொழும்பு)



நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பது தொடர்பாக பரிசீலனை செய்துவருவதாக இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவில் சாட்சியம் அளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்திருந்த முன்னாள் ஜனாதிபதி (III ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளருக்கு நவீன அடையாள அட்டை

(கொழும்பு)

நவீன வடிவத்தில் ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடியதாகவும், நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டும் ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டை தயாரிக்கப்படவுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும், யாழிலும் நடைபெற்ற இந்தியக் குடியரசுத் தின நிகழ்வுகள்



(கொழும்பு)

இந்தியாவின் 62 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் நேற்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா இந்தியத்தேசியக் கொடியை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், இராணுவ மரியாதையையும் ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் தூதரக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எனப் பெருமளவானோர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள இந்தியத்துணைத் (III ஆம் பக்கம் பார்க்க)

## 58 மாணவர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பகிடிவதையில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவர்கள் 58 பேரை சப்ரகமுவ நிர்வாகத்தினர் இடைநிறுத்தியுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் மொழிற்கற்கை நெறிகளுக்கான பேராசிரியர் எச்.எம்.எஸ்.பிரியநாத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்கள் உபவேந்தரின் அனுமதியின்றி பல்கலைக்கழகத்தினுள் நுழைய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அடிலெயிட் போட்டியில் வென்றது இங்கிலாந்து



(அடிலெய்ட்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது போட்டியில் இங்கிலாந்து அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்றுப் பகலிரவு ஆட்டமாக அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ட்ரெட் 102, ப்ரெர் 67 ஓடடங்களைப் பெற்றனர். ஜர்டி ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டேவிட் ஹசி நான்கு, ஸ்மித் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 300 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்று, 21 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் வட்சன் 64, வைட் 44 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ஆட்டமிழக்காது ஸ்மித் 46, பிரெட்லீ 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன், ட்ரெட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ட்ரெட் தெரிவானார்.

ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 3-1 என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணி முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மழையால் கைவிடப்பட்டது

(குயின்ஸ்ரவுண்)

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இரு அணிகளுக்குமிடையிலான ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று குயின்ஸ்ரவுண் மைதானத்தில் நடைபெற்றபோது 4 ஓவர்கள் பந்து வீசப்பட்ட நிலையில் இப்போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றமை தெரிந்ததே.

# பூப்பந்து, மேசைப்பந்து நிரல் தயாரித்தல் இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான பூப்பந்து மற்றும் மேசைப்பந்துப் போட்டிக்கான நிரல் தயாரித்தல் இன்று பிற்பகல் 12.30 மணியளவில் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

நிரல் தயாரிப்பதற்கான நிகழ்வில் மேற்படி வயலத்திற்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியரை தவறாது கலந்து கொள்ளுமாறும், அணிப்பட்டியலையும் கொண்டு வருமாறும் வலிகாம உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. நடராஜா கேட்டுள்ளார். (எஸ்)


**சிறு விளம்பரம்**

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கே.கே.எஸ். வீதியில் 2 1/4 பரப்புடன் 4 அறை மற்றும் சகல வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விலை 9 மில்லியன். தொடர்பு கொள்ள T.P. 0772474740. (R-015)

**கம்சன் ஹாட்வெயர்**

**(மொத்த விற்பனையாளர்கள்)**

**நேரடி இறக்குமதியாளர்கள்**

எம்மிடம்

- மின்சார உபகரணங்கள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- குளியலறைச் சாதனங்கள்
- விவசாய உபகரணங்கள்
- தச்சு வேலை உபகரணங்கள்
- மோட்டார் பொறியியல் உபகரணங்கள்
- ரைல்ஸ் கட்டிங்
- கதவுப் பூட்டுகள்
- ஆமைப்பூட்டுகள்
- வெல்டிங் உபகரணங்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- கதவு, யன்னல் பிற்றிங் பொருட்கள் மற்றும் இதர ஹாட்வெயர் பொருட்கள்



Tel : 011 243 5413
011 233 2834
Fax : 011 233 7353

235, பழைய சோனகத்தெரு, (Old Moor Street) கொழும்பு - 12

(ஆர்-013).



**ஜெய் குருதேவ்**
**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**
**அவர்களின்**

THE ART OF LIVING

நல்லாசியுடன் இந்தியா வாழும் கலை நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள வேத பண்டிதர்களும் சிவாச்சாரியார்களும் சேர்ந்து உலக அமைதிக்காக சிறப்பு யாகம் நடத்தவுள்ளனர்.

**இடம் : இந்து சமய பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம்**
**காலம்: 28-01-2011 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் : பிற்பகல் 3.45 மணி**

**வடமராட்சியில்**

**இடம் : தடங்கன் புளியடி, முருகன் கோயில் மண்டபம், நெல்லியடி.**
**காலம்: 29-01-2011 (சனிக்கிழமை)**
**நேரம் : மாலை 4.00 மணி**

அனைவரும் குடும்பத்துடன் கலந்துகொண்டு ஆசிபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொ. பே.இல.: 0770474757, 0777740593
0776622247, 0779492589

(சி-414)

அனுமதி இலவசம்


HUDEC

CARITAS

**கியூடெக் - கரித்தாஸ் யாழ்ப்பாணம்**

# கூறுவிலை கோரல்

கரித்தாஸ் - கியூடெக் யாழ்ப்பாணச் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அரை நிரந்தர வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் அமைப்பதற்குத் தேவையான கட்டடப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் வழங்கல்களுக்காக இதற்கென தயாரிக்கப்பட்ட கூறுவிலை கோரும் விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் 27-01-2011 வியாழக்கிழமை தொடக்கம் 02-02-2011 மாலை 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 03-02-2011 காலை 10.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக 'இயக்குநர் கரித்தாஸ் - கியூடெக் யாழ்ப்பாணம்' எனப் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்கவும்.

இக்கூறுவிலை விண்ணப்பங்கள் யாவும் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு தங்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டடப் பொருட்கள் வழங்கலுக்கான கூறுவிலை' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

விநியோகிக்க வேண்டிய இடம்

| பொருட்களின் விபரம் | யாழ்ப்பாணம் தொகை | கரியாலை நாகபடுவான் முழங்காவில் கிளிநொச்சி மாவட்டம் தொகை | ஒட்டிசுட்டான் முல்லைதீவு மாவட்டம் தொகை |
|---|---|---|---|
| சீமெந்து | 2000 பாக் | 2120 பாக் | 2120 பாக் |
| சல்லி ¾" | 15 கியூப் | 16 கியூப் | 16 கியூப் |
| கண்ட கல் 6" X 9" | 70 கியூப் | 74.2 கியூப் | 74.2 கியூப் |
| கண்ட கல் 4" | 25 கியூப் | 26.5 கியூப் | 26.5 கியூப் |
| முறுக்குக் கம்பி (1/2") | 300 தனி | 318 தனி | 318 தனி |
| முறுக்குக் கம்பி (3/8") | 300 தனி | 318 தனி | 318 தனி |
| மென்இரும்பு (1/4") | 3000 தனி | 3180 தனி | 3180 தனி |
| சொலிக்கனம் | 250 லீற்றர் | 265 லீற்றர் | 265 லீற்றர் |
| வயர் நூல் | 50 கிலோ | 53 கிலோ | 53 கிலோ |
| கம்பி ஆணி (1", 2", 3") | 175 கிலோ | 185.5 கிலோ | 185.5 கிலோ |
| ட.கொழுக்கிகள் | 2000 கிலோ | 2120 கிலோ | 2120 கிலோ |
| குடை ஆணி + நட் | 550 கிலோ | 583 கிலோ | 583 கிலோ |
| சிங் அலுமினிய கூரை தகடுகள் | 800 தனி | 848 தனி | 848 தனி |
| அஸ்பெஸ்ரா கூரை தகடுகள் | 100 தனி | 106 தனி | 106 தனி |
| முகட்டுத் தகரம் | 1000 அடி | 1060 அடி | 1060 அடி |
| சுவர் தீராந்தி (3"X5" -15') | 150 தனி | 159 தனி | 159 தனி |
| சுவர் தீராந்தி (3"X5" -10') | 200 தனி | 212 தனி | 212 தனி |
| தீராந்தி (4" X 3"- 5') | 150 தனி | 159 தனி | 159 தனி |
| கை மரம் (2" X 3"- 10') | 1100 தனி | 1166 தனி | 1166 தனி |
| கை மரம் (2" X 3"- 8') | 100 தனி | 106 தனி | 106 தனி |
| சிலாகை (2" X 1") | 8000 அடி | 8480 அடி | 8480 அடி |
| சிலாகை (2" X 2") | 8000 அடி | 8480 அடி | 8480 அடி |
| கிடுகுகள் | 7500 தனி | 7950 தனி | 7950 தனி |

**அருட்பணி J.X. பேணாட் றெக்னோ**

இயக்குநர்,
கரித்தாஸ் - கியூடெக்,
14, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-413)

## பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சைவப்புலவர் செ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவன் த. ராஜ்குமார் பிரதமவிருந்தினராகவும், பழைய மாணவன் சி. பாலசுந்தரம், ஈவினை கிராம அலுவலர் ப. மயூரன், ஈவினை சமுர்த்தி உத்தியோகத்தர் க. சிவரூபன், ஈவினை பொதுச் சுகாதார பரிசோதகர் யோ. சகுந்தன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப. சீவரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசி உரையை சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

# பயங்கரவாதத்தை வென்ற அனுபவம்; சர்வதேச நாடுகளுக்குப் பயிற்சிப்பட்டறை

(கொழும்பு)

நாட்டில் முப்பது வருடமாக நிலவி வந்து பயங்கரவாதத்தை வெற்றிகொண்ட வழிவகைகள் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றி இலங்கை இராணுவத்தினரின் அனுபவப் பகிர்வினைக் கொண்ட சர்வதேச பயிற்சிப் பட்டறை இந்த ஆண்டு மே மாதம் தொடக்கம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கொழும்பில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இராணுவத் தளபதி இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

மே மாதம் 31ஆம் திகதி முதல ஆரம்பமாகவுள்ள இந்தக் கருத்தரங்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது. முதலாவது கருத்தரங்கு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் வெற்றிகண்ட இலங்கை இராணுவத்தினரின் அனுபவங்கள் அதன்போது ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும் சுமார் 54 நாடுகளைச் சேர்ந்த அரசாங்க பிரதிநிதிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் குறித்த கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள் என்றும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் இந்தியாவிலிருந்து முப்பது பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கருத்தரங்கத்துடன் இணைந்ததாக இராணுவத்தினரின் கண்காட்சியொன்றும் இடம்பெறவுள்ளதுடன், அதனை இணையத்தில் நேரடியாக ஒளிபரப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தா

## விளையாட்டுப்போட்டி

(காரைநகர்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.00 மணியளவில் கல்லூரி அதிபர் தி. சோமசேகரம் தலைமையில் சிரேஷ்ட பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக காரைநகர் கல்விக் கோட்ட அதிகாரி பு. விக்கேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (50)

## பிற்போடப்பட்டது

(கிளிநொச்சி)

யாழ். மாவட்டச் செயலகத்தில் நாளை நடைபெறவிருந்த புத்தசாதன நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய மத அலுவல்கள் மற்றும் ஆன்மீக வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெற மாட்டதென கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# ஹெரோயின் விற்பனை செய்த இலங்கையருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

டுபாயில் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு போதைப் பொருள் விற்பனை செய்தமைக்காக இலங்கையர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது. இவருக்கு உடந்தையாக செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மூவரையும் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

பெண் பொலிஸார் ஒருவர் சந்தேக நபரிடம் போதைப் பொருள் (ஹெரோயின்) வாங்குபவர் போன்று நடித்து 1700 டினார் கொடுத்து போதைப் பொருளினை வாங்கியவேளை பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இசைவிழா

(கொழும்பு)

நோர்வேயின் அனுசரணையுடன் யாழ்ப்பாண இசை விழா 2011 எனும் தொனிப் பொருளில் கலாசார ரீதியிலான நட்புறவுக் கலைகளின் கொண்டாட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

# புதிய கட்டடத் தொகுதியிலும் துவிச்சக்கரவண்டித் திருட்டு

(தொல்புரம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் அண்மைக் காலமாக துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகம் முன்னைய கட்டடத் தொகுதியில் இயங்கிய காலப்பகுதியிலும், தற்போது புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட போதும்கூட அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் துவிச்சக்கர வண்டிகள் தொடர்ந்தும் திருட்டுப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினமும் தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பிரதேச செயலகம் வந்த இளம் யுவதி ஒருவரின் துவிச்சக்கரவண்டியை, பிரதேச செயலகத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் பலர் பார்த்துக் கொண்டிருக்க நாகரிக உடையில் வந்த இளைஞர் ஒருவர், மேற்படி யுவதியின் துவிச்சக்கரவண்டி பூட்டை உடைத்துச் திருடிச் சென்றுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் பல தொடர்ச்சியாக பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்று வருவதால், இவற்றைத் தடுக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (26)

# ஊடகவியலாளர் விசாரணை மந்தகதியில்

## மனித உரிமை கண்காணிப்பகம் கவலை

(கொழும்பு)

லங்கா ஈநியூஸ் இணையப் பத்திரிகை ஆசிரியர் காணாமற்போனமை தொடர்பாக முழுமையான விசாரணைகளை இலங்கைப் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் தனது கடமைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் ஊடகவியலாளர் பிரகீத் கடத்தப்பட்டு காணாமற்போயிருந்தார். ஒரு வருடமாகிய நிலையில் இவர் தொடர்பான விசாரணைகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை.

ஊடகவியலாளர் பிரகீத் தனது கருத்துப்படங்களில் இலங்கை அரசினைக் கடுமையாக விமர்சித்து வந்தவர். இவரின் இக்கருத்துப் படங்கள் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் ஆதரவுப் பத்திரிகையான லங்கா ஈ நியுஸில் வெளியிடப்பட்டு வந்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் காணாமற்போன பிரகீத் எக்னலிகொடவின் கடத்தல் சம்பவமானது ராஜபக்ஷ அரசுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைப்போர் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கடத்தல், தாக்குதல் மற்றும் படுகொலை போன்ற வன்முறைச் சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இடம்பெற்றுள்ளது.

ஊடகவிலாளர் மீதான இது போன்ற தாக்குதல் வன்முறைச் சம்பவங்களுக்கு இலங்கையில் நீண்ட வரலாறுண்டு. சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியரும் பிரபல ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமசிங்க கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி ஒன்பதாம் திகதி கொழும்பு நகரில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இப்படுகொலை மீதான விசாரணை எவ்வித முடிவையும் எட்டவில்லை.

2009 ஜனவரியில் இலங்கையின் பிரபல தனியார் தொலைக் காட்சியான சிரஸ மீது 15 இற்கும் மேற்பட்ட முகமூடியணிந்த மனிதர்களால் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இதே காலப்பகுதியில் சிங்கள வார இதழான ரிவிரவின் ஆசிரியரான உபாலி தென்னக்கோன்



மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. யூன் 2009ஆம் ஆண்டு ஊடகவியலாளர் போடல ஜயந்த மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் முடிந்து சில நாட்களின் பின்னர், பல ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதுடன் ஒரு வெளிநாட்டு ஊடகவியலாளர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

இலங்கையின் பல ஊடகவியலாளர்கள் இவ்வாறான தாக்குதல் சம்பவங்களினாலும் உயிர் ஆபத்துக்களாலும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் சர்வதேச மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சட்டவிரோத மின்சாரம் பகலிலும் தொடர்கிறது

(தும்பளை)

நெல்லியடிப் பகுதிகளில் கட்டவிரோத மின்சார பாவனையாளர்களால், சட்டரீதியாக மின்சாரம் பெறுபவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெல்லியடி வதிரிச் சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தினர் இரவு, பகலாக சட்டவிரோத மின் இணைப்பின் மூலம் மின்னொளி பெற்று வருகின்றனர்.

இரவு நேரங்களில் கள்ளக் கரண்ட் பாவனை தொடரும் வேளையில், பட்டப்பகலிலும் மின் விநியோக மார்க்கத்தில் வயர்கள் கொழுவியிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருப்பதாகவும் மின்பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் கேள்வி எழுப்புகின்றனர். (62)

### தமிழரசுக் கட்சியின்....

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இடதுசாரி முன்னணியுடன் நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் இன்னமும் நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகியவற்றை சேர்த்துக் கொண்டதுடன் எம்மை நிராகரித்தது. இதனால் நவசமாஜக் கட்சியின் சார்பில் அவர்களின் மேசை சின்னத்தில் போட்டியிடும் தீர்மானத்தில் நாம் இருந்தோம்.

இந்த சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பின் அழைப்பு எமக்குக் கிடைத்திருக்கின்றது எனவே தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்குக் கிடைத்துள்ள நல்ல தொரு சந்தர்ப்பத்தை நாம் தவறவிடத்தயாராக இல்லை.

எனவே கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடத் தயாராகியுள்ளோம். இதே வேளை நவசமாஜக்கட்சி சார்பில் நாம் போட்டியிடுவதற்காக திருகோணமலையில் சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருக்கின்றோம் அவற்றை நாம் விலக்கிக் கொள்கின்றோம் அதேநேரம் யாழ்ப்பாணத்திலும் நாளை (இன்று) நவசமாஜக் கட்சியின் சார்பில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இருந்தோம் இதையும் நாங்கள் விலக்கிக் கொள்கின்றோம் நவசமாஜக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்திருந்த சகல பிரதேச சபைகளில் இருந்தும் நாம் விலகிக் கொள்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### பொதுஜன ஐக்கிய....

(சிங்கள) பிரதேச சபை ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும்,

வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபை தவிர்ந்த வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை, வெண்கலசெட்டிகுள பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய மூன்று சபைகளுக்கும் தமிழரசுக் கட்சியும், வெண்கல செட்டிகுள பிரதேச சபைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. இதேவேளை எட்டு சுயேட்சைக் குழுக்கள், தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை நேற்று செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

### நல்லிணக்க ஆணைக்....

சந்திரிகா இது தொடர்பாக தான் ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவின் இந்த சாதகமான பதில் அவர் விரைவில் சாட்சியமளிக்க வருவார் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தரப்பிலிருந்து எந்த பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் லக்ஸ்மன் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு நாட்டின் பல பகுதிகளிலும் தமது அமர்வை நடாத்தி சாட்சியங்களை பெற்றுவருகின்றது. கொழும்பில் நடைபெறும் அமர்வு களில் அரசியல்வாதிகள், இராஜ தந்திரிகள், மதத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் சாட்சியமளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நிறைவடையவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

### கொழும்பிலும், யாழிலும்...

தூதுவராலயத்திலும் நேற்று காலை 9.00 மணிக்கு இந்திய துணைத்தூதரக பிரதிநிதி வி. மகாலிங்கம் இந்தியாவின் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து குடியரசுத்தினச் செய்தி வாசிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தூதரக அதிகாரிகள், ஊழியர்கள், எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டோரை திருப்பியனுப்ப சுவிற்சர்லாந்து அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சுவிற்சர்லாந்துக்கு சென்று அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சுவிற்சர்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சுவிற்சர்லாந்தின் புலம்பெயர்ந்தோருக்கான சமஷ்டிப் பணியகம் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. தற்போது இலங்கையில் அமைதி நிலைமைகள் தோன்றியுள்ளன.

எனவே வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து சென்று சுவிற்சர்லாந்தில் அடைக்கலம் கோரி அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர்.

இதன்போது வன்னிப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

எதிர்வரும் ஜுன் மாதம் தொடக்கம் புலம்பெயர்ந்தோருக்கான பணியகம் அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட அகதிகளின விண்ணப்பங்களை தனித்தனியாக பரிசீலனை செய்யவுள்ளது. அதன் அடிப்படையில் அவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையை சேர்ந்த 2200 பேர் அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து அங்கு தங்கியிருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் திருப்பியனுப்பப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் சுவிற்சர்லாந்தின் புலம்பெயர்ந்தோருக்கான சமஷ்டிப் பணியகம் தெரிவித்துள்ளது.

## பிரதான அரசியல்...

செய்துள்ளது. ஜே.வி.பி.யின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு குடாநாட்டில் உள்ள அனைத்து நகர சபைகளுக்கும் மற்றும் பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்கின்றது. அதேவேளை தமிழ்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் மற்றும் சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகிய இணைந்து வேட்பு மனுக்களை இன்று தாக்கல் செய்யவுள்ளன.

## பொலிஸார்....

எனினும் குற்றவாளி தந்திரமாக தப்பியோடியுள்ளதாகவும், தப்பியோடிய குற்றவாளியைக் கைது செய்வதற்காக கல்கிசை பிரதேசமெங்கும் விசேட சோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஹெலியை சுட்டு வீழ்த்த முயன்ற புலி உறுப்பினரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலியை சுட்டுவீழ்த்த முயன்ற புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கு அவருக்கெதிரான விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குழந்தைவேலு சிறிரங்கன் எனும் பெயர் கொண்ட பிரஸ்தாப புலி உறுப்பினர் வவுனியாவில் வைத்து பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் 2000 ஆம் வருடம் திருகோணமலையின் உப்பாறு பிரதேசத்தில் எம்.ஐ. 24 ஹெலி ஒன்றின் மீது ஏவுகணையொன்றைச் செலுத்தி அதனைச் சுட்டு வீழ்த்தும் முயற்சியை மேற்கொண்டவர் என்று தெரியவந்துள்ளது.

அத்துடன் பூநகரியில் அமைந்திருந்த இராணுவ கட்டளைத் தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் அவர் சம்பந்தப்பட்டிருப்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் கோடிக்கணக்கான பெறுமதி கொண்ட சொத்துக்களை சேதப்படுத்த அவர் பங்களித்திருந்ததாக பொலிசார் நீதிமன்றில் குற்றம் சுமத்தியிருந்தனர். இதனைக் கவனத்திற் கொண்ட நீதவான், விசாரணைகள் பூர்த்தியடையும் வரை குறித்த புலி உறுப்பினரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஊடகவியலாளருக்கு...

இப்புதிய அடையாள அட்டை மூலம் முறைகேடுகள் இடம்பெறுவதை தடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அத்துடன் இதன்மூலம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு தமது தேவைகளை இலகுவாக செய்து கொள்ளமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# அனுருத்த ரத்வத்தவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு எதிரான வழக்கு விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. சொத்துக்களை சேர்த்த விதம் பற்றி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு விளக்கமளிக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் இவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு மேல் நீதிமன்றுக்கு வந்தபோது அனுருத்த ரத்வத்தவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி றென்ஸி அரசகுலரத்ன ஏற்கனவே நீதிமன்றில் எழுத்து மூலம் சகலதும் வழங்கப்பட்டுள்ளது என்றார். உயர் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து வழக்கு விசாரணை பெப்ரவரி 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## உள்ளூராட்சித் தேர்தல் நீதியான...

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே இதனை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாட்டில் இயங்கு சக்திகளாக இருப்பவர்கள் அரச அதிகாரிகளே என்பதுடன், அரசினது திட்டங்களைச் செயற்படுத்தி வருபவர்களும் அவர்களே. அத்துடன் பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு அரச அதிகாரிகளும் மக்களுக்கு நல்வழியைக் காட்டும் அதேவேளை நல்வழிகாட்டியின் முன்னோடிகளாகவும் விளங்க வேண்டும்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

இந்த நாட்டில் தற்போது நீடித்த நிலையான சமதானத்தை ஏற்படுத்தித் தந்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றி சொல்லும் அதேவேளை, பொதுமக்களுக்கு இயல்பு வாழ்வில் பாதகமான சூழ்நிலைகள் களையப்பட்டு சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படும்.

இவ்வாறான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகவே சூரியப் பொங்கல் விழாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டதாகவும் இதன் மூலம் குடாநாட்டு மக்களது தேவைகள் கோரிக்கைகள் தொடர்பாக அவரிடம் எடுத்துரைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் குடாநாட்டில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டிய அமைச்சர் அவர்கள் அச் சம்பவங்கள் தொடர்பாக அவ்வப்போது வெளியான பத்திரிகைச் செய்திகள் தொடர்பிலும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக உண்மை குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்றும் அத்துடன் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் நீதியான முறையில் வன்முறையற்ற விதத்தில் அமைதியாக நடைபெறவேண்டும் எனவும், அதற்கு சகல தரப்பினரும் தமது ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), முருகேசு சந்திரகுமார் (அசோக்), யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் யாழ்.மாநகர மேஜர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.




யாழ்.மாவட்ட மக்களுக்கு
ஷாலோம்
SHALOM
SEC
SHALOM வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரைறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (C/411)
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.
தொலைபேசி : 0217901798 - 0771044861

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.